சிறுகதை மாதஇதழ்

# மஞ்சரி

22

ஆசிரியர்: மு.தயாளன்

இதழ் 22 வைகாசி 2022 £4.00



வளர்ந்த - வளரும் படைப்பாளிகளுக்கான களம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பங்காளர்கள்



தீபதிலகை
பக்கம் 3
இலண்டன்



சியாமளா யோகேஸ்வரன்
பக்கம் 6
அவுஸ்திரேலியா



ந.ஜெயருபலிங்கம்
பக்கம் 11
இலண்டன்



சிவரமணி
பக்கம் 16
இலங்கை



கிருஸ்ணவேணி
பக்கம் 23
இலங்கை



கமலினி கதிர்
பக்கம் 27
சுவிஸ்



சின்னராசா உதயகுமார்
பக்கம் 29
இலங்கை



ராஜேந்திரன் ஜீத் ஹம்சன்
பக்கம் 35
இலங்கை



தர்சித்
பக்கம் 37
இலங்கை




பேராசிரியர் யோகராசா
பக்கம் 39
இலங்கை


20 % கழிவு

## SKM BOOKS FOR SALE


20 % கழிவு


































Srilanka 300Rs India 400 Rs
London £5 Can/Ame $10
Europe 10 Euro

**இலங்கையில் உள்ளவர்கள்**
Commercial bank Account No: 8370042817
**மற்றைய நாடுகளில் உள்ளவர்கள்** உங்கள் விருப்பத்தை skmbooks50@gmail.com இற்கு அனுப்பினால் payment link அனுப்பி வைக்கப்படும்


**வாசிப்பதனால் மனிதன் பூரண மனிதனாகிறான்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பொறியில் விழுவரோ தமிழர்?

இலங்கை இன்று கடுமையான பொருளாதார நெருக்கடியில் சிக்கிக் கொண்டுள்ளது. மக்கள் தாமாகவே அரசுக்கெதிரான போராட்டத்திற்காக வீதிக்கு வந்துள்ளனர் என்று பரவலாகப் பேசப்படுகிறது. அதுவும் தமிழர் பிரச்சினைபற்றி அவர்கள் தாங்களாகவே கோசங்கள் எழுப்புகிறார்கள் என்றும் கூறப்படுகின்றது.

இந்தப் பொறியினைத் தமிழர்தரப்பு நன்கு அவதானத்துடன் புரிந்து கொள்வதே நன்று. மக்கள் தாமாகவே வந்தார்கள் என்பது ஏற்றுக்கொள்ள முடியாது என்பதுவே யதார்த்தம். அவர்களின் பின்புலத்தில் தவிச்ச முயல்பிடிக்கும் அரசியலாளர்கள் இயங்குகிறார்கள் என்பதுவே உண்மை. மக்களின் துன்பமான நிலைமையை அவதானித்து மிகக் கெட்டிக் காரத்தனமாகவே போட்ட திட்டமே இது.

இன்றைய இலங்கையின் இந்த நிலைக்கு இனப்பிரச்சினையைத் தீர்க்காது தங்கள் சுயநல அரசியல் லாபங்களுக்காக நீண்டகாலம் நிகழ்த்தப்பட்ட யுத்தமும் பாதுகாப்புச் செல வினங்களுக்காக ஒதுக்கப்பட்ட மிகப் பெரிய தொகையுமே காரணம் என்ற உண்மைக் காரணத்தை மக்களிடமிருந்து மறைத்து அரசியல்வாதிகளின் ஊழலும் அரசாங்கத்தின் மட்டமான இயங்குதிறனுமே காரணம் என்று முன்வைக்கப்படுகிறது. இனப் பிரச்சினைபற்றி மக்கள் தெளிவடைந்துவிடக் கூடாது என்பதிலே பின்னணி அரசியல்வாதிகள் தெளிவாகச் செயற்படுகிறார்கள் என்பது தெளிவாகத் தெரிகிறது.

அரசாங்கத்தின் இயங்குதிறன் மிகமிக அடிமட்டத்திலேதான் இருக்கின்றது என்பதும் மறுக்க முடியாத உண்மைதான். தமிழ்த்தலைமைகள் சரியான வழியில் கால் எடுத்து வைக்காவிட்டால் மீண்டும் எங்களது பிரச்சினை இலங்கையின் சிங்கக் கொடிக்குள் சுருட்டி வைக்கப்பட்டுவிடும்.

அதிபர் கோத்தபாயவை வெளியேறச் சொல்பவர்கள் மாற்றுத் திட்டத்தை முன்வைக்காமல் 2024 ஆம் ஆண்டு நடைபெறவுள்ள தேர்தலை நோக்கி மெதுவாக நகர்வது அப்பட்டமாகப் புரிகிறது.

முதலாளித்துவ அரசுகள் காலத்திற்குக் காலம் தங்கள் சுயதேவைகளுக்காக மக்களைப் பகடைக் காய்களாகப் பயன்படுத்துவது சரித்திரம் சொல்லும் செய்தியாகும். இங்கும் அதுதான் நடைபெறுகின்றது. இங்கு ஒரேயொரு வித்தியாசம்தான். மக்கள் கடினமான வாழ்வை எதிர் கொண்டுள்ளார்கள் என்பதே உண்மை. முப்பதுவருடமாக நடந்த யுத்தத்தினால் பெற்ற வெற்றியைப்பற்றி மக்களுக்குக் கூறினார்களேயொழிய அந்த யுத்தத்தினால் நாடு பெற்ற கடன் தொகைகளைப்பற்றி யாரும் அவர்களுக்குக் கூறவில்லை. அந்தக் கடன் தொகைகள்தான் இலங்கையின் கழுத்தை நெரிக்கின்றன என்ற உண்மையை மக்களுக்கு இன்னமும் தெரிவிக்காமல் இருக்கிறார்கள். இதனைத் தெரிவித்தால் தாங்கள் நிகழ்த்திய தமிழர்களுக்கு எதிரான யுத்தம் தவறு என்ற உண்மையை மக்கள் புரிந்துவிடுவார்கள் என்று பயப்படுகிறார்கள் என்றே நினைக்கிறேன். தமிழர்களைப் பொறுத்தவரையில் இக்காலம் பேரம் பேச வேண்டிய காலமே. பயன்படுத்துவது சாலச் சிறந்தது.

**மு.தயாளன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளே...............


1 பொறியில் விழுவரோ தமிழர்?
ஆசிரிய தலையங்கம்

2 உள்ளடக்கம்

3 கருமுட்டை வியாபாரம்
தீபதிலகை

6 வரமொன்று தாராயோ
சியாமளா யோகேஸ்வரன்

11 ஏழாமிடத்தில் செவ்வாய்
ந. ஜெயரூபலிங்கம்

16 விருந்தாளி
சிவரமணி

19 கரும்பலகை - தொடர்கதை
மு.தயாளன்

23 பழையன கழிதல்
கிருஷ்ணவேணி

27 வாழ்க்கை வாழ்வதற்கே
கமலினி கதிர்

29 புதுக்காட்டுச்...........
சின்னராசா உதயகுமார்

35 மாற்றுப்புறம்
ராஜேந்திரன் ஜீத் ஹம்ஷன்

37 அப்பாயி
தர்சித்

39 மஞ்சரி 21 ஒரு பார்வை
பேராசிரியர் செ. யோகராசா

40 சிறுகதை எழுதுவது எப்படி....
மு.தயாளன்


**சிறுகதை மஞ்சரி 21 இன் சிறந்த மூன்று சிறுகதைகள்**

1. அன்பைத்தேடி - குருசதாசிவம்
2. பிள்ளைவரம் - ரஜித்தா
3. வியாகுலத்தாய் - பிரசாந்தி ஜெயபாலன்

மஞ்சரியின் 25 ஆவது இதழ்(புரட்டாதி) நந்தினிசேவியர் சிறப்பிதழாக வெளிவருகிறது. அவர் சம்பந்தப்பட்ட விடயங்கள் வரவேற்கப்படுகின்றன.


**அட்டைப்பட விளக்கம் 22 ஆம் பக்கத்தில் தரப்பட்டுள்ளது.**



**நன்றிக்குரியவர்கள்:**
திருமதி ஆர்த்தி துவாரகன் , திருமதி சாரு நற்குணதயாளன், திரு ரமணன் நற்குணதயாளன் ,செல்வி சரண்யா தனபாலசிங்கம், திரு வி. மைக்கல் கொலின், செ. யோகராசா, வணசிங்க அச்சகத்தினர், ஓவியர் கைலாசநாதன் ஓவியை கோகிலா டயாளினி


**1000 பேரை இணைப்போம்......**

தாய்மண்ணில் உள்ள பாடசாலைகளுக்கு மஞ்சரியை அனுப்புவதற்கு புலம்பெயர் மண்ணிலுள்ளவர்கள் பங்கு பெறலாம்.

லண்டன்: ஒரு பாடசாலை ஒருவருடம் **£5.00**
ஐரோப்பா: ஒரு பாடசாலை ஒரு வருடம் **6 Euro**
மற்றைய நாடுகள்: ஒரு பாடசாலை ஒரு வருடம் **$10**


**அட்டை வடிவமைப்பு:** ரமணன் நற்குணதயாளன்
**அட்டைப்படம் :** R. கோகிலா டயாளினி
**ஓவியர்கள்:** G. கைலாசநாதன் , R. கோகிலா டயாளினி

**முதன்மை ஆசிரியர்**
மு. தயாளன்
**உதவி ஆசிரியர்கள்**
வி.மைக்கல் கொலின், செல்வி த. சரண்யா, திருமதி சாரு தயாளன்
**ஒப்பு நோக்காளர்கள்:**
திருமதி ஆர்த்தி துவாரகன் , திருமதி சாரு தயாளன்
**ஆலோசகர்கள்**
Dr P.இராசையா, பேராசிரியர் செ.யோகராசா



**தொடர்பு முகவரி:**
**Sirukathai manjari, 14 Brands Road, Berkshire SL3 8QP,UK** sirukathai1@gmail.com, +447505455811
**Sirukathaimanjari 91, Barathi street, Trincomalee, Srilanka**
sirukathai1@gmail.com, +94765554649



**சந்தா விபரம்:**
**Srilanka:**900Rs/Year
Bank detail : Mrs Thanabalasingam, Commercial bank, Trinco branch, 8370042817
**England** £20/Year
**Den/Swiss/Ger:** 80Euro/year Can/USA/Amer: $120
Bank details: M. Natkunathayalan, Barclays, Sort code 20-37-15, A/C Number 60389307
IBAN : GB11BUKB20371560389307 SWIFTBIC BUKBGB22

**விநியோகம்:**
யாழ்ப்பாணம்: குலசிங்கம் வசீகரன் , +94 773788795
மட்டக்களப்பு: வி. மைக்கல் கொலின் +94 774338878
திருகோணமலை: த. சரண்யா, +94765554649
வவுனியா பண்டாரவன்னியன் புத்தகசாலை +94772244616





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கருமுட்டை

## வியாவாரம்

பார்வதிக்கு இருப்புக் கொள்ளவில்லை. காலையில் தன் மகன் பரந்தாமனோடு ஏதோ வாக்குவாதம் பண்ணும் போது ஏற்பட்ட கோபம் இன்னும் குறையவில்லை. சமையல் வேலையாக இருக்கும் போது புலனை அங்கு சரியாக நிறுத்த முடியாத படபடப்பு. எந்தக் கறிக்கு எது போட்டோம் என்ற கவலை இல்லாத சமையல். தன் உற்ற நண்பிகள் என்று நாலு பேர்கள், அவர்களுக்கு இவள் போன் செய்வதும் அவர்கள் இவளுக்கு போன் செய்வதும் என்று ஒரு கையில் செல்போன், மறுகையில் கறிக்கரண்டியுமாகப் பரிதவித்துக் கொண்டு இருந்தாள். கணவன் பரமசிவத்திற்கு அவள் போக்கு கேள்விக்குறியாக இருந்தாலும் அவன் எதுவும் பேசவில்லை.

கல்யாணம் ஆகி 45 வருடங்கள் இந்தா இந்தா என்று ஓடிவிட்டது. சண்டையில் சிலகாலம் சமாதானத்தில் சிலகாலம், ஊடலில் கொஞ்சம் பின் கூடலில் கொஞ்சம் என்று காலங்கள் கழித்த பின் பொறுமையான மௌனமான வாழ்வு என்பது அவருக்குச் சுகமாகி விட்டது. பிரச்சனைகள் எதுவாக இருந்தாலும் கடைசியாக முற்றுப்புள்ளி வைப்பதுவும் கணவன் பரமசிவம் தான். அவர் தொலைக்காட்சியில் அன்றைய நாட்டு நிலவரங்கள் என்ன என்பதில் கவனம் செலுத்திக் கொண்டு இருந்தாலும் அவர் கையில் இருக்கும் டிவி கொன்றோலில் இருக்கும் அவரது ஆள் காட்டி விரல் அப்பப்போ சேனல் மாற்றுவதும், சவுண்ட் கூட்டிக் குறைப்பதுவுமாக இருந்தது. அவருக்குள் இருந்த இன்னொரு பரமசிவம் மனைவி பார்வதியின் பிரச்சனை என்ன என்ற பிரேரணைக்காக காத்து இருந்தது.

மதியம் இரண்டு மணியாகியும் சமையல் முடிந்ததாகத் தெரியவில்லை. வழமையாக ஒரு மணிக்கெல்லாம் சாப்பாடு ரெடியாகி விடும். சாப்பாட்டுக்கு பத்து நிமிடங்களுக்கு முன் பரமசிவம் போடும் மருந்துகளோடும் குடிக்கும் இளம் சூட்டு தண்ணி ரம்பிலரோடும் பார்வதி வந்து பக்கத்தில் நிற்பாள். பரமசிவம் தானாக தன் மருந்தை எடுத்துக் கொள்ளும் இயல்பு இல்லாதவர் அல்ல இருப்பினும் மனைவி பக்கத்தில் இருந்து எடுத்துக்கொடுப்பதில்



இருவருக்கும் ஒரு திருப்தி. இது தான் அவர்களின் இத்தனை கால தாம்பத்திய வாழ்வின் இணைப்புக்குக் கயிறு. நண்பிகளுடன் பிரச்சனைகளைச் சொல்லியும் தன் குழப்பத்திற்கான எந்த தீர்வும் எட்ட முடியாத பார்வதி, பரந்தாமனின் மனைவி உஷா அவள்தான் பரமசிவம்-பார்வதி தம்பதிகளின் மூத்த மருமகள் அவளை வாய்க்கு வந்தபடி திட்டி கொண்டே சாப்பாட்டு மேசையில் சமைத்த உணவுகளை கொண்டு வந்து வைப்பதும் குசினிக்குள் போவதும் வருவதுமாக இருந்தாள். "சுடுதண்ணி எடுத்துக் கொண்டு வாரும்"என்ற பரமசிவத்தின் குரல் கேட்ட பின் தான் அவருக்கு இன்னும் மதியம் கொடுக்க வேண்டிய மருந்தை தான் இன்னும் கொடுக்கவில்லை என்ற பொறி மனதுக்குள் தட்ட தன் சோட்டியில் கையை துடைத்தபடி மருந்து டப்பாவை எடுத்துக்கொண்டு வந்து மேசையில் வைத்து விட்டு இளம் சுடு தண்ணீர் கொண்டு வர மீண்டும் குசினிக்குள் போனவள் ஏதோ பிரேமையில் அங்கேயே நின்று விட்டவளை "சுடுதண்ணி கொண்டு வாரும் மருந்து போட வேண்டும்" என்ற குரல் கேட்ட பின்புதான் சுயநினைவு திரும்பியவள் போல் வந்தாள். இனியும் பொறுமை வேண்டாம் என்று முடிவெடுத்த பரமசிவம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"என்ன பரந்தாமனோடு பிரச்சனையா" என்று கேட்டார். அவருக்கு தெரியும் தன் மனைவிக்கு மகனோடு பிரச்சனை இல்லை, அவன் மனைவி உஷாவோடுதான் என்பது. இருப்பினும் மருமகளின் பேரைக் குறிப்பிட்டு கேட்பது அநாகரீகம் என்று நினைத்தவர் மகனின் பேரைக் குறிப்பிட்டார். எது எப்படியோ விஷயம் என்ன என்று விளக்கத்துக்கு வரும்போது எல்லாம் தானாக வெளிவரும். மூத்த மருமகளை தன் மனைவி தன் மூத்த மகளாக தான் இதுவரை காலமும் கொண்டாடி வந்தாள். பார்வதி -பரமசிவம் தம்பதிகளுக்கு மூன்று ஆண் குழந்தைகளுக்கு பின் கடைசி மகளாய் வந்தவள் தான் அமுதா. அவளை எல்லோரும் செல்லமாக அம்மு குட்டி என்று அழைப்பார்கள். பிள்ளைகள் எல்லோருக்கும் விவாகமாகி விட்டது பரந்தாமனுக்கு ஐந்து குழந்தைகள், இரண்டாவது மகன் கோகுலனுக்கும் மூன்று குழந்தைகள், மூன்றாமவன் வாமனனுக்கும் கடைக்குட்டி அமுதாவுக்கும் இன்னும் பிள்ளைகள் இல்லை. எல்லாம் கடவுள் எப்போ தர நினைக்கிறாரோ அப்போதுதான் தருவார் என்று பார்வதி அடிக்கடி சொல்லிக்கொண்டே இருப்பாள். பார்வதி படிக்காதவள் அல்ல. சிறிது வசதியான குடும்பம். கோவில் திருவிழாக்களின் விரதம், வெள்ளிக்கிழமை விரதம், அதைவிட வியாழக்கிழமைகளில் உபவாசம் இருந்து இரவு நேரம் பால் பழம் சாப்பிடுவாள். அந்த நாள்தான் அவளின் இஷ்ட தெய்வமான கிருஷ்ணரின் திருநாள். அதனால்தான் அவள் தன் ஆண் குழந்தைகளுக்கு கிருஷ்ணரின் பெயர்களையே வைத்து இருக்கிறாள். தன் பிள்ளைகளின் பெயர்களைக் கூப்பிடும் போது சாட்ஷாத் அந்த கிருஷ்ணரே முன் வந்து நிற்பதாக உணர்வாள். அவளின் இந்த இறை பக்திக்கு பரமசிவம் குறுக்கே நிற்பதில்லை. அவர் ஒரு யதார்த்தவாதி.

கணவனின் முகத்தைப் பார்த்ததும் தன் பிரச்சனையைத் தன்னுள் தாக்குப்பிடிக்க முடியாமல் கண்களில் கோவம் தெறிக்க குரலில் வெறுப்பைக் கொட்டி

"இந்த உஷாவுக்கு மூளையில் ஏதோ கோளாறு .. எனக்கு ஒன்றும் புரியவில்லை. ஐந்து பிள்ளைகளுக்கு தாய். தன் கருமுட்டையை தானம் செய்யப் போகிறாளாம்."

"அதற்கு பரந்தாமன் என்ன சொன்னானாம்" குரலில் எந்தவிதமான பதட்டமும் இல்லாமல் பரமசிவம் கேட்டார். அவன் என்ன சொல்வான்? அவள் எது சொன்னாலும் அதை மறுத்து பேசும் சுதந்திரத்தை அவன் அவளை காதலிக்கும் போதே இழந்து விட்டான் என்று உங்களுக்குதெரியாதா? இப்ப என்ன புதிதாக சொல்லப்போகிறான். பரமசிவம் தன் உதட்டுக்குள் சிரித்துக்கொண்டார். அவன் காதலுக்கு முழுக்க முழுக்க பக்க பலமாக இருந்து உஷாவை மருமகளாகக் கொண்டு வந்தது பார்வதி தான். அன்று தொட்டு நேற்றுவரை எங்கள் வீட்டு மகாலட்சுமி என்றும் அவள் சொல்வது வேதவாக்கு என்றும் புகழ் பாடி அவளை வீட்டு மூத்த மகள் ஸ்தானத்தில் வைத்து கொண்டாடி அந்நியோன்யமாக இருந்த மாமியார்- மருமகள் உறவை இவள் சட்டென்று முறித்துக் கொள்கிறாள். கொதிப்பதும் பின் குளிர்வதும் பார்வதியின் குணம் என்பதை அவர் அறியாதது அல்ல. மருந்தோடு சுடுதண்ணீரையும் சேர்த்து முண்டி விழுங்கியபடி "சரி பிரச்சனை என்னவென்று சொன்னால் தானே விளங்கும் என்றவரை" நான் என்ன சிங்களத்திலா சொன்னனான் எரிந்து விழுந்தாள். "இல்லயப்பா காலமை பரந்தாமன் போன கையோட உமது டெலிபோன் ஒரே பிஸியாக இருந்தது. உமது நண்பிகளோடு ஆலோசனை மகாநாடு நடந்தது போல அதுதான் என்ன என்று கேட்டேன்"அவர் அவளை சீண்டி ஒரு கொதிநிலைக்கு கொண்டு போனால்தான் விபரங்கள் முழுவதையும் அறிந்தபின் குளிர்நிலைக்கு கொண்டு வந்து முழு விடயத்தையும் தெளிவுபடுத்த முடியும். எனவே அவளை கொந்தளிக்க விடவே அவளின் நண்பிகள் பற்றிக் கேட்டார்.

அவளுக்கு அன்றைய சீரியலில் என்ன நடந்தது என்பது முதல் நண்பிகள் தங்களின் உறவுகள், தாயகத்தில் வாழும் நண்பிகள், உறவினர்கள் மூலம் கிடைக்கும் செய்திகள் வதந்திகள் என்று எல்லாம் பரிமாறிக்கொள்ள ஆறுபேர் கொண்ட வாட்ஸஅப் குழு இருக்கிறது. அதில் இரகசியங்கள் பரமரகசியங்கள் எல்லாம் அலசி ஆராய்ந்து பின் அவை இறக்கைகள் கட்டப்பட்டு பல வடிவங்களில் பலரிடம் பகிரப்பட்டு இவர்களுக்கே புது செய்தியாகவும் வந்து சேரும். அவர்களிடம்தான் இந்த கருமுட்டை பிரச்சனை சொல்லப்படாது. பார்வதிக்கு இருந்த கோவமும் வெறுப்பும் அவளை குறைக்குடம் போல் தளம்பவிட்டது. அவளின் நண்பிகளின் பெயர்கள் பரமசிவத்துக்கும் தெரியும். அவர்களில் ஒருத்தியின் பெயரை சொல்லி தொடக்கி விட்டால் போதும் யார்யார் என்னென்ன சொன்னார்கள் என்பதை பார்வதியே சொல்லிவிடுவாள்.

"கலாவிடம் இது பற்றி சொன்னீரே, அவ என்ன சொன்னா?" அவள் காறிதுப்புறாள். மானமுள்ள பொம்பிள இப்படி செய்ய துணிவாளோ? தன்ர தங்கச்சி சுமதிக்கு டொக்டர் கெர்பப் பையில கட்டி இருக்கு அதை எடுக்க வேண்டும் என்று சொன்னதுக்கு அவளின்ர தாய் ஒரே அழுகையாம். கோயில் கோயிலாக நேத்தி வைத்திருக்கினமாம். சுமதியின்ர புருஷனுக்கும் ஒரே கவலையாம். கலகலப்பாக இருந்தவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்போ சிரிப்பை மறந்தவர்போல் இருக்கிறார். மீனாவின் தங்கச்சிக்கும் கெற்ப தடை செய்ததால் இப்ப நல்லா உடம்பு ஊதி முட்டு மூச்சாய் இருக்குதாம்.

"இராணிக்கு நீர் சொன்னனீரே அவ என்ன சொன்னா ?" பரமசிவம் எடுத்துக்கொடுத்தார்.

அதை கேட்டீங்க என்றால்....பார்வதி தொடர்ந்தாள், இராணியின்ர தங்கச்சிக்கு கலியாணம் ஆகி ஆறு வருஷம் முடிந்தும் இன்னும் பிள்ளை தங்க வில்லையாம். டொக்டரிடம் காட்டினவையளாம். அவளின்ர புருஷனுக்கு விந்து அணுவின் எண்ணிக்கை குறைபாடாம். அதனால அவை சேகரித்து வைத்து இருக்கும் வங்கியில் இருந்து வேறு ஒருவரின் விந்தணுவை எடுக்கலாம் என்று சொன்னாராம். அவள் வீட்டில எல்லோரும் பதறிப்போய் வேண்டாம் என்று சொல்லிவிட்டார்களாம். அது யாருடைய விந்து என்று ஒருவருக்கொருவர் தெரியாது என்று டொக்டர் சொன்னபோதும் அவள் புருஷன் வேண்டாம் என்று சொன்னாராம். அது எந்த சாதியினரின் விந்தோ தெரியாது என்று கோவமா பேசினாராம் அப்படி செய்தால் அதுவும் விபச்சாரம் என்று மாமியாரும் சொல்லி யிருக்கிறார். உம்முடைய மருமகள் உஷாவுக்கு காசில ஆசை வந்திட்டுதோ என்று பகிடி பண்ணுதுகள். கருமுட்டையும் விக்கலாமாம். ஆஸ்பத்திரியில் விக்கலாமாம். அதற்குத் தரகர்களும் இருக்கிறார்களாம் சுசீலா சொன்னாள். பார்வதிக்கு இந்த விபரங்களை சொல்லி முடிப்பதற்குள் வாங்கி விட்ட மூச்சில் இருந்து கோவமும் சற்று குறைந்தது போல் தென்பட்டது.

இவர்களின் சம்பாஷணை முடிவதற்குள் பரந்தாமனும் வந்து விட்டான். பார்வதிக்கோ மகனின் முகத்தைப் பார்க்கப் பிடிக்கவில்லை. தகப்பனையும் மகனையும் தனியே விட்டுவிட்டு குசினிக்குள் போய்விட்டாள். பரமசிவம் மகனிடம் விபரங்களை கேட்டுத் தெரிந்து கொண்டார். பார்வதிக்கு இவர்கள் என்ன பேசுகிறார்கள் என்பதையும் தெரிந்துகொள்ள வேண்டும். தான் கோவமா இருப்பதையும் மகனுக்கு தெரியப்படுத்த வேண்டும். குசினியை விட்டு வெளியே வந்தவள் எல்லாம் கலியுகம். முன்பே கிருஷ்ணர் சொல் லிவிட்டார். கலியுகத்தில் எல்லோரும் பொய் பேசு வார்கள். அரசர்கள் பாவிகளாக திருடர்களாக இருப்பார்கள். பெண்கள் கற்பு நெறி தவறியவர்களாக இருப்பார்கள். பிராமணர்கள் வேதத்தை விற்பார்கள். மழை பெய்வது நின்று விடும். பஞ்சம் பட்டினி தலைவிரித்தாடும் என்று சொல்லி இருக்கிறார். இது எல்லாம் கண்ணுக்கு முன்னே நடந்து கொண்டு தான் இருக்கு எல்லாம் என் தலை விதி என்று பெருமூச்சு விட்டாள். தாயின் கோவம் தணிந்த பின்பு வரலாம் பிரச்சனை என்ன என்பதை தகப்பனிடம் சொல்லிவிட்டான். இனி அவர் பார்த்துக்கொள்வார் என்ற நினைப்போடு பரந்தாமன் வெளியே போய்விட்டான். இதை அவள் எதிர்பார்க்கவில்லை. அவன் சாப்பிடாமல் போய்விட்டானே என்ற கவலையால் தாய் உள்ளம் தவித்தது. இதை உணர்ந்த பரமசிவம் அவளை கூப்பிட்டு தன் அருகேயுள்ள கதிரையில் இருக்க சொன்னார். தகப்பனும் மகனும் என்ன பேசினார்கள் அதை காது கொடுத்து கேட்கும் மனநிலைக்கு பார்வதியும் வந்துவிட்டாள்.

ஒருவரின் கருமுட்டையை இன்னொருவருக்கு மாற்றுவது இன்று கலியுகத்தில் வந்தது அல்ல. அது கிருஷ்ணர் வாழ்ந்த துவாபர யுகத்திலும் நடந்து இருக்கு. கம்சனின் கதை உனக்கு தெரியும். கம்சனுக்கு தேவகியின் குழந்தையால் உனக்கு மரணம் சம்பவிக்கும் என்று அசரீரி சொன்னதால் தேவகியும் வாசுதேவனும் சிறை வைக்கப் படுகிறார்கள். அவர்களுக்கு பிறந்த முதல் ஆறு குழந்தை களையும் கம்சன் கொன்று விடுகிறான். ஏழாவது முறையாக தேவகி தன் கருமுட்டையை வாசுதேவனின் முதல் மனைவி ரோகுணியின் வயிற்றுக்குள் மாற்றுகிறாள். அந்தக் கருதான் பலராமனாக பிறக்கிறான். இது புதிது அல்ல. உஷாவின் இந்த செயல் பெரும் புண்ணியம். கருமுட்டையை தானம் செய்ய எல்லோருக்கும் மனம் வருவதில்லை. கரு என்பது ஒவ்வொரு மாதமும் உருவாகி மாதவிடாய் காலத்தில் உடைந்து உதிரமாக வெளியேறும் என்பதும் உமக்கு தெரியும். அடுத்த விடயம் உம்முடைய மனதை உடைத்து விடும் என்பதால் பரந்தாமனும் உஷாவும் உமக்கு சொல்லவில்லை. எங்களுடைய அம்முவுக்கு கர்ப்பப்பையில் உருவாகும் கருக்கள் வீரியம் குறைந்தவை என்பதால் அவளால் குழந்தை பெற முடியாது. அதனால்தான் உஷா தன் கருவை அவளுக்குத் தானம் பண்ணுகிறாள். இதை கேட்டதும் பார்வதி அதிர்ச்சியில் உறைந்து விட்டாள் உஷா இப்பொழுது அவள் மனதில் தெய்வமாகவே மாறி கிருஷ்ணருக்கு அருகில் உட்கார்ந்து கொண்டாள்.

• • • •

குரு என்பவர் உடலல்ல. நான் என்பது மனம் அல்ல. ரமணர் உடம்பு அல்ல என்று பல முறை சொல்லிக் கொடுக்கப்பட்டிருந்தாலும் அவையெல்லாம் அந்தக் கணம் மேலே எழாமல் அவருடைய இழப்பு மட்டுமே பக்தர்களை உலுக்கிக் கொண்டிருந்தது.

- பாலகுமாரன்-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சியாமளா யோகேஸ்வரன்

# வரமொன்று தாராயோ

அன்று காலை நான்கு மணியளவிலேயே குணாவுக்கு நித்திரை கலைந்து போய் விட்டிருந்தது. ஒஸ்ரேலியாவில் குளிர்காலம் என்றால் மாலை ஐந்து மணிக்கு இருட்டி விடுவது மட்டுமல்லாமல் காலையில் வெயில் வருவதற்கே ஏழு மணியாகிவிடும். அந்தக் குளிர்காலத்தில் காலை ஏழுமணி வரை இழுத்துப் போர்த்துக் கொண்டு தூங்குவதே ஒரு சுகம். இதுவே கோடை காலம் என்றால்



நான்கு மணிக்கே தடித்த திரைச்சீலையையும் தாண்டிக் கொண்டு சூரிய வெளிச்சம் எட்டிப் பார்த்து குணாவை நலம் கேட்கும். வெளிச்சத்தைக் கண்டு விட்டால் குணாவின் தூக்கம் தொலைந்து விடும். இன்றும் அப்படித்தான்.

தூக்கம் கலைந்து விட, கண்களைத் திறந்து பார்த்தார். அயர்ந்த தூக்கத்தில் பக்கத்தில் ஒண்டிக் கொண்டிருந்த மனைவி சாரதாவின் முகத்தில் தெரிந்த குழந்தைத் தனத்தை சற்று நேரம் ரசித்தார். விழித்து விட்டால் அவள் முகத்தையே பார்ப்பதில்லை போன்ற ஒரு கர்வத்துடன் திரிபவரா யிற்றே. போர்வைக்குள் இருந்து மெல்லக் கால்களை எடுத்து வைத்து மனைவியின் தூக்கம் கலையாமல் கட்டிலில் இருந்து இறங்கினார். மெதுவே அடி வைத்துப் படுக்கை அறைக்கு வெளியே வந்ததும், பின்னாலேயே கதவைப் பூட்டிக் கொண்டார். இனிமேல் சத்தம் கேட்காது என்றெண்ணிக் கொண்டே பல்லைத் துலக்கி முகத்தைக் கழுவிக் கொண்டார். நேரத்துக்கு எழும்பி விட்டாரே தவிர, வீட்டு வேலை எதையும் செய்யமாட்டார். நாக்கு வரண்டாலும் இதுவரை தேநீர் கூட போட்டுக் குடித்த தில்லை. திருமணம் முடித்த காலத்திலிருந்து அவருக்கு ராஜயோகம் தான். அவரும் மனைவியும் வேலைக்குப் போன காலத்திலேயே, குணா எதற்கும் சமையலறைப் பக்கம் சென்றதில்லை.

இருக்கும் இடம் தேடி நேரத்துக்குச் சாப்பாடு, தேசிக்காய் தண்ணீர், தேநீர், கோப்பி என்று வந்து விடும். வேலைக்குப் போய் வந்த போதும் அவரை ஒரு குழந்தை போல் கவனித்துக் கொண்டவர் சாரதா. அதுக்காக குணா ஒன்றும் கைகளைக் கட்டிக் கொண்டு இருந்து விடுவ தில்லை. தோட்ட வேலைகள் என்றால் அவருக்கு மிகவும் பிடித்தம். குணாவின் அப்பா ஒரு கமக்காரர் என்பதில் சிறுவயதிலேயே தந்தைக்கு உதவியா யிருந்ததில் தோட்ட வேலைகளில் இயல்பாகவே அவருக்கு ஈடுபாடு வந்து விட்டிருந்தது. வேறு நாடுகளில் இருந்து விவசாயத்தைப் பாதிக்கக் கூடிய பீடைகள் ஒஸ்ரேலியாவுக்கு வந்து விடக் கூடாதென்பதற்காக ஒஸ்ரேலிய அரசாங்கம் விதைகளையோ அல்லது வேறு விதமான உயிர்ப்புள்ள தாவரப்பகுதிகளையோ நாட்டுக்குள் அனுமதிப்பதில்லை. மீறிக்கொண்டு வந்தால் பணத்தண்டம் அறவிடப்படும் என்று தெரிந்தி ருந்தும் குணா திருநெல்வேலிக் கீரை, முருங்கை, பலா விதைகளைச் சுங்கத்துக்குத் தெரியாமலேயே கொண்டு வந்து சேர்த்திருந்தார்.

அவற்றைப் பராமரிப்பதும், அதன் அறுவடைகளைத் தெரிந்தவர்களுக்குப் பகிர்ந்தளிப்பதும் அவருக்கு உவப்பா னதொன்று. அதுவும் அவர் வீட்டுப் பலாவின் தேன் சுவையில் சுருண்டு போனோர் பலர். எப்படி வந்தது என்ற ரகசியத்தை மட்டும் அவர் யாருடனும் பகிர்ந்து கொள்ளவில்லை. இப்போதும் மழைத்தண்ணீரைச் சேமித்து வைத்திருந்த கலனிலிருந்து தண்ணீரைத் திறந்து விட்டு பாத்திகளுக்கு பரிமாறினார். முடிந்ததும், அங்கங்கே முளை விட்டிருந்த களைகளைக் கொத்தி விட்டார். போட்டிருந்த பூட்ஸ் பூராவும் சேறும் சகதியுமாய் இருந்தது. ஆறுமணியாகி இருக்குமே, ஒரு கோப்பி குடித்தால் நன்றாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்குமே என்று தோன்றியது. எஸ். பி.பியின் லிங்காஷ்டகத்தை ஒலிக்க வைத்து விட்டு நிமிர்ந்தபோது கையில் கோப்பிக்கப்புடன் சாரதா வந்து கொண்டிருந்தார்.

“வாரும் மகாராணி, நல்ல நித்திரைச் சோமாறி, மனுசன் காலையில எழும்பி தோட்ட வேலை செய்யிறான், ஒரு கோப்பியையாவது குடுக்கலாம் என்று தோணேல்லை. ம்.... என்னைக் கவனிக்கத்தான் இங்க யாருமே இல்லையே! கணவன் வம்பு வளர்ப்பதற்காகச் சொல்வது சாரதாவுக்குத் தெரியாமல் இல்லை. ஆனாலும் கதைக்குக் கதை சொல்லாமல் விட்டால் எப்படித் தான் பொழுது போகும்?

“ஏனப்பா இப்பிடிப் புறட்டணியம் கதைக்கிறியள்? என்னமோ அசந்து போனன். எழுப்பியிருக்கலாம் தானே?”

“பின் தூங்கி முன் எழுவாள்” என்று கேள்விப்பட்டிருக்கிறீரோ?”

“உம்மை யாரோ நேரத்துக்குப் படுக்க வேண்டாம் என்று கையைப் பிடித்துத் தடுத்தது மாதிரிச் சொல்லுறீர்? கண்ட குப்பை நாடகங்கள் எல்லாத்தையும் கண் வெட்டாமல் பார்த்திட்டு நேரம் கழிச்சுப் படுத்தால் உப்பிடித்தான்.” சொல்லிக் கொண்டே விழுங்கிய சாரதாவின் கோப்பியின் சுவை நாக்கில் தொட்டு இதமாய் தொண்டைக்குள் இறங்கியது. என்ன இருந்தாலும் சாரதா எல்லாவற்றிலும் கெட்டிக்காரிதான். பாராட்டிக்கொண்டார். மனதுக்குள் மட்டும் தான்.

“உங்களுக்கு வாய். எழுபது வயசிலயும் அடங்கமாட்டன் எண்டு, இருபது வயசுப்பொடியள் மாதிரிக் காற்சட்டையையும் போட்டுக்கொண்டு இளமைக்குத் திரியுறியள். அண்டைக்கு முன்வீட்டு வெள்ளைக்கார மனிசி உங்களை என்ர தம்பியோ எண்டு கேட்குது.”

“பார்த்தியே, பார்த்தியே.. அவாவும் என்னை “சைட்” அடிக்கிறா போல இருக்குது. நான் இப்பவும் யங் தான். நீதான் கிழவியாயிட்டாய். என்ன செய்யுறது? எனக்கொரு பிள்ளையைப் பெத்துத் தந்திருந்தால் நானும் இப்ப பேரப்பிள்ளைகளோட விளையாடிக் கொண்டு, வயசான கிழவன் மாதிரி வீட்டுக்குள்ள இருந்திருப்பன்.” சொல்லி முடித்த பின்னர் தான் விளையாட்டுச்சண்டையின் போக்கில் சொல்லக் கூடாததைச் சொல்லி விட்டதை உணர்ந்து நாக்கைக் கடித்துக் கொண்டார்.

“நான் மலடுதான். என்னை ஏன் கல்யாணம் கட்டினனீங்கள். ஒரு பிள்ளையைப் பெத்துத் தர முடியாத பாவி நான்.” கண்களில் நீ கோர்த்து நிற்க சாரதா சொன்னவிதத்தில் குணா துடித்தே போனார்.

யார் இந்தக் குறையைச் சுட்டிக் காட்டினாலும் தாங்கிக் கொள்ளப் பழகி விட்ட சாரதாவுக்கு கணவன் அந்தக் குறையைச் சுட்டிக் காட்டி விட்டால் மட்டும் தாங்கிக் கொள்ள முடிவதில்லை. குறை யாரில் என்று தெரிந்து கொள்ளாவிடினும் அந்தக் காலத்துப் பெண்மணியாய் தன்னில் தான் குறை என்பது போல் சாரதா பேசிப் பேசியே அதைக் குணாவின் மனதிலும் பதியவைத்து விட்டார்.

“தெரியாமல் சொல்லிப் போட்டனப்பா, இங்க பாருமன்,” என்று சமாதானம் செய்தபடி சாரதாவின் நாடியைப் பிடித்து உயர்த்தி அவர் கண்ணுக்குள் பார்த்தார்.

“எங்களுக்கென்ன குறையப்பா, எனக்கு நீர், உமக்கு நான், இங்க பிள்ளையைப் பெற்றவர்கள் எல்லாரும் சந்தோசமாவே இருக்கினம்? பொடியள் ஆடுற ஆட்டத்தில வயசு போன காலத்திலயும் நிம்மதியா இருக்க முடியாமல் கஷ்டப்படுகினம் தெரியுமே?”

“எண்டாலும் நீங்கள் ஏன் அப்பிடிச் சொன்னனியள்? உள்ளுக்குள்ள இருக்குது தானே?”

“ஐயோ தெரியாமல் சொல்லிப் போட்டனப்பா, நான் உமக்கு என்ன குறை வைச்சிருக்கிறன்? ரைவிங் கூட நீர் பழகேல்லை. என்னை ஒரு டிரைவரா தானே வைச்சிருக்கிறீர். நான் எண்டைக்காவது அதைக் குறை சொல்லி இருக்கிறனே? என்ர ராசாத்தி தானே நீர்? எழும்பும். காலமைக்கு உப்புமா கிண்டுமன். சாப்பிடுவம். பசிக்குது.” மனைவியைத் திசை திருப்புவதற்காகச் சொல்லி விட்டாரே தவிர குணாவின் நெஞ்சம் குற்ற உணர்ச்சியால் தவித்தது. கணவன் சொல்கிறாரே என்பதற்காய் உப்புமா செய்து, மதியத்துக்கு பிரியாணி செய்து வகைவகையாய் பரிமாறினாலும் சாரதாவின் முகம் ஏனோ வாடித் தொங்கியே கிடந்தது. குணா கேட்ட கேள்விகளுக்கு வாயடிக்காமல் ஒற்றைச்சொல்லில் பதில் வரவும் குணாவுக்கு வேதனையாய் இருந்தது.

இரவு தொலைக்காட்சி கூடப் பார்க்காமல் முன்னறையின் இருட்டில் அமர்ந்திருந்த சாரதாவைக் கண்டதும் அதற்கு மேலும் அவரால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை.

“ஏனப்பா, இண்டைக்கு இவ்வளவு கூத்துக் காட்டுறீர், தெரியாமல் சொல்லிப் போட்டன், விடுமனப்பா.” குணாவின் கெஞ்சலான குரலுக்கு சாரதாவின் மௌனமே பதிலாயிற்று.

“இஞ்சரப்பா, எனக்கு எண்டு இருக்கிறது நீர் ஒருத்தி தான், நீரும் இப்பிடிச் செய்தால் நான் யாரிட்டப் போய் அழுவன்?” குணாவின் குரலில் ஒரு கலங்கல் எட்டிப் பார்த்தது.

“இப்ப எவ்வளவு காலமா பிள்ளையில்லை எண்ட குறையோட வாழ்ந்திட்டம், இண்டைக்கேன் புதினமா அப்பிடிச் சொன்னியள்?” சாரதாவின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குரல் வெதும்பி வெதும்பியே உடைந்து போயிருந்தது.
"இஞ்சரப்பா. பிள்ளையில்லை எண்ட குறையைத் தவிர கடவுள் எனக்கு ஒரு குறையும் வைக்கேல்லை. என்னை ராசா மாதிரிப் பார்த்துக் கொள்ளுற உம்மைக் கடவுள் தந்திருக்கிறார். அதை விட வேற எதுவும் எனக்கு வேண்டாம். நீர் மட்டும் போதும்."
"உண்மையோ அப்பா." சாரதாவின் குரலில் இப்போது ஒரு துள்ளல்.
"சத்தியமா. கடைசி வரைக்கும் நீர் என்னோட இருந்து என்னை முன்னால அனுப்பிப் போட்டு ஆறுதலா வாரும். நீர் இல்லாத உலகத்தை என்னால கற்பனை கூடப் பண்ணிப் பார்க்க முடியேல்லை." குணா சொல்லி முடிக்க முன்னர் சாரதா பாய்ந்து சென்று குணாவின் வாயை மூடினார்.
"அப்பிடிச் சொல்லாதேங்கோ, உங்களுக்கு முன்னால நான் போயிடோணும். கடவுள் நான் கேட்ட பிள்ளை வரத்தைத் தான் தரேல்லை, இதைக் கட்டாயம் தருவார்." உடைந்து போய் சாரதா குணாவின் மடியில் தலை புதைத்துக்கொண்டு அழுதார்.
"பார்க்கலாமா, உன் பக்தி பெரிதா? என் பக்தி பெரிதா என்று?" குணா கேட்டதும், சாரதாவும் சிலிர்ந்துக்கொண்டே "பார்க்கலாம், பார்க்கலாம். சாமியே கும்பிடாத உங்கட சொல்லைக் கேட்கிறாரா, அல்லது ஒவ்வொரு நாளும் பூ வைச்சு விளக்கேற்றிக் கும்பிடுற பக்தை என் சொல்லைக் கேட்கிறாரா என்று பார்க்கலாம்" வழமையான சாரதா திரும்பி விட்டதை அறிந்து மேற்கொண்டு பேச்சை வளர்க்காமல் குணா அடங்கி விட்டார்.

மடியில் படுத்திருந்த மனைவியின் தலையை மெல்ல வருடி விட்டுக் கொண்டிருக்க தெரு விளக்கின் அரையிருள் அந்த வயோதிபத் தம்பதியினரின் மனதில் அமைதியை மீண்டும் விதைத்து விட்டிருந்தது.

காலையில் நேரத்துடன் தூக்கம் கலைந்து சாரதா கண் விழித்தபோது கணவன் அருகில் படுத்திருக்கவில்லை. எப்படித்தான் இந்த வயதிலும் சோர்வேயில்லாமல் இப்படி இருக்கிறார் என்று கணவனைப் பற்றிப் பெருமையாக எண்ணிக் கொண்டார். கோப்பி வேண்டும் என்றாலும் தன்னை எழுப்பிக் கேட்காத கணவனின் அன்பை எண்ணி நிறைவு கொண்டவராய் அவசரமாய் முகத்தைக் கழுவித் திருநீற்றைப் பூசிக் கொண்டார்.

வெளியில் வந்தபோது, கணவன் தோட்டத்தில் இல்லாது, முன் சோபாவுக்குள் சுருண்டிருந்தது ஆச்சரியத்தைக் கொடுத்தது. பாவம் இரவு நித்திரை கொள்ளவில்லைப் போலும் என்று கணவனுக்காகப் பரிதாபப்பட்டபடியே கோப்பியை ஆற்றி எடுத்தார். கணவனின் அருகில் இருந்த சின்ன மேசையில் தேநீரை வைத்து விட்டு கணவனைத் தட்டினார்.
"என்ன யங்மான் நித்திரை கொள்ளுறியள்?" என்றபடி தலைமுடியை வருடி நெற்றியைத் தொட்டபோது உடல் அனலாய் கொதிப்பதை உணர்ந்து கொண்டார்.
"என்னப்பா காய்ச்சலே?" கேட்டபடி கணவனை மெல்ல அருட்டினார். குணா கண்களை அரைகுறையாகத் திறந்து மனைவியின் முகத்தைப் பார்த்ததும் சிரிக்க முயன்றாரே தவிர அதற்குக் கூட அவரால் முடியவில்லை. அவசரமாக அம்புலன்சுக்கு சாரதா அழைப்பேற்படுத்தினார். அவர்கள் அவரை வைத்தியசாலைக்குக் கூட்டிச் செல்ல வேண்டும் என்று கூறியபோது சாரதாவின் அத்தனை அவயங்களும் செயலிழந்து தான் போயின.

அதற்குப் பின்னர் எத்தனை எத்தனை பரிசோதனைகள்? எத்தனை மருந்துகள் கொடுத்தும் குணாவினால் பழைய நிலைக்குத் திரும்ப முடியவில்லை. கால்கள் நடப்பதற்கான வலுவை இழந்திருந்தன. இரண்டு கிழமைகளுக்கு மேலாக ஒரே படுக்கையில் படுத்துக் கொண்டு, ஒரே சுவரையே பார்த்துக் கொண்டிருந்ததில் குணா பொறுமை இழந்தவராய் தன்னை வீட்டுக்கு அழைத்துச் செல்லுமாறு கேட்டுக் கொண்டே இருந்தார். கணவனைச் சமாளிப்பதே இப்போது சாரதாவுக்குப் பெரும் பாடாகிப் போனது. கார் ஓட்டப் பழகிக்கொள்ளாதது எத்தனை பிழை என்பதை சாரதா நினைத்து நினைத்து இப்போதெல்லாம் வருந்தாத நாளில்லை. அதற்காக அவர் ஒன்றும் சோர்ந்து விடவில்லை.

அதிகாலையிலேயே எழுந்து கணவனுக்காகச் சமைத்து எடுத்துக் கொண்டு பஸ்சைப் பிடித்துக் கொண்டு காலை எட்டு மணிக்கே கணவனிடம் வந்து விடுவார். வைத்தியசாலையில் கொடுக்கும் சாப்பாட்டை ஒதுக்கி விட்டுத் தன் சாப்பாட்டையே கணவனுக்கு ஊட்டி விடுவார். குணா "வைத்தியசாலை உணவைச் சாப்பிடுகிறேன், அலையாமல் வீட்டில் ஓய்வெடு" என்று நிறையத் தடவை சொன்ன போதும் சாரதா கேட்பதாயில்லை. மாலை ஆறு மணி வரை அவருடன் நின்று விட்டுத் தான் வீட்டுக்குச் செல்வார்.

அன்று காலையில் எழும் போதே பெரும் மழை. இரண்டு மூன்று நாட்களாக மழை கொட்டிக் கொண்டு தானிருக்கிறது. எப்படிச் செல்வது என்று சிந்தித்துக் கொண்டே, முன்னால் இருந்த கதிரையில் அமர்ந்து கொண்டார் சாரதா. முன்னால் தெரிந்த தோட்டம் குப்பையாய்த் தோற்றமளித்தது. குணா தோட்டத்தை எப்படி வைத்திருந்தார்? ஒரு களை கூட இல்லாமல்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீட்டின் முன்புறமே பூமரங்களால் அழகு பெற்றிருந்தது. இப்போது கேட்பாரின்றிப் புற்கள் நிறைய வளர்ந்து விட்டிருந்தன. இயலாமையின் வேதனையில் பெரு மூச்சொன்றும் சேர்ந்தே வெளியேறியது. அதற்குள் மழை விட்டாற் போன்றிருக்கவே, குடையைப் பிடித்துக் கொண்டு மெதுவே வெளியே வந்தார். ஒரு கையில் சாப்பாடும் பழங்களும் நிறைந்த பை கனத்தது. தோளில் மாட்டியிருந்த கைப்பை வேறு ஓரிடத்தில் நிற்க மாட்டேன் என்று நழுவி நழுவி விழுந்தது. உயர்த்திப் போட முடியாமல் கைப்பை ஒரு கையில், குடை மறுகையில் எனக் கிட்டத்தட்ட ஒரு சர்க்கஸ்காரன் நடப்பதைப் போன்று ஒரு கொஞ்ச தூரம் நடந்து தெருவில் ஏறுவதற்காக எட்டிக் கால் வைத்தார். அவ்வளவு தான் கால்கள் வழுக்கி விட அடிபட்டு விழுந்ததில் நாரியில் பலமாய் அடிபட்டது. கைப்பை விழுந்து தெருவில் ஓடிய வெள்ளத்தில் மிதந்து ஓட அதை ஓடி எட்டிப் பிடித்தார். கணுக்காலில் அடிபட்டதில் ரத்தம் பெருகிக் கொண்டிருந்தது. நோவால் அழுகை பொத்துக் கொண்டு வந்ததில், தன்னை வருத்தும் முருகனையும் வாய்க்கு வந்தபடி திட்டித் தீர்த்தார். மெல்ல நடந்து வீட்டுக்குப் போய் உடையை மாற்றி, வாடகை வண்டியைப் பிடித்து வைத்தியசாலைக்குச் சென்று சேர்ந்தபோது குணா கேட்ட முதலாவது கேள்வி "ஏன் லேட் சாரதா. உனக்கும் என்னைப் பார்க்கப் பிடிக்கவில்லைத் தானே?"

பதிலுக்கு அழுத மனைவியிடம் விடயத்தைக் கிரகித்து அவரைச் சமாதானப்படுத்துவதற்குள் குணாவுக்கும் என்ன வாழ்க்கை என்று தான் போயிற்று. அன்று அவர்களுக்கு நல்ல நாள் இல்லை போலும். வைத்தியரும் ஒரு குண்டைத் தூக்கிப் போட்டார். சுயமாக இனிமேல் குணாவுக்கு நடக்க முடியாததால் அவரை இனிமேல் வீட்டுக்கு அனுப்ப முடியாதென்றும், முதியோர் இல்லமொன்றுக்கே அனுப்பி வைக்க முடியும் என்றும் தெரிவித்தார். உண்மை நிலையும் அதுதான். சாரதாவோ ஐந்தடி உயரத்தில் விழுந்தால் ஒடியக் கூடிய மெல்லிய தோற்றம் கொண்டவர். குணாவோ ஆறடி உயரத்துக்கேற்ற தோற்றமான ஆகிருதி கொண்டவர். குணாவை தாங்கிப் பிடித்து எதுவுமே சாரதாவால் தனியாகச் செய்ய முடியாது. ஆதரவற்றோரே முதியோர் இல்லத்துக்கு அனுப்பப்படுவர் என்ற எண்ணம் மனதில் பதிந்திருப்பதால் தான் உயிரோடிருக்கையில் கணவனை முதியோர் இல்லத்துக்கு அனுப்புவது என்பது சாரதாவுக்கு பெரும் துயராய் இதயத்தைப் பிழிந்தது. வேதனையைச் சொல்லி அழவும் ஆளின்றிப் போக, தனக்குள்ளேயே அழுது தீர்த்தார். அவராவது நிம்மதியாய் இருக்கட்டும் என்ற எண்ணத்தில் இப்போது தன் வேதனைகள் எதனையும் கணவனிடத்தில் பகிர்ந்து கொள்வதேயில்லை.

தலைக்கு டை அடித்து தன்னைக் கவனித்துக் கொள்வதெல்லாம் தற்போது இரண்டாம் பட்சமாகிப் போனதுடன் அதற்கான நேரமும் கிடைக்காமல் போனது. வீட்டையும் தோட்டத்தையும் கவனிக்க பணத்தைக் கொடுத்து ஆட்களை ஏற்பாடு செய்தார். குணாவோ எப்போது வீட்டுக்குப் போகலாம் என்று கேட்டுக் களைத்து இறுதியில் தன் கோபம் பூராவையும் சாரதா மேல்தான் காட்டினார். கொடுக்கும் சாப்பாடுகளையும் மருந்துகளையும் குழந்தைகளைப் போல் உள்ளெடுக்க மறுத்து அடம் பிடிப்பார். சாரதாவிடம் முகம் கொடுத்துப் பேச மறுத்து, தன்னைப் பார்க்கவே வரவேண்டாம் என்று கடிந்து கொள்வார். நடை பழகக் கேட்கும் ஊழியர்களை வாய்க்கு வந்தது மாதிரி திட்டுவார். அமைதியும் கலகலப்பும் நிறைந்த குணா இப்போது சுத்தமாய் தொலைந்து போயிருந்தார். கணக்கு, வழக்கு என்று இதுவரை எதுவும் பார்த்தறியாத சாரதாவுக்கு அந்தச் சுமையுடன், குணாவின் பாராமுகமும் சேர்ந்து கொள்ள மொத்தத்தில் நிம்மதியை இழந்து போனார்.

கண்டால் கத்துவாரே தவிர, பஸ்சைத் தவறவிட்டு சாரதா சென்று சேரச் சிறிது நேரம் ஆகிவிட்டாலும் குழந்தையைப் போன்று அழ ஆரம்பித்து விடுவார். அமைதியாகச் சென்று கொண்டிருந்த வாழ்க்கையில், ஓயமாட்டேன் என்பது போல் பிரச்சனைகள் வந்த வண்ணமே இருந்தன. இதற்குள் கொரோனாத் தொற்றும் வந்து விட வருகையாளர்கள் எவருமே முதியோர் இல்லத்துக்குள் அனுமதிக்கப்படவில்லை. குணாவின் நிலையைக் கருத்தில் கொண்டு சாரதாவுக்கு மட்டும் விதிவிலக்களிக்கப்பட்டது. பஸ்சைப் பிடித்து வந்தால், நோய் தொற்றும் சந்தர்ப்பம் அதிகம் என்பதால் வாடகைக் காரில் வந்து செல்லுமாறும் பணிக்கப்பட்டார். தினமும் இரண்டு வேளைப்பயணம். மாதாந்த அரசாங்கத்தின் உதவித் தொகை இதற்கே காற்றாய் கரைந்து போய்க் கொண்டிருந்தது.

போகப்போக குணாவுக்கு ஞாபகமறதியும் அதிகமாயிற்று. இரவில் சாரதா வீட்டுக்கு வந்து விட, சாப்பிட்டு விட்டதாகச் சொல்லி இரவு உணவை மறுத்து பராமரிப்பாளர்களிடம் சண்டையிடுவார். சாரதாவைக் கண்டால் மட்டுமே முகம் மலரும். வரவரச் சிறு குழந்தை போல் அடம் பிடிக்கும் குணாவைக் கையாளும் போதெல்லாம் தான் குழந்தையில்லை என்று கடவுளிடம் சண்டை பிடித்ததற்கு, இதோ ஒரு குழந்தையை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளர்த்துக்கொள் என்று கணக்கைக் கழித்துக் கொண்டு விட்டிருக்கிறாரோ என்று தான் சாரதா நினைத்துக் கொள்வார். கழிப்பறைக்குக் கூட்டிச் சென்று, சுத்தம் செய்து, உடை மாற்றி, உணவூட்டி என்று அத்தனையையும் தான் சலிக்காமல் செய்கிறார். எத்தனை உடம்பு சரியில்லை என்றாலும் கணவனிடம் செல்லாத நாளில்லை. சாரதாவின் பொறுமையையும் கணவனிடம் கொண்ட பாசத்தையும் பார்த்தவர்களுக்கு அவர் செய்வது ஒரு தவம் போலவே தோன்றும். குணா இல்லத்துக்குப் போய் கிட்டத்தட்ட ஏழு வருடங்கள் உருண்டோடி விட்ட போதும் சாரதாவின் இந்த வழமையில் எந்த மாற்றமும் வரவில்லை.

அன்று சாரதாவுக்குக் காலையில் எழுந்திருக்கவே முடியவில்லை. குணாவின் பக்கத்து அறைவாசியான மிசேலின் திடீர்மரணம் மனதில் ஏதோவொரு குழப்பத்தையும் அச்சத்தையும் ஏற்படுத்தியிருந்ததில் இரவு பூராவும் சரியாகத் தூங்கவே முடியவில்லை. அதிகாலை நான்கு மணிக்குப் பிறகே உறங்கியிருக்க வேண்டும். காலையில் அடித்த அலாரமும் கேட்காமல் உறங்கி விட்டு விழித்தபோது மணி எட்டு. அவசர அவசரமாக கணவனுக்காக சூப் மட்டும் வைத்து எடுத்துக்கொண்டு கிளம்பி விட்டார். கொரோனா இப்போது இயல்பானதொன்றாகி விட்டதால் பஸ்சில் போய் வரக்கூடியதாயிருந்ததது. காலை எட்டி நடைபோடுகையில் மறுநாள் கழித்து வரபோகும் கணவனின் பிறந்த தினத்தைப் பற்றிய நினைவே ஓடிக் கொண்டிருந்தது. முன்னராயின் பிறந்த நாளன்று எந்த விடேசமும் வேண்டாம் என்று சொல்லிவிடுவார். இப்போதோ நண்பர்கள், உறவினர்கள் என்று எல்லோரும் அழைப்பு எடுத்து வாழ்த்த வேண்டும், புத்தாடை போட வேண்டும், கேக் கட் பண்ண வேண்டும் என்பது அவரது எதிர்பார்ப்பாகி விட்டிருந்தது. இந்த வருடமும், சேர்ட் ஒன்று வாங்கியாகி விட்டது. தெரிந்த நண்பி கேக் செய்து தருவதாகச் சொல்லியிருந்தார். குணாவுக்கு இப்படி ஆனதிலிருந்து கோயிலுக்கு தான் மட்டும் தனியாகச் செல்வதில்லை என்று சாரதா வைராக்கியம் பூண்டிருந்தார். அதனால் குணாவின் பெயரில் அர்ச்சனைக்கும் அபிஷேகத்துக்கும் பணம் செலுத்தி விட்டால் போதும் என்று நினைத்துக் கொண்டே தெருமுனையில் திரும்பியபோது எதிர்த்திசையில் இவர் போவதற்கான பஸ் நிற்பது தெரிந்தது. இந்த பஸ்சை விட்டு விட்டால், அடுத்த பஸ் இனி அரை மணி நேரத்துக்கு பின்னர் தான் வரும். இப்பவே தன்னைக் காணாமல் கணவர் தவித்துப் போயிருப்பார் என்ற எண்ணம் பதட்டத்தைக் கொடுத்ததில் வேறு சிந்தனை எதுவும் தோன்றவில்லை. கனமான பையையும் இழுத்துக் கொண்டு திடீரென ரோட்டைக் கடக்க இறங்கிய அவரைக் கவனித்து காரை நிறுத்தக்கூடிய அவகாசம் அந்தக் காரோட்டிக்குக் கிடைக்கவில்லை.

காலையில் இருந்தே குணாவின் அட்டகாசம் எல்லை மீறிக் கொண்டிருந்தது. சாரதா வந்து விட்டால் அங்கு வேலை செய்பவர்களுக்கு ஓய்வு கிடைத்து விடும், அத்தனையையும் அவரே பார்த்துக் கொள்வார். அவ்வப்போது அழைப்பு மணி கேட்டபோது மட்டும் போய் குணாவைத் தூக்கி விட்டு விட்டால் போதும். இப்போதோ நேரம் பத்துமணி ஆகி விட்டிருந்தும் அந்தக் கிழவியைக் காணவில்லை என்பதில் இந்தக் கிழவன் படுத்தும் பாட்டைத் தாங்கமுடியவில்லையே என்று மனதுக்குள் திட்டிக்கொண்டிருந்தார்கள். சாப்பிடவும் இல்லை, மருந்துகளைப் போடவும் இல்லை. யாரையும் எதற்கும் பலவந்தப்படுத்தக் கூடாது என்ற விதி இருக்கும் போது அவரை அமுக்கி சாப்பிடவைக்கவும் முடியவில்லை. சர்க்கரை வியாதி வேறு குணாவுக்கு இருக்கின்றது. இரத்தத்தில் குளுக்கோசின் அளவு குறைவதால் அவரால் இப்போது அடம் பிடித்துக் கத்தக் கூட முடியாமல் சோர்ந்து போயிருந்தார் எனினும் கண்களில் நீர் வழிய “சாரதா, சாரதா” என்று அரற்றிக் கொண்டே இருந்தார். அன்னையைத் தேடும் பிள்ளை போல் அரவம் கேட்ட போதெல்லாம் வாசலை வாசலைப் பார்ப்பதும், அவர் வரவில்லை என்றவுடன் குலுங்கிக் குலுங்கி அழுவதுமாய் இருந்த அவரைப் பார்க்கவே எல்லோருக்கும் பரிதாபமாக இருந்தது. காலையிலிருந்து எத்தனையோ தடவை சாரதாவின் வீட்டுத்தொலைபேசி இலக்கத்துக்கும் கைத்தொலைபேசி இலக்கத்துக்கும் அழைப்பு விடுத்தும் ஏன் எந்தப் பதிலுமில்லை என்பது தான் அந்த இல்லப்பொறுப்பாளருக்குப் புரியவில்லை.

● ● ● ●

பகவான் ரமண மகரிஷி மதவாதியில்லை. ஆசார அனுஷ்டானங்கள் சொல்கிறவரல்ல. இந்தத் தேசத்திற்கு இன்ன மொழிக்கு இன்ன மதத்திற்கு உரிமையானவர் இல்லை. அவர் தனியாக எந்த ஒரு மதத்தையும் ஸ்தாபிக்கவில்லை. என்ன இருந்ததோ அதை வெளிச்சம்போட்டுக் காட்டியுள்ளார். எந்த வர்ணமும் சேர்க்காமல் எந்தக் கலப்படமும் இல்லாமல் மிகத் தெளிவாக சத்தியத்தை உள்ளங்கை நெல்லிக்கனிபோல் உங்களுக்குக் கொண்டு வந்து கொடுத்திருக்கிறார். அறிவதற்கு ஆவல் இருந்தால்போதும். மற்றது அவரது அருளால் ஏற்படும்.

பாலகுமாரன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ந. ஜெயரூபலிங்கம்

# ஏழாம் இடத்தில செவ்வாய்

"இந்தாருங்கோ கோப்பியைப் பிடியுங்கோ. அந்த டெலி போன் அடிக்குது அது கூட எடுக்காமல் ஐபோனைத் (iPhone) தேய்ச்சுக் கொண்டு இருக்கிறீங்க" ஈஸ்வரி கடுப்பான குரலில் பேசிக் கொண்டே அவளது கணவன் சிவாவிடம் கோப்பிக் கப்பைக் கொடுத்தாள்.

"ஹலோ"


"அம்மா எப்படி இருக்கிறீங்க?" மகனின் குரல் தொலைபேசி வழியாக அவள் காதில் தேனாக ஒலிக்க, கணவன் மேலிருந்த கோபம் வந்த இடம் தெரியாமல் ஓடிப் போய்விட்டது.

"ரகு. நான் நல்லாத்தானடா இருக்கிறன். நீ எப்படி இருக்கிறாய்?"

"நானும் நல்லாத் தானம்மா இருக்கிறன். கொஞ்சம் குளிர் ஆரம்பிக்குது. அதுவும் நான் கொழும்பில உங்களோடு இருந்து விட்டு வந்ததால் குளிர் இன்னும் கொஞ் சம் கூட இருக்கிற மாதிரி ஒரு உணர்வு. ஒரு சில நாட்களில் பழகிவிடும்" தாயும் சேயும் ஒரு அரை மணி நேரம் போனில் பேசிய பின் ரகு கேட்டான்.

"அப்பா எப்படி இருக்கிறார்?"

"அதை ஏண்டா கேட்கிறாய். நீ ஒரு ஐபோன் கொண்டு வந்து கொடுத்து விட்டுப் போனாய். உன் அப்பா காலையில் கண் முழிச்சதில் இருந்து படுக்கப் போகும் வரையும் அதையே கட்டிப் பிடிச்சுக் கொண்டு இருக்கிறார். வழக்கமாக வெளியில் நடக்கப் போறதைக் கூடக் குறைச்சிட்டார். எனக்கென்னமோ நல்லதாப்பட வில்லை. இப்ப கூட போன் அடிக் குது எடுக்காமல் ஐபோனைத் தேய்ச்சுக் கொண்டு தானிருந்தவர்.



" ரகுவுக்குச் சிரிப்பு வந்தது அடக்கிக் கொண்டான். அப்பா கொஞ்சம் அதிகமாகவே போன் பாவிக்கிறார் என்பது அம்மாவின் அர்ச்சனையில் தெளிவாகத் தெரிகிறது.

"பாவம் ரிடையரான பிறகு பொழுதுபோக உதவுமென்றுதான் அதைக் கொண்டு வந்தேன். கொஞ்சநாள் போக அவர் அளவாகப் பாவிப்பார். நீங்க ஒன்றும் யோசியாதீங்க. அப்பாவைக் கதைக்கச் சொல்லுங்கோ."

"போன் எனக்கு மட்டும் வரவில்லை. உங்களுக்கும் தான் வந்தது, ரகுவோட கதையுங்கோ."

"ஹலோ ரகு. எப்படி இருக்கிறாய்?."

"நான் நல்லா இருக்கிறன் அப்பா. நீங்க எப்படி இருக் கி றீங்க?"

"எனக்கென்னடா குறை. சந்தோஷமா இருக்கிறன்."

"நீங்கள் ஐபோனோடதான் பொழுது போக்கிறீங்க என்று அம்மா கம்ப்ளெயிண்ட் பண்ணு கிறா. உண்மையா?" என்று கொஞ்சம் சிரித்துக் கொண்டே கேட்டான் ரகு.

"அட போடா. உனக்குத் தெரியும் தானே. அம்மா எப்பவும் ஏதாவது ஒரு காரணம் கண்டுபிடிச்சுக் குறை சொல்லுவா. அவவுக்கு அப்படி என்னில் ஏதாவது குறை காணாவிட்டால் திருப்தி இருக்காது. இப்ப ஐபோன், இது இல்லாத போது வேற எத்தனையோ காரணங்கள். " அப்பாவின் முகத்திலும் ஒரு புன்சிரிப்பு.

"ஹா..ஹா..ஹா. உண்மைதானப்பா அம்மா எப்பவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏதாவது ஒரு விஷயத்துக்குக் குறை சொல்கிறவதான். அப்படி ஐபோனில என்னதான் நாள் முழுக்க பார்க்கிறீங்க?"

"நீ ஃபேஸ்புக்கில என்னைச் சேர்த்து விட்டியா. கொஞ்சம் கொஞ்சமா என்னோட பழைய நண்பர்கள் பல பேரோட தொடர்பு வந்திடுச்சு. பள்ளிக்கூடத்து பழைய மாணவர்கள், பல்கலைக்கழக காலத்து நண்பர்கள் என்றெல்லாம் குரூப்புகளில் அவங்கள் என்னைச் சேர்க்க புதுசு புதுசா என்னைக் கண்டு பிடிச்சு பல பழைய நண்பர்கள் என்னோடு இணைந்திருக்கிறார்கள். பல வருடங்களுக்குப் பிறகு நண்பர்களின் தொடர்புகள் வந்திருக்கிறது. அதனால அவங்களோட கதைக்கவே எனக்கு நேரம் காணாது."

"நல்லது அப்பா. நான் ஐபோன் கொண்டு வந்தது உங்களுக்குப் பிரயோசனமாக இருப்பது ரொம்ப சந்தோஷம். என்னுடைய லஞ்ச் பிரேக் நேரம் முடியுது." என்று சொல்லி விட்டுப் போனை வைத்தான் ரகு.

"நான் கோயிலுக்குப் போகிறேன். நீங்களும் வாறீங்களா?" கேள்வி கேட்கும் போதே தெரியும் அவளுக்கு அவள் கணவன் வரப் போவதில்லையென்பது.

"நான் வரவில்லை."

"வெள்ளிக்கிழமையிலாவது கோயிலுக்குப் போனால் கொஞ்சம் புண்ணியமாவது கிடைக்கும்."

"ஊரிலுள்ள சாமியெல்லாம் கும்பிட்டு நீ எக்கச்சக்கமாய் புண்ணியம் சேர்க்கிறாய் அதில எனக்கும் கொஞ்சமாவது சேரும் தானே. போயிட்டு வாம்மா" கணவனின் பதிலுக்கு முகத்தைச் சுழித்து தனது அதிருப்தியைக் காட்டி விட்டு வெளியே சென்றாள்.

"ஹலோ மாமி" குரல் கேட்டுத் திரும்பி பார்த்தாள். அவளது தோழி சக்தியும் அவள் மகள் சந்தியாவும் பின்னால் வந்து கொண்டிருந்தார்கள்.

"கோயிலுக்கா போறீங்க?"

"ஓம் சந்தியா, கோயிலுக்குத்தான் போறன். நீங்கள் அம்மாவும் மகளுமா எங்கே போறீங்க?"

"நாங்களும் கோயிலுக்குத்தான் போகிறோம். வா ஒன்றாகவே போகலாம்" சக்தி பதிலளித்தாள்.

"மாமாவைக் கண்டு ரொம்ப நாளாச்சு என்று காலையில தான் அப்பா சொன்னவர். மாமா வேலையிலிருந்து ரிடையரான பிறகு நீங்கள் வீட்டில நிறைய வேலை கொடுக்கிறீங்க போல. பிசியாகிட்டாரோ? சனி, ஞாயிற்றுக் கிழமையில் ஒரு நாளாவது அப்பாவோட கேரம் போர்ட் விளையாட வருவார். இப்ப ஆளைக் காணவே கிடைக் குதில்லை."

"இல்லை சந்தியா, இரண்டு கிழமை ரகு வந்திட்டுப் போனவன் தெரியும் தானே. அவன் அப்பாவுக்கு ஒரு ஐபோன் வேண்டிக் கொண்டு வந்தவன். இப்ப அவர் அதைக் கட்டிப் பிடிச்சுக் கொண்டு 24 மணி நேரமும் பொழுதைப் போக்கிறார். ஐபோன் தேய்ச்சு தேய்ச்சு கை விரலில் இருக்கிற ரேகை எல்லாம் அழிந்து போனாலும் ஆச்சரியப்பட முடியாது. நான் அவரிடம் சொல்கிறேன் உங்கட கேரம் போர்ட் பார்ட்னர் தேடுகிறாரம் என்று."

****

மறு நாள் சனிக்கிழமை காலையில் இட்லி சாப்பிட்டபடி சிவா சொன்னான்"நாலு மணி போல ரவியிட்ட போறன் கேரம் போர்ட் விளையாட."

"ஓ! மறந்து போனேன். நேற்று கோயிலில் சந்தியாவையும் சக்தியையும் கண்டேன். நீங்கள் இப்போ கேரம்போர்ட் விளையாடவும் வருவதில்லையாம் என்று சந்தியாவோட அப்பா குறை சொன்னதாகச்சொன்னாள்"

"ரவி அப்படியா சொன்னானாம்?" என்று சிரித்துக் கொண்டே கேட்டான் சிவா. உண்மையில் போன சனிக்கிழமை போக இருந்த அவரை வர வேண்டாம் என்று சொன்னதே ரவிதான். சக்தியும் ஈஸ்வரியும் பள்ளித் தோழிகளென்பதால் சிவாவும் ரவியும் முப்பது வருடங்களுக்கு முன்னர் மனைவிமார்களூடாக ஒருவருக்கொருவர் அறிமுகமானார்கள். இருவருக்கும் நன்றாக ஒத்துப்போகவே நெருங்கிய நண்பர்கள் ஆகி விட்டார்கள். அத்துடன் அவர்கள் வீடுகளும் ஐந்து நிமிடம் நடந்து போகும் தூரத்தில் தான் இருக்கின்றன. அனேகமாக சனி அல்லது ஞாயிற்றுக்கிழமையில் ஒருநாள் இருவரும் ஒன்று சேர்ந்து கேரம்போர்ட் விளையாடுவார்கள். முக்கிய மான விஷயம் கேரம்போர்ட் விளையாடுவதல்ல. அந்த சாக்கில் ஒன்று சேர்ந்து கொஞ்சம் பியர் குடிப்பதுதான். ஈஸ்வரிக்கு மதுபானம் என்றாலே பிடிக்காது. அதனால் சிவாவுக்கு வீட்டில் அதற்கு அனுமதி இல்லை. ரவி வீட்டுக்குப் போனால் தான் சிவாவுக்கு தண்ணி அடிக்கும் வாய்ப்பு கிடைக்கும்.

ரகு வரும் போது லண்டனிலிருந்து ஒரு ஸ்காட்ச் விஸ்கி போத்தல் அப்பாவுக்கு கொண்டு வந்தான். போத்தல் இருந்தும் வீட்டில் குடிக்க வழியின்றி சனிக்கிழமை ரவிக்குப் போன் பண்ணி "மச்சான் ஒரு போத்தல் 'கிளென்ஃபிடிச்' இருக்குது எப்ப கொண்டு வர?" என்று கேட்டான். "இந்த வீக்கெண்ட் எனக்கு வீட்டில விருந்தாளிகள் வருகிறார்கள். அடுத்த சனிக்கிழமை வா மச்சான்" என்று சொன்னதே ரவி தான். இப்ப நான் ஏதோ மறந்து போயிருக்கிற மாதிரி மகளிடம் கதை அளந்திருக்கிறான் என்று உள்ளுக்குள் சிரித்துக் கொண்டான் சிவா.

சரியாக நாலு மணிக்கு மகன் கொண்டு வந்த 'கிளென்ஃபிடிச்' போத்தலையும் ஒரு பையில் போட்டுக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டு புறப்பட்டான் சிவா.

"நான் ரவி வீட்டுக்குப் போகிறேன்." மனைவிக்குத் தகவல் கொடுத்தான்.

"கொஞ்சம் இருங்கோ நானும் வாறன். சக்தி எங்கள் இரண்டு பேருக்கும் டின்னர் தங்கட வீட்டில் தான் என்று போன் பண்ணிச் சொன்னவள்." உள்ளேயிருந்து பதில் வந்தது. இதை முதலிலேயே சொல்லியிருக்கலாமே எனத் தனக்குள் புறுபுறுத்துக் கொண்டு அவளுக்காகக் காத்திருந்தான் சிவா.

"வெளிநாட்டுச் சாராயம் மகன் கொண்டு வந்திருக்கிறான் என்று அதிகம் குடிக்காமல் அளவாகக் குடியுங்கோ. சக்தி வேற உங்களால தான் தன்னுடைய மனுசன் தண்ணி அடிக்கிறவரென்று இலைமறை காயாக என்னிடம் பல தடவை சொல்லியிருக்கிறாள்" போகும் வழியில் ஈஸ்வரியின் உபதேசம் கிடைத்தது சிவாவுக்கு. விலை உயர்ந்த பதினெட்டு வருடங்கள் மரப் பீப்பாயில் முதிர்ச்சி அடைய விட்டுப் பின்னர் போத்தலில் நிரப்பப்பட்ட, 18 வயது சிங்கிள் மோல்ட் ஸ்காட்ச் விஸ்கியை வெளிநாட்டுச் சாராயம் என்று மட்டமாகச் சொல்பவளுக்குப் பதில் சொல்ல முடியுமா? இது ஏதோ புதிதாக வந்த புத்திமதியல்ல. வாராவாரம் மனைவியிடம் கிடைக்கும் இலவச அறிவுரையின் வெளிநாட்டுச் சாராயப் பதிப்புத்தான் இது.

ரவியும் சிவபாலனும் ஃப்ளாட்டின் பின் பக்க பால்கனியில் உள்ள கதிரைகளில் உட்கார்ந்தார்கள். அதுதான் அவர்களது வழக்கமான இடம். ஏற்கனவே இரண்டு கண்ணாடிக் குவளைகள் விஸ்கிக்காக அங்கிருந்த சிறிய மேசையில் காத்துக் கொண்டு இருந்தன. ரவி ஃப்ரிட்ஜிலிருந்து ஐஸ் கட்டிகள் எடுத்து வந்தான்.

முதலாவது சிப் வாயில் எடுத்த ரவி அந்த சுவையைக் கொஞ்ச நேரம் மெய்மறந்து ரசித்து விட்டு "ஸ்காட்ச் விஸ்கி ஒரு தனிரகம் மச்சான். மகன் கொண்டு வந்ததை என்னோட பகிர்ந்து கொண்டதற்கு மிக்க நன்றி." "நீதானே என் தண்ணிப் பார்ட்னர். உன்னோடு பகிர்வதில் எனக்கு மிக்க மகிழ்ச்சி நண்பனே" சினிமா வசனம் பேசினான் சிவா. பால்கனியில் ஆண்கள் விஸ்கியை ரசித்தபடி இருக்க உள்ளே வரவேற்ப றையில் ஜூஸ் குடித்தபடி பெண்களின் கூட்டம் நடை பெற்றது. "ரகு இந்த முறை வந்த போது கல்யாணம் பற்றி ஏதாவது கதைச்சியா?" சக்தியின் கேள்விக்கு ஈஸ்வரியிடம் இருந்து பெருமூச்சுடன் பதில் வந்தது.

"அதையேனடி கேட்கிறாய். அவனுக்கு வயசு முப்பதாகப் போகுது ஆனால் கல்யாணம் என்கிற பேச்சை எடுத்தாலே எரிஞ்சு விழுகிறான்."

"ரகு அண்ணா லண்டனில கேர்ள் ஃப்ரெண்ட் வைத்திருப்பார். நீங்கள் அதைக் கேட்டுப் பார்த்தனீங்களே?" சந்தியாவின் குறும்புத்தனமான இடைச்செருகல் சக்திக்கு கெட்ட கோபத்தைக் கொண்டு வந்தது அவள் மகளைப் பார்த்த பார்வையில் தெட்டத் தெளிவாகத் தெரிந்தது.

"நீ ஏன் அவளை முறைச்சுப் பார்க்கிறாய்?" என்று சக்தியின் பார்வைக்குப்பதில் சொன்ன ஈஸ்வரி சந்தியாவைப் பார்த்துப் பதில் சொன்னாள்

"சந்தியா, ரகுவின் சாதகத்தில் ஏழாம் இடத்தில் செவ்வாய் இல்லையென்றால் உன்னைத் தான் என் மருமகளாக் கியிருப்பேன். என் பிள்ளை அப்படி அம்மாவுக்குத் தெரியா மல் காதலிக்கமாட்டான். இன்னும் ஒரு வருஷத்தில இங்கிலாந்தில் நிரந்தரமாக இருக்கும் விசா கிடைக்குமாம். அதுக்குப் பிறகு கல்யாணம் பற்றி யோசிக்கலாம் என்று தான் சொன்னவன்"

"ஏன் மாமி, இந்த செவ்வாய் விஷயம் பெரிய விஷயமா?"

"சந்தியா, சாதகப் பொருத்தம் ஒரு கல்யாணத்துக்கு ரொம்ப முக்கியம். அது சரியாகப் பொருந்தினால் வேறு விஷ யங்களில் கொஞ்சம் அட்ஜஸ்ட் பண்ணிக்கொள்ளலாம். ஆனால் பொருத்தம் இல்லையென்றால் செய்யவே கூடாது."

"அப்படியா மாமி" சந்தியாவுக்கு நம்பிக்கையில்லாத போதும் ஈஸ்வரிக்கு மறுப்புச் சொல்லவில்லை

"சரனும் அமெரிக்காவில் தனக்கு கிரீன் கார்ட் வந்த பின் கல்யாணம் பற்றி யோசிக்கலாம் என்று தான் சொல்கிறான். இந்தக் காலத்துப் பிள்ளைகளுக்கு ஏன் தான் கல்யாணம் செய்யப் பிடிக்குதில்லையோ தெரியவில்லை. நாங்கள் எல்லாம் அம்மா அப்பா சொன்னபோது மறு பேச்சுப் பேசாமல் கழுத்தை நீட்டினனாங்கள் தானே" சக்தியும் தன் மகனைப் பற்றிய ஆதங்கத்தை வார்த்தைகளில் வெளிப்ப டுத்தினாள்.

பால்கனியில் உலக அரசியல் ஆராய்வும் அரைப்போத்தல் விஸ்கியும் முடிந்த நிலையில் மீதி அரைப்போத்தல் அடுத்த சனிக்கிழமைக்கு என்று முடிவெடுத்தார்கள் நண்பர்கள். "சாப்பாடு ரெடியா?" என்று ரவி குரல் கொடுக்க "உள்ளே வாங்க. நான் எடுத்துக் கொண்டு வாறன்" என்று சொல்லிக் கொண்டே சமையலறை நோக்கி நடந்தாள் சக்தி. சாப்பிடும் போது சிவா தனக்கு ஃபேஸ்புக் மூலம் மீண்டும் பழைய நண்பர்கள் தொடர்பு கிடைத்தது பற்றி அளந்தான்.

"மாமா பழைய நண்பர்களை சேர்த்த நீங்கள் ,ரகு அண் ணனுக்கு 'ஃப்ரெண்ட் ரிக்வெஸ்ட்' அனுப்பவில்லையா?"

"நான் யாருக்கும் இதுவரை அனுப்பினதில்லை, ரகு ஆரம்பத்தில் ஒரு சில நண்பர்களைத் தேடிக் கனெக்ட் பண்ணி விட்டவன். அதுக்கப்புறம் வரும் ரிக்வெஸ்ட்களை ஏற்றுக் கொள்ள மட்டும் தான் தெரியும். தேடிப் பார்க்கத் தெரியாது."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அப்படியா, சாப்பிட்ட பிறகு நான் உங்களுக்குச் சொல்லித் தருகிறேன்."

சாப்பிட்டு முடித்ததும் மேசையில் போனை வைத்து எப்படி ஒருவரைத் தேடலாம் என்று சொல்லிக் கொடுத்தாள். முதலில் தன் பெயரைத் தேடி ஒரு ரிக்வெஸ்ட் அனுப்பினாள். இப்போ ரகு அண்ணாவைத் தேடுங்க என்று சொல்ல சிவாவும் ரகுநாதன் சிவபாலன் என்று அவன் முழுப் பெயரும் டைப் பண்ணினார். ஈஸ்வரி, ரவி, சக்தி ஆகிய மூவரும் பின்னால் நின்று போனின் ஸ்கிரீனைப் பார்த்துக் கொண்டு நின்றார்கள்.

முதலாவதாக வந்த புரோஃபைலில் தொட ,முழுப் புரோஃபைல் கண்ணுக்குத் தெரிய அதிலிருந்த போட்டோ பார்த்த நான்கு பெரியவர்களும் அதிர்ச்சியடைந்தார்கள். ரகுவும் ஒரு வெள்ளைக்காரப் பெண்ணும் உதட்டோடு உதடு உரசும் காட்சி தான் ரகுவின் ப்ரோஃபைல் போட்டோ. வெறும் நண்பி தான் என்று சொல்லிச் சமாளிக்க முடியாது.
"என்ன ஈஸ்வரி நீ ரகுவுக்கு பொம்பிளை பார்க்கத் தேவையில்லை. நல்ல வடிவான வெள்ளைக்கார மருமகள் வரப் போறா போலத் தெரியுது" சக்தியின் வார்த்தைகள் ஈஸ்வரிக்கு ஏற்கனவே மகனது போட்டோ பார்த்து வந்த கோபக் கனலுக்கு எரிபொருளாகியது.
"இதுக்குத் தான் கல்யாணம் இப்போ வேண்டாம் என்று சொல்லியிருக்கிறான். நான் அப்பவே சொன்னேன், பிள்ளையை வெளிநாட்டுக்கு அனுப்ப முதல் கால் கட்டு ஒன்று போட்டு விட்டு அனுப்ப வேண்டும் என்று. நான் சொல்கிறது யார் காதிலும் விழுகிறதில்லை." ஈஸ்வரியின் ஆதங்கம் வழக்கம் போல சிவா செய்த குற்றமாக மாறியது.
"அதை இப்ப எனக்குச் சொல்லாமல் அவன் போக முன்னம் அவனிடமல்லவா சொல்லியிருக்க வேண்டும்" தனிமையில் மனைவி இப்படித் தன் கோபத்தை அவன் மேல் குற்றப் பத்திரிகையாக மாற்றும் போது பொறுமையாகக் கேட்கும் சிவா மற்றவர்கள் முன்னால் ஏற்றுக் கொள்ளத் தயாராக இல்லை. அதைவிட உள்ளே போன வெளிநாட்டுச் சாராயத்தின் தூண்டுதலால் ரோஷம், மானம் போன்ற உணர்ச்சிகள் கொஞ்சம் அதிகமாகவே தலையைக் காட்டியதால் துணிவும் அதிகரித்திருந்தது.
"நான் சொன்னால் உங்கடை செல்ல மகன் கேட்பான். நான் அந்தக் கதை எடுத்தவுடனே படிக்கப்போறவனை ஏன் குழப்புகிறாய் என்று மகனுக்கு சப்போர்ட் பண்ணினதை, இப்ப மகன் வேண்டித் தந்த வெளிநாட்டுச்சாராயம் உள்ளுக்கு போய் மறக்கப் பண்ணிவிட்டது." கதை விஸ்கி பக்கம் போகிறது. அடுத்ததாக நம்ம தலை உருள வாய்ப்புண்டு என்று ரவிக்குப் புரிய இதற்கு முற்றுப் புள்ளி வைக்க வேண்டிய அவசியத்தை உணர்ந்தான் ரவி. நண்பனுக்கு உதவி செய்யும் நல்ல மனப்பான்மையுடன் அவர்களின் வாக்குவாதத்தில் குறுக்கிட்டான். "கொஞ்சம் பொறுமையாக யோசியுங்கோ. ஏதோ ஒரு போட்டோவைப் பார்த்து விட்டு விசாரிக்காமல் நீங்கள் ஏன் சண்டை பிடிக்கிறீங்கள். நாளைக்கு ரகுவோடு போனில கதையுங்க. அவன் பக்கத்தைக் கேட்டு விட்டு பிறகு என்ன செய்வதென்று யோசிப்போம்"
"அவனுக்கு இப்ப ஈவ்னிங் தானே? போன் பண்ணுங்கப்பா. இப்பவே கேட்டு விடுவோம்." கணவனுக்கு அதிகாரத்துடன் கட்டளை போட்டாள். கோபம் வந்து விட்டால் ஈஸ்வரி இப்படி அதிகாரத்தைக் கையில் எடுத்து விடுவது ஒன்றும் புதிய விஷயமில்லை. என்பது அங்கிருந்த அனைவருக்கும் தெரிந்ததே.
"வீட்டுக்குப் போய் போன் பண்ணலாம் வா" என்ன தான் நெருங்கிய நண்பர்கள் ஆனாலும் நம்ம வீட்டு விவகாரம் நாமே தனியாகப் பேசித் தீர்க்க வேண்டும் எனும் நல்ல நோக்கத்தில் சொன்னான் சிவா. ஆனாலும் தன் மகன் பற்றிய எதிர்பார்ப்புக்கும் உண்மைக்கும் உள்ள இடைவெளி மிகப் பெரிதாக இருப்பதை உணர்ந்த ஈஸ்வரிக்கு வீட்டுக்குப் போக வேண்டிய ஐந்து நிமிட நேரமே பெரிதாகத் தோன்றியது.
"இவர்கள் எங்கள் குடும்பம் மாதிரித்தானே. நீங்கள் இப்பவே போன் பண்ணுங்க. எனக்கு வீடு போகும் வரை பொறுக்க முடியாது"

மனைவியை எதிர்த்துப் போராடுவதால் வரக் கூடிய பின் விளைவுகளை விட மகனிடம் இவர்கள் முன்னால் போனில் கதைப்பதே சாலச் சிறந்தது என முடிவெடுத்து மகனுக்குப் போன் பண்ணினான். மறுமுனையில் போன் மணி அடித்தது. "ஸ்பீக்கரில் போடுங்க அப்பதான் நாங்கள் இரண்டு பேரும் ஒரே நேரத்தில் கேட்கலாம்"
"ஹலோ, அப்பா ஏதாவது பிரச்சினையா? நீங்கள் இப்படி போன் எடுக்கிறதில்லையே."
"ரகு, இன்று உன்னை ஃபேஸ்புக்கில் தேடிக் கண்டு பிடித்தேன். உன் ப்ரோஃபைல் போட்டோவில யாரோ ஒரு வெள்ளைக்காரியோட நெருக்கமாக இருக்கிறாய் போலத் தெரிஞ்சுது." நேரடியாக கேட்காமல் மறைமுகமாக ஒரு தகவலைக் கொடுப்பதன் மூலம் கேள்வி கேட்டான் சிவா.
"விளங்குது அப்பா என்ன கேட்கிறீங்க என்பது. நானும் லூசியும் எங்கேஜ்ட். நான் எனது பெர்மனன்ட் ரெசிடன்ஸ் விசா அடுத்த வருஷம் வந்ததும் உங்களிடம் அனுமதி கேட்டு கல்யாணம் செய்ய இருக்கிறேன்."
"எங்கேஜ்டோ?" மேலும் அதிர்ச்சியோடு கேட்டாள் ஈஸ்வரி.
"அம்மா, இங்கே எல்லாம் நம்ம ஊர் மாதிரி இல்லையம்மா. காதலித்தால் கல்யாணம் கட்டுவது என்பது உறுதியல்ல. நான் அவளிடம் என்னைக் கல்யாணம் கட்டுவாயா என்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேட்டு அவளும் சம்மதித்தால் அதன் பிறகு இருவரும் எங்கேஜ்ட் என்று சொல்வார்கள். "

"எங்களிட்ட ஒரு வார்த்தை கேளாமல் எப்படி அவளிட்டைப் போய் கல்யாணம் கட்டுவியா என்று கேட்பாய்?" ஈஸ்வரியின் கோபம் வார்த்தைகளில் வந்தது.

"அம்மா நான் கல்யாணம் கட்ட விரும்பும் அவளைக் கேட்டுச் சம்மதம் வாங்கிய பின் உங்களிடம் அறிவிப்பது தானே நியாயம். உங்களுக்குச் சொன்ன பின் அவளிடம் கேட்க அவள் இல்லை என்று பதில் சொன்னால் என்னவாகும்?"

ரகுவின் தர்க்கரீதியான வாதம் ஈஸ்வரியின் கோபத்தை அடுத்த நிலைக்குக் கொண்டு சென்றது.

"ஓகோ! பெரிய மனுஷன் அவள் சம்மதம் கேட்டு எங்களுக்கு அறிவிக்க இருந்தனீங்களோ?. இதுவும் சொல்லுவாய் இதுக்கு மேலேயும் சொல்லுவாய். எல்லாம் கேட்க வேணும் என்பது என் தலையெழுத்து."

"அம்மா கோபப்படாமல் கொஞ்சம் அமைதியாக யோசித்துப் பாருங்க. உங்கள் கோபம் தணியவிட்டு பிறகு நாளைக்கு கதைக்கலாம்."

"எனக்கு நாளைக்கு வேண்டாம். இப்ப முடிவு வேண்டும். முக்கியமாக சாதகப் பொருத்தம் பார்க்காமல் நீ உன் பாட்டுக்குக் கல்யாணம் பண்ண முடியாது. நாளைக்கு நாலு பேர் சொல்கிற கதைக்கு யார் பதில் சொல்கிறதாம்?"

"அம்மா, கல்யாணம் பண்ணப் போவது நான். இதில் நாலு பேரைப் பற்றி நான் ஏன் கவலைப்பட வேண்டும்?"

"அறிவில்லாதவன் மாதிரிக் கதைக்கிறாய். மற்றவர்களை விடு. உனக்கு ஏழில செவ்வாய், செவ்வாய் குற்றம் இல்லாதவளைக் கல்யாணம் கட்டினால் ஒரு வருஷத்துக்குள்ள அவள் செத்துப் போய் விடுவாள். அது அவளுக்குத் தெரிஞ்சே உன்னைக் கல்யாணம் கட்டச் சம்மதிச்சவள்?"

சந்தியாவுக்குச் சிரிப்பு வந்தது. கஷ்டப்பட்டு அடக்கிக் கொண்டாள். போற போக்கில ஆங்கிலேயப் பெண்ணுக்கு ஈஸ்வரி மாமி பக்கத்துத் தெருவில் ஜோதிட நிலையம் நடத்தும் சாத்திரி சோமசுந்தரத்தாரிடம் ஜென்ம சாதகம் எழுதும் வேலை கொடுத்தாலும் கொடுப்பா.

ரகு சத்தமாகவே சிரித்தான். ஈஸ்வரியின் கோபம் எரிமலையாய் வெடித்தது.

"எதுக்கடா சிரிக்கிறாய்?"

"அம்மா அமெரிக்காகாரன் சந்திரனில் கொடி நாட்டுகிறான், செவ்வாய் கிரகத்துக்கு விண்கலம் அனுப்புகிறான். நீங்கள் எனக்கு ஏழில செவ்வாய், கல்யாணம் கட்டுறவள் செத்துப் போவாள் என்று கதை சொல்கிறீங்கள்."

"அப்பனும் மகனும் அறப்படிச்சவை. எங்கட பழைய சாஸ்திரங்கள் எழுதியவர்கள் எல்லாம் முட்டாள்கள் தான். அதை நம்புற நானும் ஒரு வடிகட்டின முட்டாள் தான்."

"நான் சொல்வதுக்கு அப்பாவை ஏன் வம்புக்கு இழுக்கிறீங்க?" தன் மேல் உள்ள கோபத்தை அம்மா, அப்பாவின் மேல் திருப்பாதிருக்க முயற்சி செய்தான் ரகு.

"உனக்கு இதெல்லாம் யாரு சொல்லித் தாறது? உன் அப்பாவைப் பார்த்து தானே நீ கோயிலுக்கு என்னோட வருவதைப் பத்து வயதிலேயே நிற்பாட்டினாய். சின்ன வயதிலேயே சாத்திரம் சம்பிரதாயங்களில் நம்பிக்கை இல்லாமப் பண்ணினது உன் அப்பாதானே?"

"அம்மா இப்போ நான் என்ன சொன்னாலும் நீங்கள் கேட்கப் போவதில்லை. உங்களுக்கு மருமகள் லூசி தான். இப்போ நான் ரயில்வே ஸ்டேஷனில் நிற்கிறேன். எனது ரயில் வருகிறது. இதற்கு மேல் இப்போ கதைக்க முடியாது." என்று சொல்லி அழைப்பைத் துண்டித்து விட்டான் ரகு. ஈஸ்வரியின் கண்களில் கண்ணீர் ஆறாக வடிந்தது. சக்தி அவளை அணைத்துப் பிடித்தபடி அவள் கண்ணீரைத் துடைத்து விட்டாள்.

"இப்ப என்ன நடந்து போச்சுது என்று நீ இப்படிக் கோபப்பட்டு அழுகிறாய்? அவன் தனக்குப் பிடிச்ச ஒருத்தியைக் கல்யாணம் பண்ணப் போகிறேன் என்று சொல்கிறான். அவ்வளவு தானே. நாளைக்கு நாங்கள் சாத்திரியார் சோமசுந்தரத்திடம் போய் செவ்வாய் குற்றத்துக்கு ஏதாவது பரிகாரம் செய்யலாமா என்று கேட்டுப் பார்ப்போம்."

சந்தியாவின் வாட்ஸ்அப் நோட்டிஃபிகேஷன் டிங் என்று சத்தம் போட்டது. பெரியவர்களிடமிருந்து தள்ளிப் போய் பார்த்தாள். ரகுவிடமிருந்து தான் மெசேஜ் வந்திருந்தது.

"ஐடியாவும் போட்டு, அதை ஸ்கிரிப்ட் பிசகாமல் நாடகமாடி என் அம்மா அப்பாவுக்கு என் காதல் விவகாரத்தைத் தெரியப்படுத்தின என் உடன் பிறவாத்தங்கையே! உன் சேவைக்கு இந்த அண்ணனின் கோடானு கோடி நன்றிகள். வேற்று இனம் என அப்பா அல்லது அம்மாவிடமிருந்து எதிர்ப்பு வருமோ எனப் பயந்தேன். ஆனால் அவர்கள் அது பற்றிக் கவலைப்படவில்லை என்பது சந்தோஷம். ஆனாலும் ஏழாம் இடத்தில் செவ்வாய் என்று புதுப் பிரச்சினை வந்துள்ளது." என்று எழுதியிருந்தான்.

"வெள்ளைக்காரப் பெண் என்று எதிர்த்திருந்தால் அதைச் சமாளிப்பது கஷ்டமாக இருந்திருக்கும். ஜோதிடப் பிரச்சினைகள் அனைத்துக்கும் ஏதாவது ஒரு பரிகாரம் இருக்கும். அதன் மூலம் மாமியின் ஜோதிட நம்பிக்கைக்கு ஒரு தீர்வு காணலாம். கவலை வேண்டாம் அண்ணா." என்று சந்தியா பதிலனுப்பினாள்.

• • • •



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்று சனிக்கிழமை சுதா குளித்து முழுகிக் கோயிலுக்குப் புறப்பட்டாள். புறப்பட்டவேளை சத்யன் வந்து "சுதா இன்று என் மாமா மகள் அனிதா வருகிறாள் சீக்கிரம் வா" என்றான். சரியெனத் தலையசைத்து விட்டு பூசைக்கூடையுடன்

# விருந்தாளி



கிளம்பிவிட்டாள். கோயில் தரிசனம் முடித்து அவள் வீட்டுக்கு வருகையில் வரவேற்பு கூடத்தில் பெரிதாக சிரித்துக் கேட்கிறது. மாமியாரும் சத்யனும் கூட இருக்க நடுநாயகமாய் அனிதா முழு நாகரீகமே உருவாய் கையில்லா மேற்சட்டை, முழங்கால் அளவிளான காற்சட்டை, கட்டைக் கூந்தல், பெரியதோடு, வெறும் கழுத்து, நீண்ட நகம் கொண்ட கைவிரல்கள் அப்பப்பா என்ன நாகரீகம் அமெரிக்கா எண்டா சும்மாவா! இவள் பார்க்க "சுதா இவள் தான் அனிதா" சுதாவும் மரியாதைக்கு "வணக்கம் வாங்க" என வரவேற்றாள்.

நான் வந்து பத்து நிமிசமாச்சு. ஹா ஹா என சிரிக்க மற்றவர்களும் கூட சேர்ந்து சிரித்தனர். இவள் முகம் சுண்டக்கண்டு சத்யன் சமாளித்தான். "சரி சுதா அனிக்கு ஏதும் பிரஸ் யூஸ் கொண்டு வாயேன்." சரியென உள்ளே போனவளை அனிதா இடைமறித்து "இங்க பாருங்க ஆப்பிள் இருந்தா போடுங்க." இருக்கு என நகர்ந்தவளை மீண்டும் கூப்பிட்டு ஐஸ் தூக்கலாய் என்றாள்.

"ம்... சரி", என்றவாறு சுதா அவ்விடம் விட்டு நகர்ந்தாள்."

"அத்தை! எனக்கு ஏசி ரூம் இருக்கா?

"இருக்குடா அம்மா. என் ரூமே இருக்கு நீ அதுல தங்கு. நான் பக்கத்து அறைக்கு மாறுகிறேன்." "சரி நான் குளிச்சுட்டு வாரன்." சிறிது நேரமில்லை பெரிய அலறல் என்ன என மூவரும் ஓட "நோ எனக்கு இந்த ரூம் வேண்டாம்" என்றாள் அனிதா. ஏன் என கேட்டதிற்கு "பாத்ரூம் சரியில்லைங்க இங்க பெட் கவர் மாத்தல வெரி டேட்டி".

"இல்ல சற்று பொறுங்க நான் கோயில் போன படியா கவனிக்கல இதோ ஐந்து நிமிடத்தில் துப்பரவு செய்து தருகிறேன். அத்தை அதுவரை எங்க அறையில் இருக்க விடுங்க. அப்படியே மேசைமேல் யூஸ் இருக்கு குடுத்திடுங்க." சரியென மூவரும் நகர்ந்தனர்.

சுதா அறைக்கு சென்ற அனிதா அதிர்ந்தாள். மிகமிக அழகாக அறை நேர்த்தியாக அடுக்கி வைக்கப்பட்டிருந்தது. பெரிய கட்டில் நீலவண்ண திரைச்சீலை அதே வண்ணத்தில் உறைகள் வெள்ளை சோபா என அடடா அமெரிக்காவில் கூட என் அறை இப்படி இல்லையே! இதிலேயே தங்கிடனும் இந்த பட்டிக்காட்டாளுக்கு இந்த சொகுசு அறையா என பொருமினாள். சுதா மளமளவென பெருக்கி துடைத்து கட்டில் மெத்தை தலையணைக்கு புது உறை மாற்றி யன்னல் திரைகள் மாற்றி புதிய சோபா, கதிரை, பூக்கள் என வைத்து பார்க்க மிக மிக அழகாக மாற்றிவிட்டாள். எட்டிப்பார்த்த சத்யன் மகிழ்ந்து போனான். "சுதாம்மா உன் கை பட்டால் மண்ணும் பொன்னாகும் பாரேன்." "சரி சரி உங்க மச்சினிய கூட்டி வந்து காட்டுங்க."

ம்ம்... என்றவாறு சத்யன் தன் அறைக்கு சென்று

"அனிதா வா ,ரூம் ரெடி"

"ஏன் சத்யன் நான் இதில தங்குறேனே."

"அது சரி வரா, இது எங்க ரூம். ஆபிஸ் வேலை கூட பார்ப்பேன். பைல் எல்லாம் இருக்கு"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

" நீ வா இதேபோல தான் நீ இருக்கப்போகும் அறையும்." அது சரி அம்மா என்னடா எண்டா இங்கே எந்த வசதிக்கும் குறைவில்லை என்பா, ம்.. சரி பார்போம் என முணு முணுத்தவாறு வந்தாள்.

முதல் வந்து போன அறை போலவே இல்லை. இந்த கொஞ்ச நேரத்தில் அந்தளவுக்கு அப்படியே மாறி யிருந்தது. உண்மையில் அசந்து போனாள்.ஆனால் சுதாவைப் பாராட்ட மனம் வரவில்லை.

"ம்...ம் பரவாயில்லை கட்டில் உறைகளை என்னை கேட்டு எனக்கு பிடித்த வண்ணத்தில் போட்டிருக்கலாம்."

சத்யன் புரிந்து கொண்டான். ஆனாலும் சுதாவைப் பார்த்து "ஆமாம் சுதா இனி அப்படி செய்யாதே விருப்பம் கேட்டு செய்" என கூறிவிட்டு போனான். உள்ளுக்குள் உவகை கொண்டாள் அனிதா.

சத்யனின் அழகு, பணம், அந்தஸ்து எல்லாம் தனதாக்க வேண்டி ஆசை கொண்ட அவளின் மனதின் வன்மம், "பார் உனக்கு இருக்கும் நல்லபெயரை நான் இல்லாமல் ஆக்குறேன்" என கறுவிக்கொண்டது.

சுதாவுக்கு மனம் ஒரு மாதிரி சுருங்கிவிட்டது. மதிய உணவை மாமியாருடன் சேர்ந்து தயாரித்தாள். "அத்தை நீங்க போங்க நான் மீதி வேலைகளை முடித்து வருகிறேன்."

சரியென முன்னறையில் உட்கார்ந்தார் சாரதாம்மா.

மதியம் ஒருமணி அனிதா வெளியே வந்தாள்.

"வாம்மா அனிதா" சாரதாம்மா வரவேற்றார்.

"என்னடா பசிக்குதா சாப்பிடுவோமா?"

"சரி அத்தையம்மா, ஆமா சத்யன் எங்கே அத்தை?"

"அவன், அவன் அறையில"

"இரு நான் கூப்பிடுறேன்"

" இல்ல அத்தை நான் போய் அழைத்து வருகிறேன்."

"சரி.."

சத்யன் அறைக்கு அனிதா சென்றபோது சத்யன் ஹெட்போன் மாட்டி பாட்டுக்கேட்டுக் கொண்டிருந்தான். கண்கள் மூடியிருந்தபடியால் அனிதா வந்தது தெரியவில்லை. கூப்பிட்டு பார்த்தாள் அவன் கண் திறக்கவில்லை. உடனே அருகமர்ந்து "என்ன சத்யன் நீங்க நான் அங்க இருந்து லீவ கொண்டாட வந்தா நீங்க இப்படி கண்டுக்காம இருக்கிறிங்க?" "இல்லம்மா அப்படியில்லை உனக்கும் வந்த அசதி தானே அதான், வா வெளியே போவோம்."

" ஏன்? என்ன நான் பிடிச்சா தின்னப் போகிறேன்."

"அதற்கில்லை, சாப்பாட்டு நேரம் அம்மா தேடுவா"

"ஆமா ஆமா அதற்குதான் நானும் வந்தேன்."

அவன் கைகளைப் பிடித்து தொங்கியவாறு அனிதா வருவதை கண்ட சுதாவுக்கு ஒரு மாதிரியாகிவிட்டது. ஆனாலும், அழகாக உணவுகளை அடுக்கி வைத்துப் பரிமாறினாள். அனிதா ரசித்து சாப்பிட்டாள். சாரதாம்மாவும் சத்யனும் கூடவே உபசரித்தனர்.

அனிதா சுதாவை மட்டும், மட்டம் தட்டுவதில் குறியாக இருந்தாள். சத்யன் கண்களால் பொறுமை காக்கவேண்டினான். அத்தையோ தம்பி பொண்ணு என ஏந்தி எடுத்தார். இரண்டு வாரமாக சத்யனும் அனிதாவை ஊரெல்லாம் சுத்திகாட்டினான். நிறைய பொருட்கள் வேண்டிக் கொடுத்தான். இதனையும் தாண்டி அனிதா அவன்மேல் தீவிர காதல் கொண்டாள். சத்யனிடம் நெருங்க முயற்சித்தாள். ஆனால் சத்யன் புரிந்தும் புரியாதது போல நடந்தும் கொண்டான்.அனிதா கிளம்ப வேண்டிய நேரம் வந்தது. வீட்டுக்கு புடவைக்காரன் வந்திருந்தான். விலைகூடிய புடவைகளை பார்த்து அனிதா எடுத்தாள். சுதா தன் இயல்பிற்கு ஏற்றால் போல் எடுத்தாள். ஆனால் சாரதாம்மா சுதா நீயும் நல்லதாவே எடுத்துக்கொள் என்றார்.

'பரவாயில்ல அத்தை,' என்றவளுக்கு சத்யன் பளீர் நீல நிறத்தில் பொட்டுவைத்த அழகிய சேலையை எடுத்து கொடுத்தான். "சுதா இதை எடு ரொம்ப அழகாயிருக்கும்." உடனே அனிதா எழுந்து "சத்யன் உங்க தேர்வு சூப்பர் அதை எனக்கு கொடுங்க" என்றவாறு சுதா வேண்டமுன் தான் பறித்தெடுத்தாள். சுதாவுக்கு கண் கலங்கிப் போச்சு. ஆனால் எதுவும்பேசாமல் தான் எடுத்தது போதும் என விலகினாள். எப்படியோ சத்யன் தேர்வு செய்த சாரி எனக்குக் கிடைத்தாச்சு என அனிதா பெருமிதமானாள். சுதா குமுறட்டும்... அடுத்தநாள் பயணம். "அத்தை, எனக்குப் போகவிருப்பம்இல்ல. அம்மாஓகே! ஆனால் அப்பா வரச் சொல்றார் நான் போய் திரும்பி வருவேன். என்றவளை சத்யன் புன்னகைத்த படி "இனிகணவனுடன் தான் வருவாய்" என்றான். "அப்படி நடக்காது இங்க தான் வாழபோறேன்." "சரி இப்ப ஏன்? அமைதியாய் போய் வா!" சரி என தன் அறைக்கு போனாள் அனிதா. சத்யன் காரை எடுத்துக்கொண்டு எங்கோ போய் வந்தான். இரவு அறையினுள் வேலைகளை முடித்துக்கொண்டு காத்திருந்தாள் சுதா. அழுதிருப்பாளோ தெரியவில்லை. இவன் வந்து பின்னால் அழைக்கவும் திரும்பாது

"சொல்லுங்க சாப்பாடு வைக்கவா?"

"வேண்டாம். சரி என்ன கோபமா அம்மணிக்கு."

"எனக்கென்ன கோபம்?"

"நீ கெட்டிக்காரி யாவையும் புரிந்து கொள்வாய் என நினைத்தேன்."

"ஓ............"

"இங்க பார்!" அவள் திரும்பவில்லை. சுதா மேல் விலை அதிகமான அதே வண்ண சாரியை பிரித்து போட்டான். அதுமட்டுமின்றி என் கண்ணம்மா வருத்தப்பட்டதிற்காய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதோ ஒரு நீல வண்ண அட்டிகையும். அவள் கண்கள் மலர்ந்தது.

"என்னங்க நான்..........." புரியுது, ஆசைப்பட்டு கட்டிக்கிட்ட கணவன் வேறு பெண்ணை தாங்குறானே என்றுதானே.

"இல்லடா நீ இந்த வீட்டின் எஜமானி. அவள் விருந்தாளி. உனக்கு ஈடா அவள் வர முடியுமா? சொல் அவ இருக்கும்வரை சந்தோசமாக வைத்திருந்து அனுப்ப வேண்டுமல்லவா. என் மாமாக்கு எல்லாம் சொல்லிட்டேன் இனி அவள் வருவதானால் கணவனுடன் தான் வருவாள்."

சத்யன் வருவதைக்கண்டு பின் தொடர்ந்து வந்த அனிதாக்கோ முகத்திலறைந்தாற் போல் உணர்ந்தாள். சுதா எம்பி கணவன் முகத்தில் முத்தம் பதித்துவிட்டு,

"ஆமாங்க எனக்கும் நிறைய வேலையிருக்கு, புறப்படுபவளை சந்தோசமாக அனுப்பி வைக்க வேணும்" என மெதுபுன்னகை சிந்தியபடி அணைத்துக்கொண்டாள் சத்யனை.

ஒரு கவிதை சொல்லவா என்றவனுக்கு,

"இப்பவா? ம்.... சரி" என பிகுபண்ணிவிட்டு அமர்ந்தாள்.

என் இதயத் தடாகத்தில்
ஒற்றைத்தாமரை நீ
என்றென்றும் ஒளிதரும்
நிலவும் நீ
எனக்கான ஆட்சி
உனக்கான சிம்மாசனம்
இரண்டும் என் காதலே
அது உயிர் நீயே

அடடா அடடா கவிதை கவிதை சிரிப்பொலி எங்கும் பரவியது.

• • • •

# பெண்

இரண்டு மன்னர்களுக்குள் சண்டை. தோற்றவனிடம் வென்றவன் சொன்னான்:

"நான் கேட்கும் ஒரு கேள்விக்கு, சரியான பதிலைச் சொன்னால், உன் நாடு உனக்கே"

**கேள்வி:** "ஒரு பெண், தன் ஆழ்மனதில் என்ன நினைக்கிறாள்...?" (வென்ற மன்னனின் காதலி, அவனிடம் இக்கேள்வியை கேட்டுவிட்டு, விடை சொன்னால்தான், நமக்கு திருமணம் என்று சொல்லியிருந்தாள்).

தோற்ற மன்னன், பலரிடம் கேட்டான். விடை கிடைக்கவில்லை. கடைசியாகச் சிலர் சொன்னதால், ஒரு சூனியக்காரக் கிழவியிடம் சென்று கேட்டான். **அவள்** : "விடை சொல்கிறேன். அதனால், அந்த மன்னனுக்குத் திருமணம் ஆகும். உனக்கு உன் நாடு கிடைக்கும். ஆனால் எனக்கு என்ன கிடைக்கும்?"

அதற்கு அவன் "என்ன கேட்டாலும் தருகிறேன்" என்றான்.

**சூனியக்காரக்கிழவி, விடையைச் சொன்னாள்:** "தன் சம்பந்தப்பட்ட முடிவுகளை, தானே எடுக்க வேண்டும் என்பதே, ஒரு பெண்ணின் ஆழ் மனது எண்ணம்".

இப்பதிலை அவன் ஜெயித்த மன்னனிடம் சொல்ல, அவன் தன் காதலியிடம் சொல்ல, அவர்கள் திருமணம் நடந்தது. இவனுக்கு நாடும் கிடைத்தது.

**அவன் சூனியக்கார கிழவியிடம் வந்தான். வேண்டியதைக் கேள் என்றான்.** அவள் "நீ என்னைத் திருமணம் செய்து கொள்ள வேண்டும்" எனகேட்டாள். கொடுத்த வாக்கைக் காப்பாற்ற அவன் ஒப்புக் கொண்டான். உடனே கிழவி ஒரு அழகிய தேவதையாக மாறிக் காட்சி அளித்தாள். அவள் சொன்னாள்: "நாம் வீட்டில் தனியாக இருக்கும் போது நான் கிழவியாக இருந்தால், உன்னுடன் வெளியே வரும்போது தேவதையாக இருப்பேன். ஆனால் நான் வெளியே உன்னுடன் வரும்போது, கிழவியாக இருந்தால், வீட்டில் உன்னுடன் அழகிய தேவதையாக இருப்பேன். இதில் எது உன் விருப்பம் ?" என்றாள். அவன் சற்றும் யோசிக்காமல் சொன்னான்: "இது உன் சம்பந்தப்பட்ட விஷயம், முடிவு நீதான் எடுக்க வேண்டும்"

**அவள்** "முடிவை என்னிடம் விட்டு விட்டதால், நான் எப்போதும் அழகிய தேவதையாக இருக்கத் தீர்மானித்து விட்டேன்.!" என்றாள். ஆம்...**பெண், அவள் சம்பந்தப்பட்ட முடிவுகளை அவளே எடுக்கும்போது, தேவதையாக இருக்கிறாள். முடிவுகள், அவள் மீது திணிக்கப்படும் போது, சூனியக்காரக் கிழவியாகி விடுகிறாள். அனைவரும் புரிந்து செயல்படுங்கள்.**

**கிறுக்கன் நான் ( நன்றி : முகநூல்)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இதுவரை........

அருணாசலத்தாரின் ஒரே மகன் கபிலன். அவன் படித்து ஆசிரியராகவேண்டுமென்பது அவர் ஆசை. அவன் பட்டப்படிப்பு முடித்து வந்த நேரம் நாட்டில் பிரச்சினைகள் ஆரம்பமாகியிருந்த நேரம். அதனால் தன் பிள்ளையைப் பாதுகாக்கும் நோக்கோடு அவனைக் கொழும்புக்கு அனுப்பிவிடுகிறார். கபிலனின் நண்பர்கள் மூவர். அவர்களில் சுந்தரேசனும் தங்கனுமே அவனுக்கு நெருங்கியவர்கள். தங்கன் இயக்கத்திற்குச் சென்றுவிடுகிறான். சுந்தரேசன் தங்கையின் படிப்புக்காக கொழும்பிற்கு வந்துவிடுகிறான். கபிலன் தன்னோடு கலாசாலையில் ஒன்றாகப் படித்த வசந்தியைச் சந்திக்கிறான். அவளின் மூலமாக அவள் படிப்பிக்கும் பாடசாலையில் ஆசிரிய வேலைக்காக விண்ணப்பிக்கிறான். அந்த வேலைக்கான நேர்முகப் பரீட்சை இன்று நடக்கிறது.

எழுந்து உள்ளே சென்று அதிபர் முன் நின்றான். அதிபர் அவனைப் மேலும் கீழும் பார்த்துவிட்டு "அமரும்" என்றார். அதிபர் கண்ணாடி போட்டிருந்தார். பருமனற்ற அளவான உடம்பு. முகத்தில் அதிபருக்குரிய கம்பீரம் தெளிவாகத் தெரிந்தது. கூர்மையான பார்வை. இவ்வளவும் அதிபரைப்பற்றி கபிலன் தனக்குள் சொல்லிக்கொண்டவை.

முன்னால் உள்ள கதிரையில் அமர்ந்தான்.

அதிபர் செருமிக் கொண்டு

" கனநேரமாய் வெளியில் இருந்தனீரோ?" என்று கேட்டார்.

" இல்லையே. ஒரு மணி நேரந்தான்." கபிலனுடைய இந்தப் பதில் அதிபரைக் கவர்ந்தமை அவரின் புன் சிரிப்பில் தெரிந்தது.

" உங்கடை வயது என்ன?"

" இருபத்தெட்டு"

" ம்.. இது பெண்களுக்கு மட்டுமான பாடசாலை என்று தெரியுமோ?"

"ஓம் தெரியும்."

" நீர் இருபத்தெட்டு வயதுப் பையன். வயதுவந்த பெண்கள் படிக்கிற பாடசாலையிலை எப்படி அனுமதிப்பது"

# கரும்பலகை................................


### அத்தியாயம் 7

கபிலன் அதிபரின் அறைக்குமுன்னால் வசந்தி கூறிய இடத்தில் இருந்து காத்துக்கொண்டிருந்தான். முப்பது நிமிடங்கள் தாண்டிவிட்டன. யாரும் அவனை அழைப்பதாக இல்லை. பாடசாலையில் படிக்கும் பிள்ளைகள் அவனைப் பார்ப்பதும் கொடுப்புக்குள் சிரிப்பதுமாகச் சென்று கொண்டிருந்தார்கள். கபிலனுக்கு ஒரு மாதிரியாக இருந்தது.

பாடம் முடிந்து வந்த வசந்தி இன்னும் கபிலன் இருப்பதைப் பார்த்து அவனருகில்வந்து " இன்னும் கூப்பிடவில்லையா?" என்று கேட்டாள். கபிலன் மௌனமாகத் தலையாட்டினான். "அவவுக்கு நான் சொல்லவா என்று?" கேட்டாள். கபிலன் வேண்டாமென்று சொல்லிவிட்டான். அவளும் அடுத்த பாடத்திற்குப் போய்விட்டாள்.

அப்போது அவன் இருக்கும் வீட்டுப் பிள்ளை அவனைக் காட்டி தன் நண்பிகளுக்கு ஏதோ சொல்வதைக் கவனித்தான். அவனுக்குச் சங்கோஜமாகவிருந்தது. இப்போது ஒரு மணித் தியாலமாகிவிட்டது.

அதிபரின் கதவு திறந்தது. அதிபரின் காரியதரிசி எட்டிப்பார்த்து அவனை உள்ளே வரும்படி கூறினா. அவனும் மெதுவாக





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நான் படிப்பிக்கத்தானே வாறன். அதற்கு ஏன் பயப்பிடுவான்? வயதுவந்த பிள்ளைகள் எல்லாம் என் மாணவிகளாக இருப்பார்கள்."

அவன் பதிலளித்தவிதம் அதிபருக்குப் பிடித்தது.

"நீர் எந்த ஊர்?"

"வடமராட்சி" கபிலன் வடமராட்சி என்று சொன்னதற்குப் பல காரணங்கள் உண்டு. அதிபர் வடமராட்சியைச் சேர்ந்தவரென்றும் அவருக்கு வடமராட்சியைச் சேர்ந்தவர்களை நன்கு பிடிக்கும் என்பதும் ஏற்கனவே அவனுக்குத் தெரியும்.

"ம்.. இனி நான் கேட்கப்போற கேள்விகள் கொஞ்சம் வித்தியாசமாக இருக்கும்."

அப்போது உதவி அதிபர் கதவைத் தட்டிவிட்டு உள்ளே நுழைந்தார்.

"மன்னிக்கவேணும் மிஸ்..வகுப்பிலை வேலைகளை ஒழுங்கு செய்ய நேரமாகியிட்டுது."

"பரவாயில்லை வந்து இருங்கோ."

அதிபர் அவனைப் பார்த்து " இப்ப விளங்குதா அந்த ஒரு மணி நேரம் ஏனெண்டு" என்று கேட்டார்.

தன்னைக் கூப்பிட ஏன் தாமதம் என்பதைக் கபிலன் புரிந்து கொண்டான்.

"இவ திருமதி தவபாக்கியம். இந்தக் கல்லூரியின் உப அதிபர்."என்றுஉபஅதிபரைஅவனுக்கு அறிமு கப்படுத்திவிட்டு

"உமக்கு என்ரை பெயர் தெரியுமோ?"

"ஓம்.. செல்வி மங்களம்"

அதிபர் சிரித்துக் கொண்டே

"சரி தம்பி.. இந்தப் பாடசாலை பெண்கள் பாடசாலை நீர் வாலிபப்பிள்ளை. ஒரு பேச்சிற்கு இங்கையுள்ள ஆராவது ஒரு பிள்ளை உமக்குக் காதல் கடிதம் தந்தால் என்ன செய்வீர்?"

இந்தக் கேள்வியால் சற்றுச் சங்கோஜம் அடைந்தான் கபிலன். உப அதிபரும் மெதுவாக சிரித்துக் கொண்டார்.

கபிலன் சிறிதும் தயங்காமல் " அப்படி ஒரு நிலை வந்தால் முதலில் அந்தப் பிள்ளையிடம் எனக்கும் அந்தப் பிள்ளைக்கும் இடையிலுள்ள உயர்ந்த உறவான ஆசிரிய மாணவ உறவைப் புரிய வைப்பேன். அதை அந்தப் பிள்ளை புரிந்து கொள்ளாமல் தொடர்ந்தால் அந்த விடயத்தை உங்கள் கவனத்திற்குக் கொண்டுவந்துவிட்டு நான் ஒதுங்கிக் கொள்வேன். "இந்தப்பதில் அதிபரை நன்கு திருப்திப் படுத்தியது.

"சரி ஏன் அந்தக் கடிதம் கிடைத்ததும் எனக்கல்லவா கொண்டுவந்து தந்திருக்கவேண்டும் "

"இல்லை மிஸ் அது தவறான நடைமுறை. அறியாமல் அந்தப் பிள்ளை செய்த தவறை அவள் புரிந்து கொள்ளாமலே மேலிடத்திற்குக் கொண்டு வந்து அவளின் எதிர்கால வாழ்க்கையை சீரழிக்கக் கூடாது என்பதனால்தான் அப்படிச் சொன்னேன்."

இந்தப் பதிலின் பின் அதிபர் தன்னுடைய தெரிவு நிரலில் ஒரு சரியைப் பதிந்தார்.

"உங்களது வகுப்பில் ஒரு பிள்ளை சரியான குழப்படியாக இருந்தால் என்ன செய்வீர்கள்?"

"உடனடியாகத் தண்டனை வழங்க மாட்டேன். முதலில் வாய் மூலமாக எச்சிரிக்கை செய்வேன். அதற்கும் அடங்காவிட்டால் சிறிய தண்டனை வழங்க முயற்சிப்பேன். மேலும் தொடர்ந்தால் அந்தப் பிள்ளையின் பெற்றாருடன் தொடர்பு கொண்டு கதைப்பேன். அவர்களும் தகுந்த நடவடிக்கை எடுக்காவிட்டால் மற்றப் பிள்ளைகளின் படிப்பைக் கருத்திற் கொண்டு விடயத்தை உங்களிடம் கொண்டு வருவேன்."

அதிபருக்கு அவனின் பதில் வியப்பைக் கொடுத்தது. இப்படியானவொரு அணுகுமுறை தங்கள் பள்ளிக் கூடத்தில் என்றைக்குமே இருந்ததில்லை என்று மனதிற்குள் நினைத்துக் கொண்டே உப அதிபரைப் பார்த்தார். அவரும் தலையை ஆட்டி ஆமோதித்தார்.

"நல்ல பதில். இப்படியான நடைமுறைகள் எங்கள் நாட்டில் எந்தப் பாடசாலையிலும் இருக்கவில்லை. உமக்கு எப்படி இவையெல்லாம் தெரியும்?"

"எனக்கும் தெரியும். என்னுடைய ஆசை முழுமையாக ஆசிரியனாக வருவதே. நான் மாணவனாக இருக்கும்போது ஆசிரியர்கள் ஒரு பிள்ளை குழப்படி செய்தால் உடனேயே அதிபரிடம் கொண்டு சென்று அந்தப் பிள்ளையின் எதிர் காலத்தைக் கேள்விக் குறியாக்கிவிடுகிறார்கள். இதனால் ஆசிரியனுக்குரிய குணாம்சங்களைத் தெரிந்து கொள்ள பல மேல் நாட்டுக் கல்வியியலாளர்கள் எழுதிய புத்தகங்களைப் படித்திருக்கிறேன். நீங்கள் எனக்கு இங்கு படிப்பிக்க அனுமதித்தால் இப்டியான திட்டங்களை அமுல்படுத்தத் தங்களிடம் கோரிக்கை விடுப்பேன். "

அவனை வியப்போடு பார்த்தார் அதிபர் மங்களம்.

"நீர் என்ன பாடங்கள் படிப்பிப்பீர்?"

"நான் கணிதம் பௌதிகம் கணக்கியல் தர்க்கவியல் விஞ்ஞானம் ஆகிய பாடங்களைப் படிப்பிப்பேன்."

"படிப்பித்தல் தவிர்ந்து வேறு என்ன திறமைகளை எங்களுக்குத் தருவீர்கள்?"

"நான் ஒரு எழுத்தாளனும் கூட. பாடசாலையில் நடைபெறும் பேச்சுப் போட்டிகள் நாடகங்கள் போன்றவற்றுக்கு உதவி செய்வேன். அத்தோடு நிர்வாக சம்பந்தப்பட்ட விடயங்களிலும் என் உதவி கிடைக்கும்"

"நிர்வாகத்தில் எப்படியான உதவிகளைச் செய்வீர்கள்?"

"பாடசாலைக்கான நேரசூசி போடுவதற்கான உதவிகள் புரிவேன்"

இப்படி அவன் கூறியதும் அதிபர் உதவி அதிபரைப் பார்த்தார். உதவி அதிபர்தான் அங்கு நேரசூசி அமைப்பது. ஒவ்வொரு வருட ஆரம்பத்திலும் அதனை அமைக்க அவர் படும்பாடு சொல்ல முடியாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“ கபிலன், நீங்கள் நேர்முகப் பரீட்சைக்கு வந்தமையையிட்டு நன்றி. முடிவை நாளை தபால் மூலமாக அறிவிப்போம். சென்று வாருங்கள்.” என்று கூறி அவனை அனுப்பி வைத்தார். அவனும் நன்றி கூறிவிட்டுப் புறப்பட்டுவிட்டான்.

கபிலன் போனபின்பு அதிபர் மங்களமும் உதவி அதிபர் தவபாக்கியமும் கபிலனைப்பற்றிக் கதைத்தனர்.

“ தவம் பையனைப்பற்றி என்ன நினைக்கிறீர்?”

“ பையன் புத்திசாலியாக இருக்கிறார். உலக அறிவும் நிரம்ப உண்டு . எல்லாவிடயங்களையும் துல்லியமாகச் சிந்திக்கிறார். எங்கள் பாடசாலைக்குத் தேவையானவர்தான் ஆனால் அவருடைய வயதுதான் யோசிக்க வேண்டியிருக்குது. எடுத்துப்போட்டு பிறகு இசக்குப் பிசகாக ஏதும் நடந்திட்டால் நிர்வாகத்திடம் வாயே திறக்கேலாமல் போய்விடும். எங்களுக்கும் ஒரு கணித ஆசிரியர் அவசரமாக வேணும். எதுக்கும் நீங்கள் ஒருக்கா நிர்வாகத்தாரோடை கதைச்சிய ளெண்டால் நல்லது. நாங்கள் பையனைக் கூப்பிட்டு ஒரு வகுப்புக்குப் படிப்பிக்கவிட்டுப் பார்ப்பம். அதற்கு செல்வ நாயகம் மிஸ்சையும் நிர்வாகத்திலையுள்ள சிவதாரிணியையும் வந்து பார்க்கச் சொல்லுவம். அவையின்ரை அபிப்பிரா யத்தையும் கேட்டு முடிவு செய்வம். அப்ப எங்களுக்குப் பிரச்சினை இருக்காது.” இப்படி உதவி அதிபர் சொன்னதும் அதனை ஆமோதித்த அதிபர்

“ சரி மிஸ் நீங்கள் வகுப்பிற்குப் போங்கோ. நான் மிச்ச அலுவல்களைப் பாரக்கிறன்” என்றதும் உப அதிபர் தவபாக்கியம் தன் வகுப்புக்குப் போய்விட்டார்.

அவர் போனபின்பு அதிபர் தொலைபேசியை எடுத்து சிவதாரிணியைக் கூப்பிட்டார். சிவதாரிணி தொலைபேசியை எடுத்ததும் “ வணக்கம் நான் அதிபர்மங்களம் பாடசா லையிலிருந்து கதைக்கிறன். உங்களோடை கொஞ்சம் கதைக்கவேணும் நேரமிருக்கோ?” என்று கேட்டார்.

“ ஓமோம் சொல்லுங்கோ. நீங்கள் எடுத்தால் ஏதும் அவசர காரியமாத்தானே இருக்கும்.”

“ பள்ளிக்கூடத்திற்கு உயர்தரவகுப்பிற்குப் படிப்பிக்க ஒரு ஆசிரியர் வேணும். நேற்று ஒரு ஆசிரியருக்கு நேர்முகப் பரீட்சை வைச்சனாங்கள். அவர் ஒரு ஆண் ஆசிரியர். வாலிபப்பருவம். இருபத்தெட்டு வயது. நல்ல கெட்டிக் காரன். வயதுதான் பிரச்சினை. நாங்கள் மீண்டும் ஒருக்கா அவரைக் கூப்பிட்டு படிப்பிக்கவிட்டுப் பார்க்கலாமென்று யோசிக்கிறம். அதை நீங்களும் செல்வநாயகம் மிஸ்சும் செய்ய வேண்டும். உங்களுக்கு எப்ப வயதியாக இருக்கும்?”

“பொறுங்கோ என்ரை நாட்காட்டியைப் பார்த்துச் சொல்லிறன்...ம்..வெள்ளிக்கிழமை நான் வரலாம் .எத்தனை மணிக்கு வரவேணுமென்பதைப் பிறகு சொல்லுங்கோ. நான் முழுநாளும் வீட்டைதான் இருப்பன்.”

“ மிக்க நன்றி. அறிவிக்கிறன்”

சிவதாரிணியின் அனுமதியைப்பெற்றுக் கொண்ட அதிபர் மங்களம் தனது காரியதரிசியைக் கூப்பிட்டு உப அதிபர் தவபாக்கியத்தை அழைத்து வரும்படி கூறினார்.

உப அதிபர் வந்ததும்,தான் சிவதாரிணியோடு கதைத்ததையும் அவர் சம்மதித்ததையும் கூறி எந்தப் பாடத்திற்குவிடலாம் என்பதுபற்றி இருவரும் சிந்தித்தனர். முடிவில் சாதாரணதர வகுப்பிற்கு நான்காம் பாடத்திற்கு வரச் சொல்லலாம் எனத் தீர்மானித்தனர்.

“ நீர் போய் செல்வநாயகம் மிஸ்சோடை கதைச்சு அவவுக்கும் விசயத்தைச் சொல்லி அவவின்ரை பாடத்திற்கு அந்த நேரம் ஒழுங்கு செய்யும்” என்று கூறி அவவை அனுப்பிவிட்டு நேரசூசியில் நாலாம் பாடம் எத்தனை மணிக்கு எனப் பார்த்தார். பதினொன்று முப்பது என்று இருந்தது. காரியதரிசியைக் கூப்பிட்டு கபிலனின் விலாசத்தைக் கொடுத்து விடயத்தை விளங்கப்படுத்தி கடிதத்தை தட்டச்சு செய்து கொண்டு வாரும் என்று கூறி அனுப்பி வைத்தார்.

பத்து நிமிடத்தில் கடிதம் அவர் மேசைக்கு வந்துவிட்டது. அதனைப் படித்துப் பார்த்து கபிலனுக்கு உடனே அனுப்பு வதற்கான ஒழுங்கையும் செய்து நிமிர்ந்தபோது நேரம் பாடசாலை முடியும் நேரமாகிவிட்டது.

..................

நேர்முகப் பரீட்சை முடிந்து வெளியில் வந்த கபிலன் நேரே விஜயலட்சுமி புத்தகசாலைக்குச் சென்று அங்கு புதிதாக வந்திருந்த சில புத்தகங்களை வாங்கிக்கொண்டு நேரே காந்தி லொட்சுக்குச் சென்று கைகளைக் கழுவிவிட்டு சாப்பிட உட்கார்ந்தான்.

மதிய வேளை கபிலனுக்கு நல்ல பசியாகவிருந்தது. மதிய உணவு பரிமாறுவதற்குத் தயாராகவிருந்தார்கள்.

காந்தி லொட்ஜ் வெள்ளவத்தையில் உள்ள ஒரேயொரு சைவ உணவுக்கடை. மிகவும் சுவையான உணவு தருவார்கள்

கபிலனும் தன் கைச் சேட்டினை மடித்துவிட்டுக் கொண்டு சாப்பிட ஆரம்பித்தான். வயிறு நிறையும்வரை சாப்பிட்டுவிட்டு எழுந்த போது வாசலைக் கவனித்தான் அவனது நண்பன் சுந்தரேசன் உள்ளே நுழைந்து கொண்டிருந்தான். கபிலன் கவனித்தது போலவே சுந்தரேசனும் கவனித்திருந்தான்.

சுந்தரேசன் இவனிடத்திற்கு வந்து முன்னால் அமர்ந்தான். கபிலனும் அமர்ந்துவிட்டான்.

“மச்சான் பள்ளிக்கூட அலுவல் எப்பிடி?”

“ பலகேள்வியெல்லாம் கேட்டவை. நானும் பதில் கூறினனான். அனேகமாகக் கிடைக்கும். நாளைக்குக் கடிதமூலம் அறிவிப்பதாய்க் கூறியிருக்கினம்.”

“ நானும் சிலவேலைக்கு முயற்சி செய்யிறன். எல்லாரும் அனுபவம் இருக்குதா எண்டு கேக்கிறாங்கள். வேலையைத் தந்தால்தானே அனுபவம் பெறலாம்.” என்று கூறிவிட்டுச் சிரித்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவனும் சாப்பிடத்தொடங்கினான்.

"வீட்டுச்சமையல்மாதிரி இருக்கு மச்சான்." என்று கூறிவிட்டு ரசித்துச் சாப்பிட்டான்.

பிறகு இருவரும் பணத்தைக் கொடுத்துவிட்டு வெளியே வந்து "மச்சான் இண்டைக்கெல்லே நாங்கள் புது அறைக்குப் போகவேணும்" என்றான் சுந்தரேசன்.

"ஓம்.. மச்சான் இண்டைக்கு நீ மூவ் பண்ணு.. நான் நாளைக்கு வாறன்." என்று கூறிவிட்டு கபிலன் தான் இருக்கும் வீட்டுப்பக்கம் நகர்ந்தான். சுந்தரேசன் தன்னுடைய உறவினர் வீட்டிலிருந்து பொருட்களை எடுப்பதற்காக அங்கு சென்றான்.

வீட்டுக்குச் சென்ற கபிலனுக்கு கடிதம் ஒன்று காத்திருந்தது. கடிதம் அருணாசலத்தாரிடம் இருந்துதான் வந்திருந்தது. அறைக்குள் சென்று அமைதியாகப் படித்தான்.

அன்புள்ள தம்பிக்கு

இங்கு யாவரும் நலம். சுந்தரேசன் உவ்விடம் வந்தமை எமக்கும் சந்தோசம். உன் வேலைக்கு என்ன நடந்தது?. நீ சுந்தரேசனோடு புதிய அறைக்குச் செல்லப் போவதாகக் கூறியிருந்தாய். மிகவும் சந்தோசம். எப்போது போகப் போகிறாய்? என்னுடைய நண்பருக்குத் தெளிவாக விளக்கிவிட்டுச் செல். அவர் மனம் நோகக் கூடாது. அவரின் பெயருக்கு சிறிதளவு பணம் அனுப்பியுள்ளேன். அவர் தருவார். அறை மாறும்போது பல செலவுகள் வரும். அவற்றைச் சமாளிப்பதற்காக அனுப்பியுள்ளேன். நன்றாக உடம்பைப் பார்த்துக் கொள்ளும்படி உன் அம்மா சொல்கிறாள். யாவும் நல்லபடியே நடக்கக் கடவுள் அருள் புரிவாராக.

இப்படிக்கு

அப்பா

கடிதத்தை மடித்து வைத்துவிட்டு வெளியே வந்து வீட்டு அங்கிளைத் தேடினான்.

அவர் சாப்பிட்டுக் கொண்டிருந்தார். அவர் சாப்பிட்டு வருமட்டும் முன் விறாந்தையில் போயிருந்து அன்றைய பத்திரிகைகளை வாசிக்கத் தொடங்கினான். பத்திரிகை பெரும்பாலான செய்திகள் யாழ்ப்பாணம் பற்றியே இருந்தன. அவைகளைப் பார்க்கும்போது கபிலனுக்குப் பயமாகவிருந்தது. சாப்பாடு முடிந்ததும் அவர் முன்னுக்கு வந்தார்.

" என்ன கபிலன் இண்டைக்கு பாடசாலை அதிபரைப் பார்த்தீர்களா?"

" பார்த்தேன் அங்கிள். அதிபரும் உப அதிபரும் சேர்ந்து பல கேள்விகள் கேட்டனர். எல்லாவற்றிற்கும் பதிலளித்தேன். அவர்கள் திருப்தி அடைந்த மாதிரித்தான் இருந்தது. நாளை கடிதமூலம் அறிவிப்பதாகக் கூறினார்கள்."

" கவலைப்படாதையும் கட்டாயம் கிடைக்கும்".

" அங்கிள் உங்கள் உதவிக்கு நன்றி. இன்னுமொரு விடயம் கதைக்கவேணும். என்னுடைய நண்பன் வந்திருக்கிறார். அவர் இருக்க சென்ற் லோறன்ஸ் வீதியிலை அறை கிடைச்சிருக்கு. நானும் அவரோடை போய் இருக்கலா மெண்டு பார்க்கிறன்."

" அப்பாவுக்குச் சொன்னனீங்களோ?"

" ஓம் அங்கிள் அப்பாவிட்டைச் சொன்னனான் உங்களிட்டைச் சொல்லியிட்டு மாறச் சொன்னவர்"

" எப்ப போகப் போறியள்?"

" நாளைக்குப் பின்னேரம்"

" எனக்கொன்றுமில்லை. கவனமாக இருக்கவேணும். போனாலும் இங்கை வந்து மகளுக்குப் பாடம் சொல்லிக் கொடுக்கவேணும்."

" கட்டாயம் அங்கிள். நான் வந்து சொல்லிக் குடுப்பன்."

" சரி அங்கிள் நான் படுக்கப்போறன்."

"சரி"

கபிலன் எழுந்து அறைக்குச் சென்றுவிட்டான்.

( இன்னும் எழுதுவோம்...)

• • • •

## அட்டைப்படவிளக்கம்

நாடுகளுக்கிடையில் போர் என்பது எவ்வளவுதான் பல காரணங்கள் முன் வைக்கப்பட்டாலும் பாதுகாக்கப்படுவோம் என்ற மக்களின் முழுமையான நம்பிக்கைகள் சுக்கு நூறாக வெடித்துச் சிதறிவிடுகிறது. இவற்றை ஈடு செய்வதோ அல்லது சரிப்படுத்துவதோ எவ்விதத்திலும் சாத்தியமற்றதாகிவிடுகிறது.


இவ் ஓவியத்தில் கண், மக்களின் கரங்கள், கண்ணுக்கு அணியும் வில்லை ஆகியன குறியீடுகளாக உள்ளன. ஒரு நாட்டில் வாழும் மக்களுக்கு கண்மணியில் உள்ள அநேகமான கரங்கள் குறியீடாக்கப்பட்டுள்ளது. கண்ணினைக் காப்பதற்காகவும் குறைகளை நீக்குவதற்காகவும் அணியப்படுகின்ற வில்லை என்பது கண்மணியையே காயப்படுத்துகிற ஆயுதமாகிறது. இந்த வலி என்பது தாங்கமுடியாததாகவும் நாம் கண்ணினை இழக்கும் நிலைக்கும் தள்ளுகிறது.

யுத்தம் என்பதன் முடிவில் மரணிப்பவர் அப்பாவி மக்களே என்பதையே குறியீடுகளால் காட்டப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பழையன கழிதல்



புது மனேஜர் சாய்தரன் தனது ஆடம்பரமான காரை விட்டு இறங்கி அலுவலகத்திற்குள் நுழைந்தபோது அத்தரின் நறுமணம் அந்தப் பகுதியை ஆக்கிரமித்தது அந்த நிறுவனத்தில் பணிபுரியும் ஊழியர்களின் மூக்கினுள் நறுமணம் நுழைய சகலரும் ஒருமுறை திரும்பிப் பார்த்தனர். விலை உயர்ந்த கோட் சூட் சப்பாத்துகளுடன் வெளிநாட்டு உயர்ரக சிகரெட்டையும் புகைத்தபடி ஆபிசில் நுழைந்த அந்த நிறுவனத்தின் உரிமையாளரான புது மனேஜர் சாய்தரனை எல்லோரும் எழுந்து நின்று வரவேற்றனர். புது மனேஜரின் வருகையை முன்னிட்டு ஒரு வாரத்திற்கு முன்பே ஆபீஸ் அறை முழுக்க கணனிகள் அலங்கார நவீன கவர்ச்சிகரமான சிலைகள், கண்ணாடி பீரோக்கள், மேசைகள், சூழலும் கதிரை, கண்ணை கவரும் திரைச்சீலைகள் என்று மாற்றப்பட்டிருந்தது. கம்பீரமான தோற்றத்துடன் சிகரட்டை ஊதியபடி தலைமை குமாஸ்தாவின் அறையினுள் சாய்தரன் நுழைந்த போது அந்த உயர்ரக சிகரட்டின் புதிய மனம் தாங்காது சிரமப்பட்டு மூச்சை அடக்கிக் கொண்டார் தலைமைக் குமாஸ்தா கேசவன். ஹலோ அங்கிள் என்று சாய்தரன் அவரின் கையை குலுக்க முற்பட்ட போது. அவர் இரு கரம் கூப்பி வணக்கம் தம்பி என்றார். அதை சற்றும் எதிர்பாராத சாய்தரன் சற்று ஏமாற்றம் அடைந்தாலும் அதை வெளிக்காட்டிக் கொள்ளாமல் உற்சாகமாக கதைத்து நிறுவனத்தில் நிர்வாகத்தை பற்றிய விடயங்களை கேட்டு தெரிந்து கொண்டான்.

அந்த நகரத்திலேயே "வாணி" புத்தக நிலையம் மிகப் பிரசித்தி பெற்று விளங்கியது. பலவிதமான தமிழ் நூல்கள் அச்சிடப்பட்டு உள் நாட்டில் மட்டுமல்ல அதிகமாக தமிழர்கள் வாழும் வெளி நாடுகளுக்கும் புத்தகங்களை ஏற்றுமதி செய்து பிரசித்தி பெற்றிருந்தது. "வாணி" புத்தக நிறுவனம் சாய்தரனின் தாத்தா காலத்தில் சிறிய புத்தகக் கடையாக ஆரம்பிக்கப்பட்ட இந்த நிறுவனம் இன்று பெரிய புத்தக நிலையமாக விளங்கியது. பாடசாலை ஆசிரியையாக இருந்த சாய்தரனின் தாத்தா மூர்த்தி சிறு வயது முதலே வாசிப்பில் அதிக ஆர்வம் கொண்ட வாசகனாக இருந்தவர். காலப்போக்கில் எழுத்துத் துறையிலும் ஆர்வம் கொண்டு பத்திரிகைகள், வானொலிகள் என்பவற்றுக்கு ஆக்கங்கள் எழுதி வந்தவர் தான் பெற்ற இன்பம் எல்லோரும் பெற வேண்டும் என்ற நல்லெண்ணம் கொண்டு வாசிப்பின் ஞான வாசனையை எல்லோரும் உணரவேண்டும் என்றும் சாதாரண புத்தகக் கடையாக ஆரம்பித்து தனது விடாமுயற்சியினால் பெரிய நிறுவனமாக மாற்றினார். அதன்பின் அவருக்கு வயது போகப்போக சாய்தரனின் தகப்பனான தன் மகன் கணேசன் கையில் பொறுப்பேற்று நடத்த உரிமை வழங்கினார். அதன்பின் மேலும் வளர்ச்சி அடைந்தது. பல பொக்கிஷம் போல் அரிய தமிழ் நூல்களை அச்சிட்டு பல நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் அளவுக்கு பிரசித்தி பெற்றது "வாணி" புத்தக நிறுவனம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதே பாரம்பரியத்தில் வந்த சாய்தரனுக்கும் சிறு வயது முதலே வாசிப்பில் ஆர்வம் கொண்டு இதழியல் துறையில் கல்வி கற்று பல்கலைக்கழகம் சென்று பட்டம் பெற்று நல்ல வசதியும் வாய்ப்பும் இருந்தபடியால் வெளிநாடு சென்று மேலும் அத்துறையில் பயிற்சி பெற்று அங்கேயே அத்துறையில் தொழில் புரிந்து கொண்டு இருந்தவன் சீனா நாடு மூலம் பரவி இன்று உலகையே அச்சுறுத்திக் கொண்டிருக்கும் கொரோனா covid-19 தொற்றுநோய் பிரச்சனை காரணமாக அவனின் பெற்றோரின் வேண்டு கோளுக்கிணங்கவும் தாய் நாட்டிற்கு திரும்பி வந்தான்.

ஸ்ரீலங்கா வந்து வெளிநாட்டில் உழைத்த பணமும் கையில் இருக்கவும் சில காலம் நண்பர்களுடன் கூடி உல்லாசமாக திரிந்தவனைக் கண்ட பெற்றோர். இவனுக்கு திருமணம் முடித்து புத்தக நிறுவனத்தை இவனிடம் ஒப்படைக்க வேண்டும் என்று முடிவு செய்து திருமண பேச்சுவார்த்தை நடக்கும் போதே நிறுவனத்தின் பொறுப்பை சாய்தரனிடம் ஒப்படைத்தனர். முதலில் கொரோனா நோய் அபாயம் முடிந்தவுடன் வெளிநாடு செல்லலாம் என்றால். அங்கு அதி தீவிரமாக தொற்று பரவி எல்லா நாடுகளிலும் லொக் டவுன் செய்து விமான போக்குவரத்துகளும் நிறுத்தப்பட்டதாலும் இங்கேயே சொந்த தொழிலை செய்து கொண்டிருப்போம். என யோசித்து நிறுவனத்தின் தலைமைப் பதவியை ஏற்றான் சாய்தரன்.

வெளிநாட்டில் படித்து அங்கேயே நவீன தொழில் நுட்ப அனுபவம் முறைகளை கற்று பழமையான முறைகளை மாற்றி நவீன முறையான கணினி முறையை பயன்படுத்தி நிறுவனத்தைப் புதுப்பிக்க முடிவு செய்தான். எனவேதான் நிறுவனத்துள் வந்தவுடன் தலைமை குமாஸ்தா கேசவன் இடம் எல்லா விபரங்களையும் கேட்டு தெரிந்து கோப்புக ளையும் கை ஏற்றுக்கொண்டான். தலைமைக் குமாஸ்தா கேசவன் அவனின் தாத்தா காலத்திலிருந்தே பணிபுரிந்து படிப்படியாக முன்னேறி தலைமைக் குமாஸ்தாவாக பதவியுயர்வு பெற்றவர். எனவே நிறுவனத்தில் அவருக்கு நல்ல மரியாதை மதிப்பு இருந்தது. புத்தக களஞ்சியத்தில் எல்லா விடயங்களையும் நுணுக்கமாகவும் விபரமாக அறிந்தவர்.

ஆனால் மிகவும் கண்டிப்பானவர் நேர்மையுடனும் கடமை உணர்வுடனும் உழைப்பவர். ஆபீசில் அரட்டை அடிப்பது சிகரெட் பிடிப்பது சொந்த வேலைகளுக்காக அலுவலக நேரத்தில் வெளியில் செல்வது அடிக்கடி சிற்றுண்டிச்சாலைக்குச் சென்று தேநீர் அருந்துவது இதெல்லாம் அவருக்கு அறவே பிடிக்காது. எனவே கேசவன் ஆபீஸில் எல்லோருக்கும் சிம்ம சொப்பனமாக திகழ்ந்தார். இங்கு வந்தவுடன் தன் குடும்பத்தையே மறந்து விடுவார்.

முதல் நாளே இவரின் மனைவி பத்மா மகளின் குடி புகுதல் வீட்டுக்கு செல்ல வேண்டும் லீவு போட்டு விட்டு வாருங்கள் என்று கூறியும் அதை பற்றி யோசிக்காமல். காலையிலே வேலைக்கு போகப் புறப்பட்ட கணவனிடம் “என்னங்க நேற்று நான் சொன்னேன் இன்னைக்கு லீவு போட்டுட்டு வாங்க மகளின் வீடு குடிபுகுதல் வீட்டுக்கு போக வேண்டும் என்று அதை காதில் வாங்காமல் இன்னைக்கும் வேலைக்கு போறீங்க என்னுடன் மகள் வீட்டுக்கு வாங்க” என்று கூறிய மனைவியிடம்,

“பத்மா இன்னைக்கு பெரிய ஐயாவின் மகன் முதல் முதல் ஆபீசுக்கு மனேஜராக வாரார். எனவே நான் கட்டாயம் அங்கே நிற்கணும் நீ போயிட்டு வா நான் முடியுமானால் வேலை விட்டு அந்திக்கு அப்படியே வாரேன் மகளிடமும் சொல்லு” என்று அதிகாலையிலேயே எழுந்து மழிக்கப்படாத தாடி, மீசை எல்லாம் மழித்து வேலைக்கு புறப்பட்டு விட்டார். கேசவன் எல்லா விடயங்களிலும் வித்தியாசமாக சிந்தித்து செயல்படுபவர் தொழில் என்றால் தீயாக பணிபுரிவார். எனவே அனேகமாக குடும்ப விடயங்களை மனைவியிடமே விட்டுவிடுவார். பத்மாவும் குடும்ப நிர்வாகத்தை திறம்பட நடத்தி வந்தார். தனது பிள்ளைகளையும் நன்கு படிக்க வைத்து பிள்ளைகளுக்கு வீடு கட்டிக் கொடுத்து. தங்கள் சொந்த வீடு வாசலுடன் வாழ்ந்தனர்.

இன்னும் சிறிது காலத்தில் ஓய்வு பெறவிருந்த கேசவன் வழமை போல் நேரத்தோடு சென்று புதிய மேனேஜர் சாய்தரனை வரவேற்க எல்லா ஏற்பாடுகளையும் செய்தார். ஆனாலும் நிறுவனத்தில் ஏற்பட்ட பாரிய மாற்றங்களை கண்டு மனதில் ஒரு நெருடல் ஏற்படவே செய்தது. முற்று முழுதாக கணினி மயப்படுத்தியதோடு ஆட்குறைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. கணினி அறிவு பெற்ற இளைஞர்களை பணியில் இணைத்துக் கொண்டது. போட்டித்தன்மை பொருளாதார சிக்கல் நிறைந்த வியாபார உலகில் இளைஞனான சாய்தாரனும் வேகமாகவும் விவேக மாகவும் நவீன உத்திகளை கையாண்டு செயல்பட்டான். எனவே வயது போன கணினி பயிற்சி இல்லாத தனது வேலைக்கு உத்தரவாதம் இல்லை என எண்ணத் தொடங்கினார்.

ஆனாலும் இவன் பிறக்க முன்னே இவனின் தாத்தா காலத்திலிருந்தே இங்கு தொழில் புரிந்து இந்த நிறுவனம் வளர்ச்சியடைய அயராது நானும் பாடுபட்டதால் உடனே அப்படி தன்னை வேலையிலிருந்து அனுப்ப மாட்டான் என்ற நப்பாசையும் அவர் மனதில் தோன்றியது. ஆனால் நினைத்ததற்கு மாறாக சாய்தரன் நிறுவனத்தை பொறுப்பேற்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு வாரத்திற்கு பின் அவர் அலுவலகத்தில் வேலையில் மூழ்கி இருந்த வேளையில். கேசவன் சார் உங்களை புதிய மனேஜர் அவரின் ஆபிசுற்கு வரச் சொன்னார். என்று சிற்றூழியர் ஒருவர் வந்து கூறியபோது. ஏதோ நிர்வாகம் சம்பந்தமாக கதைக்கவே தன்னை அழைக்கிறான் என்று தான் சின்ன வயது முதலே பார்த்து பழகி தன்னை அவன் அங்கிள் என்றும், அவரும் அவனை சிறு வயது முதலே தம்பி என்றும், அழைத்து பழகியதால் அவன் தனக்கு மேலதிகாரியாக வந்த பின்னும் சார் என்று அழைக்காமல் தம்பி என்று அழைக்கும் சாய்தரனை பார்க்க ஆபீஸ்க்கு சென்றார். இவரைக் கண்டவுடன் "குட் மார்னிங் அங்கிள் ஏன் நிற்கிறீர்கள் உட்காருங்கள்" என்று கதிரையை சுட்டி காட்டியவன். அவர் அமர்ந்ததும் அங்கிள் உங்களிடம் முக்கிய விடயமென்று கதைக்க வேண்டும் அதான் வரச்சொன்னேன். அங்கிள் நீங்கள் தாத்தாவின் காலத்திலிருந்தே இந்த நிறுவனத்தில் பணிபுரிந்து உள்ளீர்கள். அதுவும் விசுவாசத்துடனும் நேர்மையாகவும் பாடுபட்டு உழைத்து எல்லோரின் நன்மதிப்பை பெற்று உள்ளீர்கள். ஆனால் இப்போது இந்த Covid 19 வைரஸ் பிரச்னையால் உலகமே இன்று பொருளாதார பிரச்சனையில் சிக்கி விழிபிதுங்கி நிற்கிறது. எல்லா துறையிலும் நிறுவனங்கள் நஷ்டம் ஏற்பட்டு மூடும் அளவுக்கு நிலைமை மோசமாக உள்ளது. எனவே தற்போதைய நிலைமையை யோசித்து நானும் ஒரு முடிவு எடுத்துள்ளேன். எமது புத்தக நிறுவனத்தின் ஊழியர்களை குறைத்து கம்பியூட்டர் அறிவு உள்ள இளம் வயதினரை தொழிலுக்கு சேர்த்து, பயிற்சி அளித்து நிறுவனத்தை புதிய முறையில் துரிதமாக நிர்வாகித்து முன்னேற்ற வேண்டும் என்றும் இதற்கு வெளிநாட்டில் நான் பெற்ற நவீன தொழில்நுட்ப அறிவையும் யுக்திகளையும் கையாண்டு முன்னேறலாம் என்று நினைக்கிறேன்.

எனவே, அங்கிள் நீங்களும் பல வருடங்கள் தொழில் புரிந்து நல்ல பெயர் எடுத்து உழைத்து களைத்து ஓய்வுபெறும் நிலையில் உள்ளீர்கள். இனி வயது போன காலத்தில் குடும்பத்தாருடன் சந்தோசமாக ஓய்வு நேரத்தை கழியுங்கள். உங்களின் கோப்புகளையும் (File) முடித்து உரிய முறைப்படி உங்களுக்குப் பணம் சீக்கிரம் கிடைக்க எல்லா ஏற்பாடுகளையும் செய்துள்ளேன். என்று தனக்கே உரிய பாணியில் துடிப்புடன் வேகமாக கூறி முடித்தான். இதை இவ்வளவு சீக்கிரம் எதிர்பாராத கேசவனுக்கு அதிர்ச்சியாக இருந்தது. அவரை அறியாமலேயே துக்கம் தொண்டையை அடைத்து கண்கள் கலங்கின. இருந்தும் அவர் தான் உணர்வுகளை மிக சிரமப்பட்டு அடக்கிக் கொண்டார். பேச முடியாது திணறி பின் தன்னை கட்டுப்படுத்திக் கொண்டு சரி தம்பி நான் நாளையிலிருந்தே வீட்டிலே நிற்கிறேன் என்று கூறி எங்கே சாய்தரன் தன் கண்கள் கலங்குவதை அறிந்து விடுவானோ என்று வேகமாக கதிரையை விட்டு எழும்பி தன் அறையை நோக்கி வேகமாக நடந்தார். அன்று மாலை அலுவலகம் முடிந்து வீட்டுக்கு புறப்படுவதற்கு முன் தனது சக ஊழியர்களைப் பார்த்து நாளைக்கு நான் வேலைக்கு வரமாட்டேன் என்று கூறிவிட்டு. வேகமாக வெளியேறினார். அவர்கள் ஏதும் கேட்டு விடுவார்கள் என்று அவர் சொன்னதன் அர்த்தம் அப்போது புரியவில்லை. அடுத்தநாளே தெளிவாக புரிந்தது எல்லோருக்கும்.

மறுநாள் காலையில் அவரின் மனைவி பத்மா வழமைபோல் விடியவே எழும்பி தேனீர் தயாரித்து மேசையில் வைத்துவிட்டு சமையலறைக்குச் சென்று சாப்பாட்டை தயாரித்து விட்டு மீண்டும் வந்து பார்த்தபோது தேனீர் கோப்பை தேநீருடன் அப்படியே இருப்பதை பார்த்து யோசனையுடன் வழமையாக பத்மா தேநீர் தயாரிக்கும் முன்பே எழுந்து காலைக் கடன்களை முடித்து ஆபீசுக்கு போக ஆயத்தமாகி பைல்களுடன் ஹாலில் அமர்ந்து இருக்கும் தன் கணவன் இன்னும் வரவில்லையே ஏதும் சுகமில்லையோ என்று படுக்கை அறையை எட்டிப் பார்த்தபோது கேசவன் விழித்தபடியே படுக்கையிலிருந்து மனைவி வருவதை கூட கவனிக்காமல் ஏதோ யோசனையில் ஆழ்ந்திருப்பதை பார்த்துவிட்டு கணவனிடம் பத்மா "என்னங்க இன்னிக்கு லீவா, இன்னும் எழும்பாமல் படுக்கையிலே இருக்கீங்க. நான் தேதண்ணி ஊத்தி வச்சு எவ்வளவு நேரம். ஆறியும் போச்சு ஏதும் சுகமில்லையா " என்று கதைத்துக் கொண்டே போன பத்மாவை பார்த்து கேசவன், இல்லை பத்மா இனி நான் ஆபீசுக்கு போக வேண்டிய அவசியமில்லை. "புது மனேஜர் தம்பி எனக்கு வயது போனதால ஓய்வு எடுக்கச் சொல்லி விட்டார்." என்று குரல் கம்ம கூறியதைக் கேட்ட பத்மாவும் அதிர்ச்சி அடைந்து, என்னங்க ஓய்வு பெற இன்னும் கொஞ்சம் காலம் இருக்குதானே அதுக்குள்ள ஏன் வேலையை விட்டு நிற்பாட்டினார் மனேஜர் தம்பி. அதுவும் நேற்று இரவு கூட என்கிட்ட சொல்லவே இல்லையே ஏன் என்று கணவனிடம் கேட்கவும்.

"இல்லை பத்மா நேற்றிரவு அதை சொல்லி இருந்தால் நீ கவலைப்பட்டு தூங்காம புலம்பிக்கிட்டு இருப்ப உனக்கு பிரஷர் வேற இருக்கு அதான் சொல்லவில்லை." என்று மனைவியை சமாதானப்படுத்தினார்.

" நீங்கள் குடும்பத்தை கூட கவனிக்காமல் வேலை வேலை என்று ஓடி ஓடி உழைத்தீங்க இப்ப அவங்க தேவைகள் முடிந்த பின் உங்களை ஒதுக்கி விட்டார்கள். வயது போய் விட்டது என்று நான்தான் முந்தியே உங்களுக்கு சொன்னேனே. கஷ்டப்பட வேணாம் நீங்க தான் என்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேச்சைக் கேட்கவே இல்லை. இப்போ கம்யூட்டர் காலம்" என்று சொல்லி தூக்கி எறிந்திட்டாங்க. இந்த உலகமே இப்படித்தான் தேவையானபோது பயன்படுத்திவிட்டு தூக்கி எறிந்திடுவாங்க என்று தன் மன ஆதங்கத்தை வெளிப்படுத்தினாள். தன் கணவன் கவலையுடன் இருப்பதைப் பார்த்து.

புத்தக நிறுவனத்தின் நிர்வாகத்தை பொறுப்பேற்ற இளைஞனான புது மனேஜர் சாய்தரன் உடனே ஆபீஸ் முழுக்க கணினி மயப்படுத்தி சுறுசுறுப்பாகவும் நேர்த்தியாகவும் வேலைகளை சிறந்த முறையில் செயல்பட தொடங்கினார். அதேசமயம் தன் அலுவலகத்தில் பணிபுரிந்து விலக்கப்பட்ட ஊழியர்களையும் அவன் ஒரேடியாக மறந்து விடவில்லை. அவர்களின் சேவைக்கால பணக் கொடுப்பனவுகள் எல்லாம் உரிய முறையில் கணக்குகள் முடித்து தாமதமில்லாமல் கிடைக்க ஏற்பாடு செய்திருந்தான். அத்தோடு இன்றைய கொரோனா தொற்றுநோய் அணுகாமல் முகக்கவசம் அணிந்து தொற்று நீக்கிகள் பயன்படுத்தி சமூக இடைவெளியை பின்பற்றி எல்லா ஊழியர்களையும் அழைத்து கூட்டம் நடத்தி அவர்களை எல்லாம் கௌரவப்படுத்தி பாராட்டு விழா ஒன்று நடத்த ஏற்பாடு செய்தான். அதன்படி எல்லோருக்கும் அழைப்பிதழ் அனுப்பப்பட்டது அந்த அழைப்பை ஏற்று தலைமைக் குமாஸ்தா கேசவன் முதன் முதல் தன் மனைவியையும் அழைத்துக்கொண்டு விழாவுக்கு சென்றார். விழாவில் கேசவனின் நீண்டகால நேர்மையான தன்னலமற்ற சேவை, நிறுவனத்தின் முன்னேற்றத்திற்கு அவரின் நிர்வாகத் திறமை, எல்லா ஊழியர்களையும் மதித்து சேவை பெறும் திறமை, எல்லாம் பாராட்டிப் பேசிய சாய்தரன் தன் வயது போன தகப்பனையும் விழாவுக்கு அழைத்து வந்து அவர் கையாலேயே கேசவனுக்கு பொன்னாடை போர்த்தி விலை உயர்ந்த பரிசுப் பொருட்கள், கேடயம் எல்லாம் வழங்கி கேசவனை கௌரவப்படுத்தி மனம் குளிர மகிழ்வித்தான்.

விழா மிகவும் விமர்சையாக பாராட்டும் வண்ணம் இனிதே முடிந்தது. நிறுவனத்தை சுற்றிப் பார்க்க ஆசைப்பட்ட தன் மனைவிக்கு சுற்றிக் காட்ட வேண்டும் என்று உள்ளே நுழைந்து பார்த்த இருவரும் மிகவும் நவீனமயத்துடன் நேர்த்தியாகவும் கணினிமயத்துடன் வடிவமைக்கப்பட்டிருந்த ஆபீஸ் அறைகளைப் பார்த்து வியந்த வண்ணம் இதே நேரம் கடைசியாக அவர் முன்பு வேலை செய்த அறையை ஆவலுடன் எட்டிப் பார்த்தபோது அவர் முன்பு பாவித்த கதிரை மேசை எல்லாம் அகற்றப்பட்டு பழைய பொருட்களோடு தலைகீழாக கிடந்தன பழைய சாமான்கள் ஏற்றும் லொறியில் ஏற்றுவதற்காக ஓ... இது இப்போது கணினியுகம் மட்டுமல்ல கலியுகம் கூட. பழையன எல்லாம் கழிந்து புதியன புகுத்தப்படுகிறது என்று மனதிற்குள் எண்ணியவாறு மனதை திடப்படுத்திக் கொண்டு இனியாவது தான் தன் மனைவி பிள்ளைகளுக்கு உதவியாக அவர்களுடன் சந்தோஷமாக நாட்களை கழிக்க வேண்டும் என்று எண்ணி மனைவியுடன் ஜோடி சேர்ந்து மகிழ்வுடன் வீட்டுக்கு சென்றார்.

• • • •

## மரணம்

பொருளாதார தேவை அதிகரித்துப் போட்டியும் பொறாமையுமாக இருக்கிற இந்த வாழ்வில் ரமண



ருடைய வாக்கியங்கள் மலரைப்போல நம் நெஞ்சைத்தொட்டு ஆசுவாசப் படுத்துகின்றன. இதுவல்லவே என் வாழ்க்கை என்று ஆர்ப்பாட்டங்களிலிருந்து விடுபட்டு அமைதியை நோக்கித்திரும்ப அவை பெரிதும் உதவி செய்கின்றன. சத்தியத்தை நோக்கி வெகு வேகமாக அழைத்துப் போகின்றன.

சத்தியத்தைத் தொட்டவர்க்கு மரணத்தைப்பற்றிய பயம் இல்லாத போது வாழ்வின் ஒவ்வொரு நொடியையும் நன்றாக அனுபவிக்க முடியும். வாழ்வை நன்றாக அனுபவித்தவர்க்கு உள்ளுக்குள் மிகப்பெரிய நிறைவு ஏற்படும். அந்த நிறைவுதான் சொர்க்கம். அந்த நிறைவுதான் கடவுளுக்கு அருகே கொண்டு வருகிறது. ஹோமமும் யாகமும் பக்தியும் யோகமும் மற்ற சடங்குகளும் எளிதில் கொடுக்காத ஒரு விடயத்தை பகவான் ஸ்ரீரமண மகரிஷி கொண்டு வந்து நம்முடைய கைகளில் கொடுக்கிறார். நாம் தவறவிடாமல் எடுத்து அதை விழுங்கவேண்டும். ஒரு சிறு முயற்சி அவரை நோக்கிய ஒரு பார்வை நம்மைப் பெரிய அளவில் மாற்றும்.

-பாலகுமாரன்-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்க்கை வாழ்வதற்கே

குமுதா சலனமற்றிருக்கும் வானத்தையே பார்த்த வண்ணமிருந்தாள். தலை கனத்தது. எனக்கு மட்டுமேன்? மீண்டும் மீண்டும் அந்தக் கேள்வியே சுற்றிச்சுற்றி வந்து கலங்கடித்தது. சின்னஞ்சிறு சிறுமியாய் காலம் அப்படியே போய்க்கொண்டிருக்கக் கூடாதா? நான் ஏன் வளர்ந்தேன்? இந்தப் பரந்த உலகத்தில் இந்தச் சிறு தீவில் ஏன் பிறந்தேன்? இந்தப் பூமிப்பந்தில் எங்கோ ஒரு மூலையில் பிறந்திருக் கலாமே. ஒரு நாளைக்கு ஐம்பதுமுறை இப்படி நினைத் திருப்பாள். உலகின் வேறு ஒரு பக்கத்தில் பிறந்திருந்தால் தனக்கு இந்தக் கொடுமை நடந்திருக்காது என்று பேதையாக நம்பினாள்.

வசதியான குடும்பத்தில் பிறக்காததோ போர் நெருக்கடிக்குள் அண்ணாவை, அக்காவை இழந்ததோ அவளைப் பெரிதும் பாதிக்கவில்லை. எத்தனையோ பேரின் மரணங்களைப் பார்த்துப் பார்த்து மனம் வரண்டிருந்தது. அப்பா, அம்மா, தம்பி, தங்கை என்று குடும்ப உறவுகள் சூழ்ந்திருக்க அண்ணா, அக்காவின் இழப்பு பெரிசாய் தெரியவில்லை. எப்படி அம்மா எல்லாவற்றையும் தாங்கி தங்களை வளர்த்து ஒரு நிலைக்கு கொண்டு வந்தா என்பதை யோசிக்கவுமில்லை. எதையும் யோசிக்காத வாழ்வின் கனம் தெரியாதவளாக எப்போதும் அரட்டையும், சிரிப்பும் காலம் அப்படியே போயிருக்கக் கூடாதா? மரணம் இது வரைக்கும் அழுகையையும், சோகத்தையும் திணித்து விட்டுச்செல்லும் என்று மட்டுமே தெரிந்து வைத்திருந்தாள். தன் தந்தையின் மரணம் தன் இருப்பை இல்லாமலாக்கி வெறுமையை உண்டாக்கும் என்று மட்டுமே நினைத்து இருந்தாள். ஆனால் அப்பா என்ற வெற்றிடம் தன் வாழ்க்கையையே புரட்டிப் போட்டுவிடும் என்று குமுதா கனவிலும் நினைக்கவில்லை.

அலங்கோலம் என்று ஒன்று இருப்ப தால்தான் அழகின் பெருமை தெரிகிறதோ?அப்பா இல்லாதபோதுதான் அப்பா என்பது ஒரு உறவல்ல, முழுமையான ஒரு பாதுகாப்பு வளையமென்பது விளங்கியது. குமுதா நெஞ்சு விம்ம அழுதாள். அப்பாவை நினைத்து அழுவதாகத்தான் முதலில் எல்லோரும் நினைத்தி ருந்தார்கள். ஆனால் அவள் தன் வாழ்க்கையையே இழந்திருக்கிறாள் என்பது மாதங்கள் போகத்தான் விளங்கியது. தந்தையின் மரணவீட்டிற்கு வந்து இருந்த யாரோதான் இதற்கு காரணம் என்றாலும் அவன் யாரென்று அறிவதிலோ மற்றவர்கள் கூறுவதுபோல் அதை அறிந்து அவனை மணப்பதிலோ எள்ளளவும் அவளுக்கு உடன் பாடில்லை.

தந்தையை இழந்த அவலத்திலிருக்கும் ஒரு சிறு பெண்ணை இருளும், மழையும் சூழ்ந்திருந்த நேரத்தில் அவள் இளமையைச் சூறையாடி ருசி பார்த்த மிருகத்தை திருமணம் செய்து வாழ முடியுமா? ஏன் நான் கத்திக் கூச்சலிட்டு என்னைக் காக்கவில்லை? ஆயிரந்தடவை தன்னைத்தானே கேட்டுப் பதில் தெரியாமல் தவித்து விட்டாள். மற்றவர்களும் அதே கேள்வியைக் கேட்டு விட்டார்கள். பதில் தெரியாது இன்றும் திகைத்து நிற் கின்றாள். இருட்டு ஆண்களைத் தப்பு செய்யத்தூண்டும். நீதான் உன்னைக் காப்பாற்றியிருக்க வேண்டும். எல்லோரும்



இதை மீண்டும் மீண்டும் சொல்ல என்னைத் தடுத்தது அதீத பயமா? பயத்தில் என்னசெய்வதென்று தோன்றவே இல்லை என்று சொன்னால் யாரும் நம்பத் தயாராயில்லை.

ப்து

மாதங்கள் கடக்க அவள் பட்டபாடு கொஞ்ச நஞ்சம் இல்லை. ஆரம்பத்தில் தெரிந்தவுடன் சிலர் குழந்தையை அழித்துவிட வேண்டும், அல்லது அவனைக் கண்டுபிடித்துக் கல்யாணம் செய்தவைத்துவிட வேண்டு மென்று தீர்ப்புக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூறினார்களே தவிர அவளின் மனநிலையை யாரும் கணக்கில் எடுத்துக் கொள்ளவேயில்லை. பிறந்த குழந்தையை அவள் ஏறெடுத்துப் பார்க்கவே மறுத்து விட்டாள். நீயெல்லாம் ஒரு தாயா என்று எல்லோருமே அவளைப் பேசும்போது தன் மனதிலுள்ளதைச் சொல்லத் தெரியாமல் அருவருப்புடனேயே அந்தக்குழந்தையைப் பார்ப்பதைத் தவிர்த்தாள். எங்கேயாவது இதைக்கொண்டு போங்கோ ஆக்ரோஷத்துடன் கத்தும் குமுதாவை அவள் அம்மாவால் புரிந்து கொள்ள முடிந்தது.

ஆஸ்பத்திரியிலேயே அவள் மோசமாக நடந்து கொண்டதினால் மனநலமருத்துவர் வரவழைக்கப்பட்டார். அந்த மருத்துவரும் அன்பானவராக இருந்ததினால் குமுதா மனம்விட்டு பேசினாள். அன்றைய நிகழ்ச்சியைப்பற்றிப் பேசும்போதே நடுங்கும் தன் விரல்களை இறுக மூடி நெஞ்சு படபடக்க மயங்கிச் சாய்ந்தாள். மயக்கம் தெளிந்த குமுதாவின் கண்களில் பயம், ஏக்கம், சோகம், கலக்கம் என்று எல்லாம் கலந்த ஒரு கலவையை மனநலமருத்துவர் சாரதா கண்டு வேதனையடைந்தார். பதினேழே வயதான திருமணம், குழந்தை என்று எதைப்பற்றியுமே அறிந்திராத ஒரு அப்பாவிப்பெண் குரூரமாக கெடுக்கப்பட்டிருப்பது எவ்வளவு வேதனையான விஷயம் என்பது அவருக்குப் புரிந்தது. குமுதாவின் தாயை தனியே அழைத்துப் பேசினார். துடுக்காகப் பேசும் சிறுமிகள் இப்படியான சிக்கலுக்குள் மாட்டுப்படமாட்டார்கள். வெகு பணிவான திருப்பிப் பேசத் தெரியாத பயந்த பெண்பிள்ளைகள் எதிர்க்கத் தைரியமின்றிப் பணிந்து போய்விடுகிறார்கள். இதற்கு முழுப்பொறுப்பும் பெற்றோரே ஏற்றுக் கொள்ள வேண்டும். திருப்பிக் கதைக்காதை, பணிவாக இரு என்று அவர்கள் மூளையில் சிறு வயதிலிருந்தே ஆணி அடித்தது போல் சொல்லிச் சொல்லி வந்ததே இவ்வளவு பெரிய சிக்கலில் கொண்டுபோய் விட்டிருக்கிறது. அதோடு எதற்கும் முரண்டு பிடிக்கத் தெரியாத அப்பாவித்தனம், ஆண்பெண் உறவு பற்றித் தெரியாத அறியாமை எல்லாம் இதற்கு காரணமாகிவிட்டது. இனி காரணகாரியங்கள் தெரிந்து ஒரு பயனுமில்லை. என்றாலும் இதை ஒவ்வொரு பெற்றாரும் தெரிந்து வைத்திருக்க வேண்டும். பயத்தை ஊட்டியூட்டி அவள்மேல் திணித்ததில் தைரியமின்மை இப்படியொரு தப்புக்கு காரணமாகிவிட்டது. அவளுடைய பயம் பிரசவத்தின் போது உடைபட்டுவிட்டது. இப்போது அவளுக்கு எல்லாமே புரிகிறது. அந்தக் குழந்தையைப் பார்க்கும்போதெல்லாம் அவளைக் கெடுத்த மிருகத்தின் ஞாபகம் வருவதை அவளால் தடுக்க முடியாது. அந்தக் குழந்தையின் முகத்தில் அக்கொடூரனின் சாயல் தெரியும். அதை அவளால் எப்படித் தாங்க முடியும். இந்தக் குழந்தையை நீங்கள் யாருக்காவது கொடுத்துவிடுங்கள், அல்லது ஏதும் காப்பகத்தில் விட்டுவிடுங்கள். அதுதான் அவளுக்கு நல்லது.

மனநலமருத்துவரின் பரிந்துரை மற்றவர்களுக்கு கொடூரமானதாக இருந்தாலும் அதுவே குமுதாவை மனநோயாளியாக்கும் கொடுமைக்குள்ளிருந்து மீட்க உதவுமென்பது எல்லோராலுமே ஏற்கக் கூடியதாக இருந்தது. இந்தப் பத்து மாதமும் அடிக்கடி குளித்துவிட்டு வரும் மகளின் செயலுக்கு காரணம் தெரியாதிருந்த தாய் இப்போது புரிந்துகொண்டாள். காமுகக் கொடூரனின் கைபட்ட இடங்களை அருவருப்பு தாங்காமல்தான் குளித்து இருக்கிறாள் என்பது. சாரதா கூறிய வார்த்தைகளிலுள்ள உண்மைகளைக் காலங்கடந்து உணர்ந்து வேதனை கொள்கிறார் அத்தாய்.

சமுதாயம் போட்ட ஒரு வட்டத்துக்குள் எம்மைத் திணித்துக் கொண்டு வாழ நினைக்கக் கூடாது. வாழ்க்கையென்பது வாழ்வதற்குத்தான். மற்றவர்கள் என்ன நினைப்பார்களோ என்று நினைத்துக் கையிலிருக்கும் வாழ்க்கையைத் தவற விட்டுவிடக் கூடாது. இப்போது இந்தச் சின்னப் பெண்ணின் வாழ்க்கை தாயான உங்கள் கையில் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. சரியான முடிவெடுத்து அந்தக் குழந்தையை எங்காவது காப்பகத்தில் சேர்த்துவிட்டு அவளுக்கு ஒரு நல்லவனாகப் பார்த்துக் கல்யாணம் செய்துவிடுங்கோ சாரதா சொன்ன வார்த்தைகளெல்லாம் நித்திரையிலும் காதுகளில் கேட்ட வண்ணமிருந்தது.

தன் நெருங்கிய உறவுகளுக்குப் புரியவைத்து தன் மகள் குமுதாவுக்கு நல்ல ஒரு துணையைச் சேர்த்ததில் அந்தத் தாய் வெற்றி பெற்றுவிட்டாள். துர்ச்சம்பவத்தை கெட்ட கனவாக மறந்து குமுதாவும் வாழ்க்கை வாழ்வதற்கேயென வாழ்ந்து கொண்டிருக்கிறாள்.

• • • •

எழுத்து என்பது உணர்வோடு ஒன்றி இருக்கவேண்டும்.
அந்த உணர்வு மக்களின் நலனை நோக்கி
உருவானதாக இருக்கவேண்டும். அப்போதான் அந்த
எழுத்து காலத்தை வென்று வெற்றிவாகை சூடும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதுக்காட்டுச்சந்திக்கடை வடையும் வடிவான காதலும்

1

**கா**லைப் பொழுது, கிழக்கு அடிவானம் செந்நிறங்களை அள்ளிவீசி அழகு காட்டியது. சிவப்பு நிறமான சூரியக்கோளம் மெல்லமெல்ல மேலே எழுந்துகொண்டிருந்தது. கண்கவரும் காட்சி, அது. அதை இரசித்துப் பயணம் செய்ய மனதுக்கு இதமாக இருந்தது. மிதமான காற்று வீசுகிறது. வீதியோரங்களிலும், வீதியிலிருந்து தூரமாகவும் சடைத்து வளர்ந்த மரங்கள் நிறைய நிற்கின்றன. மரக்கிளையிலுள்ள இலைகளில் பனி பதுங்கிக் கொண்டிருந்தது. காற்றானது இலைகளைத்தடவி குளிரைச் சுமந்து வந்தது. அது என் மேனியெங்கும் படரவிட்டு பரவசமாகப் போகிறது.

காலை நேரம் கண்களுக்கு அழகானது மட்டுமில்லை, மனதுக்கு இரம்மியமானதும்கூட.

கொடிகாமம் தாண்டி, மிருசுவிலுக்குக்கிட்ட வந்துவிட்டேன். இடது கையிலுள்ள மணிக் கூட்டை சடுதியாகப் பார்க்கிறேன். நேரம் ஆறுமணி ஆறுநிமிடம் ஆகியிருந்தது. என் பார்வைகள் வீதிவழியே போய் வருகின்ற வாகனங்களின் வேகங்களை மனக்கணக்குப் போடுகின்றன. ஏஒன்பது (A9) வீதியில் வாகனம் ஓட்டுவதென்றால் மிகக்கவனமாக இருக்க வேண்டும். அதை நினைவில் வைத்து மோட்டர் சைக்கிளில் ஓடிக்கொண்டிருந்தேன் நான். எனது பெயர் சந்தோஸ். நான் ஒரு விஞ்ஞானபாட ஆசிரியன். வயது முப்பது. இன்னும் கல்யாணமாகவில்லை. இரண்டு அக்காமாரையும் ஒரு தங்கச்சியையும் நல்லபடியாகக் கரைசேர்த்து விட்டேன். அவர்கள் நல்லாக வாழ்கிறார்கள். இனியிருப்பது நானும், என்னுடைய தங்கையும்தான். அவள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் கணிதப்பிரிவில் இரண்டாமாண்டு பயின்று வருகிறாள். "இனி முதலில் உனக்குத்தான் கல்யாணம், உனக்குப்பிறகுதான் இளையவளின் கல்யாணம்." இது, அம்மாவின் கட்டாய சட்டமாக இருந்தது.

"இல்லை.., இல்லை... தங்கச்சிக்கு முதலில் கல்யாணம். அதுக்குப்பிறகுதான் எனக்குக் கல்யாணம்" என்று பிடிவாதமாக இருந்தேன்.

"இவன் எப்ப கல்யாணம் செய்யப்போறானோ? பிள்ளைகளைப் பெத்து என்ர கையில எப்ப தரப்போறானோ?" என்று அம்மாவின் தவிப்பு இருந்தது.

இந்தத்தவிப்பு ஒவ்வொரு நாளாக நீண்டு கொண்டு போனது. வீட்டிலே அம்மா என்னோடு கோபம் போல் நடந்துகொள்வார். அது எனக்குச் சங்கடமாக இருந்தது. ஆனாலும், ஏதோவொரு விதத்தில் அம்மாவைச் சமாளித்துவிடுவேன்.

எனது உந்துருளியின் வேகம் மணிக்கு ஐம்பத்தைந்து கிலோமீற்றரென்று காட்டியது. நாலைந்து டிப்பர் வாகனங்களும், ஒன்று இரண்டு அரச பேருந்துகளும் என்னை முந்திப்போகின்றன. இதற்கிடையில் மூன்று உந்துருளிகள்



என்னை விலத்திக்கொண்டு விர்ரென்று பறக்கின்றன. அவற்றின் வேகங்கள் தொண்ணூறைவிடக் கூடுதலாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்கலாம் என்பது எனது ஊகம்.

"உந்தமாதிரி வேகத்தில ஓடி என்னத்தைப் புடிக்கப் போறாங்கள்?." மனம் கடிந்து கொண்டது.

எனக்குப் பின்னே வலப்பக்கமாகப் புகைவண்டி கூவும் சத்தம் கேட்கிறது. மிகப்பெரிய மலைப்பாம்பு ஒன்று ஊர்ந்து போவதுபோல என்னைத் தாண்டி அது போய்க் கொண்டிருந்தது. புகைவண்டி வளைந்து நெளிந்து போவதுகூட அழகுதான். நதி வளைந்து நெளிந்து ஓடினால்தானே அழகு. அதுபோலத்தான், இதுவும். துவிச்சக்கரவண்டியில் போய்வருகிற மனிதர்களையும், பலவிதமான வாகனங்களையும், குறுக்காலே பாய்ந்தோடிப் போகிற நாய், குரங்குகளையும் பார்க்க வேடிக்கையாக இருந்தது.

மயில்கள் அகவும் சத்தம் கேட்கிறது. தமக்கு உணவு கிடைத்துவிட்டால் சந்தோசத்தில் மயில்கள் இப்படித்தான் அகவுமாம். இப்ப மயில்களுக்கு உணவு கிடைத்துவிட்டது என ஊகித்தேன்.

மாடுகள் நிரையாகப் போகின்றன. தலையிலே முண்டாசு கட்டிய ஒருவன் சூ.. சூ... சொல்லி வீதியோரமாக மாடுகளைச் சாய்த்துக்கொண்டு போனான். தூரமான பள்ளிக்கூடத்திற்கு போவதற்கு பேருந்தொன்றின் வருகைக்காக மாணவர்களும் ஆசிரியைகளும் காத்திருக்கின்றனர்.

இப்படி ஒவ்வொரு சம்பவங்களையும் மனப் பாடம்பண்ணி பயணித்துக்கொண்டிருந்தேன். அதிகா லைப்பயணம் மனதுக்கு உற்சாகத்தை வழங்கிக் கொண்டிருந்தது. பள்ளிக்கூடம் தொடங்கினால் திங்கட்கிழமையில்தான் இந்தமாதிரியான காட்சிகளைக் கண்டுகளிக்க முடியும். இப்பவெல்லாம் திங்கட்கிழமை என்றால் எனக்கு விருப்பமாக இருந்தது.

## 2

புதுக்காட்டுச் சந்திக்கு வந்துவிட்டேன். புதுக்காடு என்று சொன்னாலே பால்ராஜ் அண்ணாவும், 1200 இயக்கப்பொடியள் பொடிச்சிகளின் வீரமும்தான் ஞாபகத் திற்கு வரும். "பெட்டி அடிச்சுக் கொண்டு, யாழ்ப்பாணத்து ஆமிக்காரங்களை ஆனையிறவு முகாமுக்குப் போகவிடாமல் தடுத்து வைச்சிருந்தது எங்கட பொடியள் பொடிச்சி யள்தானே..! அதுக்குப்பிறகு ஒருமாதத்திலதான் ஆனையிறவு முகாம் பொடியளிடம் விழுந்தது." என்று அம்மையா என்னிடம் சொல்லுவார்.

எங்கட போராட்ட வரலாற்றில் புதுக்காட்டுச் சமருக்கென்று தனிவரலாறே எழுதலாம்.

இப்ப புதுக்காட்டுச் சந்தியில் வலது பக்கமாகப் பார்க்கிறேன். வடைக்கடை பூட்டியிருந்தது. அந்தக்கடையில் விடிய வெள்ளென தேத்தண்ணி குடிச்சிட்டுப்போனால் உடம்புக்கு உற்சாகமாக இருக்கும். இது எனது நம்பிக்கையாக இருந்தது. இந்தநேரம் அந்தக்கடை திறந்திருப்பதில்லை என்ற தகவலையும் அறிந்து வைத்திருந்தேன்.

வெள்ளிக்கிழமை பள்ளிக்கூடம் விட்டு வரும்போது அந்தக்கடைக்குப் போவேன். இரண்டு வடையினை, சிலவேளை மூன்று வடையினை சம்பலோடு ருசித்துச் சாப் பிடுவேன். பிறகு சுடச்சுட தேநீர் குடிப்பேன். அந்தக்கடையில் தருகிற உழுந்துவடை போலவே அந்தக்கடைத் தேநீரும் உருசையாக இருக்கும். தூரத்திலிருந்து பயணம் செய்து வருகிற என்னுடைய உடம்பு அலுப்பையும், மனசோம்ப லையும் அவை தீர்த்துவிடும்.

கொத்துரொட்டி சாப்பிட்டுப் பழக்கப்பட்டவன் கொத்துரொட்டி சாப்பிட ஆசைப்படுவான். அதுபோலவே, பாடசாலை முடித்து வீடு வருகிற எனக்கும் அந்தக்கடையில் வடை சாப்பிட வேண்டும் என்று ஆசைப்படுவேன்.

அங்கே சுடச்சுடத் தருகிற உழுந்துவடையும், சுவையான சம்பலும் நாவுக்கு இதமாக இருப்பதை உணர்வேன். காலையில் அம்மா சுடுகிற தோசைக்கு அம்மம்மா சம்பல் அரைப்பார். அம்மியிலே அரைத்த சம்பலுக்கு தாளிப்புப்போட்டுத் தருவார்தானே..! அந்த தாளிப்பு வாசம் பக்கத்து வீடெல்லாம் மணக்கும். அப்படித்தான் அங்கே தருகிற சம்பலின் வாசமும் சுவையும் இருக்கும்.

புளிஞ்ச தேங்காய்ப்பூவிலே சம்பல் செய்து, அந்தச்சம்பலோடு இடியப்பம், தோசை, பிட்டு சாப்பிடத் தருகிற கடைகள் பல இப்பவும் இருக்கின்றன. அந்தச்சம்பலைத் தள்ளி வைத்துவிட்டு சாம்பாருடன் பருப்புக்கறி வாங்கி பிசைந்து சாப்பிடுவோரை கண்டிருக்கிறேன். அப்படிச் சாப்பிட்ட அனுபவம் எனக்கும் இருக்கிறது. அதற்குப்பிறகு அந்தமாதிரியான கடையிலே சாப்பிடுவதற்கு மனம் வருவதில்லை.

பிட்டு, இடியப்பம், தோசை சாப்பிடுவதென்றால் சம்பலோடுதான் சாப்பிடவேண்டும். அதற்குப் பிறகுதான் சாம்பாரோ, கறியோ, முட்டைப்பொரியலோ இடம்பிடிக்க வேண்டும். கடைக்காரர்கள் பலர் அதை உணர்வதில்லை. தங்களுக்குக் கிடைக்கிற கொஞ்ச ரூபா இலாபத்திற்காக கனதியான வாடிக்கையாளர்களை இழக்கின்றனர் என்பது மெய்யாகும்.

இந்தக்கடைக்காரத் தம்பி ரொம்ப வித்தியாசமாகத் தெரிந்தான். வியாபாரத்தின் உத்தியெல்லாம் நன்றாகத் தெரிந்திருந்தான். தனது கடை வடையின் சுவையினையும், அதோடு வழங்கப்படும் சம்பலின் ருசியினையும் மாற்றாமலே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைத்திருந்தான். வயதில் சின்னவனாக இருக்கிறான். இருந்தாலும் நிறைந்த கெட்டித்தனம் அவனிடமிருந்தது. அவனது நேர்மை எனக்கும் ரொம்பப் பிடித்திருந்தது. என்னைக் கண்டவுடன் புழுகமாகத் தெரிவான். வாடிக்கை யாளர்களை வசியம் செய்வது என்பது இதுதானாக்கும். இதனால், ஆறஅமர இருந்து சாப்பிட ஆவல் கூடும். அந்தக்கடையின் உழுந்துவடைபற்றி என்னுடைய நண்பர்களிடமும் சொல்லியிருக்கிறேன்.

"கிளிநொச்சி, முல்லைத்தீவுக்குப் போய்வரும்போது புதுக்காட்டுச் சந்திக் கடையில ஒருக்கால் வடை சாப்பிட்டுப் பாருங்கோடா" என்று.

சரஸ்வதிபூசை, நவராத்திபூசை, விளக்குவீட்டுப்பூசை போன்ற விசேட நாட்களில் ஒவ்வொரு வீட்டிலும் உழுந்து வடை சுடுவார்கள். உழுந்துவடை சுடுவதைப் பல தடவை பார்த்திருக்கிறேன்.

உழுந்தினை ஊறப்போட்டு, உழுந்துக்கோதினை அகற்று வார்கள். அதைப் பசையாக அரைத்து விட்டு கோதுமை மாவுடன் கலந்து குழைப்பார்கள். எண்ணெயில் ஒரளவாக வதக்கிய பச்சைமிளகாய், வெங்காயம், சீரகம், கருவேப்பிலை என்பவற்றோடு அரைத்தெடுத்த இஞ்சியி னையும் அதில் சேர்ப்பார்கள். பிறகு எல்லாவற்றையும் சேர்த்துப் பிசைந்து எடுப்பார்கள். அதிலே ஒவ்வொரு திரளாகக் கிள்ளி உள்ளங்கையிலே போட்டு மெதுவாகத் தப்பி, நடுவிலே சுட்டுவிரலால் ஓட்டை வைப்பார்கள். அதை கொதிக்கிற எண்ணெய்க்குள் போடுவார்கள். உழுந்துவடை பொன்நிறம் கண்டதும் சிறு துவாரமுள்ள அகப்பையால் அள்ளியெடுப் பார்கள். அவற்றினைச் சுளகிலே விரித்து வைத்த மாட்டுத்தாளிலே போடுவார்கள். மாட்டுத்தாள் உழுந்து வடையிலுள்ள எண்ணெயை உறிஞ்சி எடுத்துவிடும்.

சுவாமிக்குப் படையல் முடிந்ததும் வரிசையாக இருப்போம். மோதகம், பொங்கல், கடலை, அவலுடன் வடையும் எடுத்துச் சாப்பிடுவோம். அடுத்தநாள் காலையில் வடையுடன் தேநீர் அருந்துவோம். சிலநேரம் சாம்பார் விட்ட பிட்டுக்குள்ளே வடையை பிய்த்துப்போட்டு குழைத்து உண்போம். இப்படி வீட்டிலே சாப்பிட்ட உழுந்துவடையின் ருசிபோல் வேறெந்தக் கடையிலும் நான் சாப்பிட்டதில்லை. ஆனாலும், எங்கள் வீட்டிலே சுட்டுத்தருகிற வடையைவிட இன்னும் வாசமாகவும், சுவையாகவும் அந்த உழுந்துவடை இருந்தது.

## 3

இப்படித்தான் ஒருநாள் அந்தக்கடையிலே வடை சாப்பிட்டுக் கொண்டிருக்கும்போது எனக்கு முன்னால் இளவயதுப் பெண்ணொருத்தி வந்தமர்ந்தாள். அவளுக்கு இருபத்தைந்து அல்லது இருபத்தாறு வயது இருக்கலாம் என்று என்மனம் எனக்குச் சொல்லியது. அவள் அருகாக ஒரளவு வயதான அம்மாவும் வந்தமர்ந்தார். அவர், அவளின் அம்மாவாக இருக்கலாமென ஊகித்தேன். இப்படி நான் ஊகித்த அடுத்தகணத்தில் கடைக்காரத்தம்பி தேநீர் கொண்டுவந்து தந்தான். அதை வாங்கி மேசை மேலே வைத்தேன். கை கொஞ்சம் சுட்டுவிட்டது. அதைக் காட்டிக் கொடுக்காமல் மற்றைய கையால் சூடுபட்ட கைவிரலைப் பிடித்துப் பிசைந்துகொண்டிருந்தேன். முன்னால் இருந்தவள், மென்மையாகச் சிரித்துவிட்டாள். அந்தவொரு சிரிப்பிலே தானொரு பேரழகி என்பதையும் நிரூபித்துக் காட்டினாள்.

நீண்ட மூக்கு. பொதுநிற முகம். பார்ப்பதற்கு இலட்சணமாக ஜொலித்தாள். உச்சி வகிடெடுத்து தலைமுடி இழுத்திருந்தாள். பூப்போட்ட பஞ்சாபி உடுத்திருந்தாள். கொழுகொழு என்ற தன் கன்னங்களை முத்தமிடும் முடிகளை அடிக்கடி விரல்களால் கோதினாள். அவற்றைக் காதிலே சொருகினாள். அந்தச் செய்கைகூட அழகாக இருந்தது.

தேநீர் அருந்தியருந்தி அவளின் செய்கைகளை அவதானிக்கிறேன். மிகவும் ஆவலாக அதை ரசிக்கிறேன். என் அவதானங்களை அவள் கண்டு விடக்கூடாது என்பதில் கவனமாகவிருந்தேன்.

தன்னை நான் அவதானிக்கிறேன் என்பதை உணர்ந்துதான் அவளும் என்னைப் பாராது இருக்கிறாள் போலும். இது பெண்கள் யாருக்குமுள்ள பொதுவான குணம்தானே..!

இப்ப என் பக்கமாக மீண்டுமொரு சிரிப்பினை உதிர்த்தாள். இப்படியே என் உள்ளமதைக் கொள்ளையடித்துக் கொண்டிருந்தாள். அவள் பேரழகி என்பதை மீண்டும் மீண்டும் என்னிடம் நிரூபித்துக் காட்டுவதில் விருப்பமாக இருக்கிறாள் என எனக்குள்ளே நினைத்துக் கொள்கிறேன். எப்படித்தான் இப்படி அழகாகச் சிரிக்கிறாளோ? தெரியவில்லையே! உடனேயே எப்படி அபிநயம் காட்டி இப்படிச் சிரிக்க முடிகிறது? பெண்களுக்கென்று கடவுள் கொடுத்த வரமா, இது..?

அவள் சிரித்த சிரிப்பிற்குப் பதிலாக நானும் ஒரு சிரிப்பினை வெளிக்காட்ட வேண்டும். அது தானே நாகரிகம். அவளைப் போல என்னால் உடனடியாகச் சிரிக்க முடியவில்லை. இதை எனக்கான தோல்வி என்றுதான் சொல்லவேண்டும். உடனடியாகச் சிரிக்கின்ற சிரிப்பு அசிங்கமாகி விடுமோ என்ற தயக்கமும் எனக்கிருந்தது. அதுதான் சிரிக்காமலிருந்தேன். இருந்தும் மனதுக்குள் சிரித்தேன். என் கண்கள் அதைக் காட்டிக் கொடுத்துவிட்டன போலும். ஏனென்றால், இப்ப அவள் என் கண்களையே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உற்று நோக்கத் தொடங்கினாள். கண்கள் சிரிக்கும் என்பார்களே..! அதனால்தான் அப்படி நோக்கினாள், என்று நான் எண்ணுகிறேன்.

சா.., அவள் என்னைப்பற்றி என்ன நினைத்திருப்பாள்? அழுமூஞ்சையன் போல இருக்கிறானே! என்ற ஏக்கம் என் இதயத்தைக் கிழித்து ஓடியது. தானாகக் கனிந்து வருகிற ஒரு பேரழகியின் நட்பினைப் பிரிந்துவிடுவேனோ..? என்று துடித்தேன். இவனொரு முரடனாக்கும். கொஞ்சமேனும் சிரிக்காமல் உம்மென்று இருக்கிறானே! என்று கூட அவள் என்னைப்பற்றி எண்ணியிருக்கலாம். ஒரு குரங்கு போல் என் மனம் தாவித்தாவி ஓடிக்கொண்டிருந்தது.

"சேர், வழமையா வாறநேரத்திற்கு நீங்கள் வரவில்லை. கிட்டத்தட்ட முக்கால் மணித்தியாலத்துக்கும்கூட பிந்தித்தான் வந்தியள். ஏன் சேர்" என்று அக்கறையோடு அந்தக் கடைக்காரத்தம்பி கேட்டான். என்னைப்பற்றிய அவனுடைய கணிப்பிற்காக மனதுக்குள்ளே மகிழ்ந்தேன். என்னைப்பற்றி எத்தனை அவதானம் அவனுக்கு இருக்கிறது. அவனுடைய எத்தனையோ வாடிக்கையாளர்களில் நானுமொருவன் என்பதை உறுதிப்படுத்தினேன்.

"இன்று ஸ்கூல்ல ஒரு மீற்றிங் இருந்தது, தம்பி. அதுதான்…" என்று சொன்னேன்.

"ஆ..ஆ… ஓகே சேர்.." என்று தலையாட்டிவிட்டுப் போனான். அந்தநேரம் எனக்கு முன்னாலிருந்த பேரழகி தனது கைக் கடிகாரத்தைப் பார்த்தாள்.

நானும் பார்க்கிறேன். நேரம் மூன்றுமணி இருபத்திரண்டு நிமிடம் ஆகியிருந்தது.

அவள் கொடுப்புக்குள் சிரிக்கிறாள். அந்த இடத்தைவிட்டு வருவதற்குக் கொஞ்சமும் மனமில்லாமல்லை, எனக்கு. நெஞ்சமெல்லாம் அந்தப்பேரழகிதான் வியாபிக்கத் தொடங்கியிருந்தாள்.

## 4

அடுத்த வெள்ளிக்கிழமையும், அதற்கடுத்த இன்னும் இரண்டு வெள்ளிக்கிழமையும் அந்தக் கடைக்கு அவள் வந்திருந்தாள். சாறிதான் உடுத்திருந்தாள். நான் வருவதற்கு முன்பாகவே வந்து விடுவாள். என்னைப் பார்த்தவுடன் முகத்திலே புன்னகை மலரச்செய்வாள். சிறு தலையாட்டுதலுடன் முகத்திலே ஒரு சந்தோசத்தை வெளிக்காட்டுவேன். அவள் புரிந்துவிடுவாள். மனதுக்கு மகிழ்ச்சியாக இருக்கும். அங்கே ஓரிடத்திலே அமர்வேன்.

ஒருநாள் அவளுக்கு முன்னால் அமர்ந்தேன்.

இன்னொருநாள் ஒரு மேசை தள்ளி அமர்ந்தேன்.

இன்னுமொருநாள் அவள் பக்கமாக அமர்ந்தேன்.

முதல்முதலாக பஞ்சாபி உடையோடு பார்த்த அவளை, இந்த உடையில் பார்க்கும்போது இன்னும் அழகாகவும் எடுப்பாகவும் தெரிந்தாள். கொட்டின் சாறிதான் உடுத்திருந்தாள். ஐந்தரை அடியிலும் கூடிய உயரம். அகன்ற தோள்கள். மெல்லிடை.

'ஏ சேப்' உடம்பு என்று சொல்லுவார்கள்தானே! அப்படி இருந்தது அவளின் உடல்வாகு. இந்தமாதிரி உடல்வாகுள்ள பெண்களுக்குத்தான் பிளவ்சும் சாறியும் வடிவாக இருக்குமென்று பொடியள் தரவழியில் கதைத்தது ஞாபகத்திற்கு வந்தது.

எப்போதும் உடலை அழுத்திச் சேலை கட்டியிருப்பாள். மிகவும் எடுப்பாக ஜொலிப்பாள். அவளைத் தொட்டுவிட்ட உணர்விலேதான், அவள் கட்டியிருக்கிற சேலையும் அவள் உடலோடுஒட்டியிருக்கிறது போலும். வைரமுத்து கவிதை ஞாபகத்திற்கு வந்துபோனது.

இன்னொரு வெள்ளிக்கிழமை நாள்.

அவளிருந்தவிடத்திலே, அவளுக்கு முன்னால் சென்று அமர்ந்தேன். என்னைப் பார்த்தவுடன் உதடுகளால் நெளித்தாள். நல்லகாலம் இதை யாரும் பார்க்கவில்லை. உதடுகளை மூடி அகலமாக்கிச் சிரித்தாள். அவளது வலது கன்னம் குழிவிழுந்து திரண்டு ஓடியது. அவளின் சிரிப்பினை ஏற்பதுபோல தலையை மென்மையாக அசைத்தேன்.

அவள் என் கண்களையே பார்த்துக் கொண்டிருந்தாள். மீண்டும் சிரித்துவிட்டு, "எந்தப் பள்ளிக்கூடம், சேர்..?" அவள் கேட்டாள்.

பள்ளிக்கூடத்தின் பெயரைச் சொன்னேன். சொல்லிவிட்டு, "நீங்கள்..?" என்று இழுத்தேன்.

"நானா..? நானும் ரீச்சர்தான்." என்றாள்.

"எங்கே, என்ன பாடம்..?" என்று எனது வினாக்கள் தொடர்ந்தன.

அவளுக்கு இருமல் வந்திருக்க வேண்டும். விரித்த கைவிரல்களின் புறப்பக்கத்தால் வாயைத் தொட்டு சின்னதாக இருமினாள். அந்த இருமலோடு சிரித்தபடி அந்தப் பள்ளிக்கூடத்தின் பெயரைச் சொன்னாள்.

"அண்டைக்கு உங்களோடு வந்தவர்…?" என்று இழுத்தேன்.

"என் அம்மா.." என்றாள்.

"ம்,… அன்றைக்கு எங்கை போய் வந்தியள்?

"அம்மாவுக்கு கண் கிளினிக் இருந்தது. யாழ்ப்பாணம் போய்வந்தேன்" என்றாள்.

"………….."

பரவாயில்லையே..! நான் விரும்பயபடி அவள் கதைக்கிறாளே..! அவளுடைய பெயர் என்ன என்பதையும், அவள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊர் எது என்பதையும் அறிவதில் ஆர்வமானேன். எதற்கும் அவசரப்படக்கூடாது என்ற ஒரு மனக்கட்டுப்பாட்டினையும் வைத்திருந்தேன்.

"எனக்குத்தெரியும், இண்டைக்கும் இந்தநேரம் உங்களைச் சந்திபேன் என்று.."

"எப்படி..?" என்றேன்.

"முக்கால் மணித்தியாலம் பிந்தி வந்தியளென்று, கடைக்கார அண்ணா அண்டைக்குச் சொன்னவர்தானே..!"

"ம்... ஓ... அப்ப நீங்கள் கணித ரீச்சரா..?"

உடனேயே மௌனமானாள். முகத்தினை ஒரு மாதிரியாக்கினாள். பொய்யான கோபத்தைக் காட்டினாள். இனி என்னோடு கோபம் என்பது போல இருந்தாள்.

"ஏன்.., மௌனம்..?"

"பின்னை என்ன, கணித ரீச்சருக்குத்தான் நேரக்கூட்டல் கழித்தல் தெரியுமாக்கும்? தமிழ் ரீச்சருக்குத் தெரியாதாக்கும்.." ஊடல்கொண்டு கதைத்தாள். அவள் தானொரு தமிழப்பாட ரீச்சர் என்பதை சொல்லாமல் சொல்லிவிட்டாள். அவளின் இந்த ஊடல் அழகாக இருந்தது. அதையும் அப்பிப்பிடித்து ரசித்தேன்.

என் நினைவுகளுக்குச் சமாந்தரமாக அவள் பயணிப்பது இதமாக இருந்தது. குறுக்கோடியாக காதல் எனும் கோடு இடைவெட்டிச் சென்றது. அது இருவரையும் இணைக்க நினைக்கிறது. அவளுடைய பார்வையின் அர்த்தங்களும், எண்ணங்களின் விளக்கங்களும் என்னை நோக்கியே பாய்கின்றன. அதை நான் உணர்கிறேன். அதை அவளும் உணர்வாள். என்னை அவள் நேசிக்கிறாள் என்பதை உறுதிப்படுத்தினேன். இன்றுதான் அவளுடன் முதல் முறையாகப் பேசுகிறேன். இது ஆரம்பமல்லவா..?

நினைத்து நினைத்து, இழுத்து இழுத்து, இன்னும் இன்னும் ஏதாவது பேசவேண்டும் போல ஆவலாக இருந்தேன். இவனொரு தப்பானவன் என்று நினைத்து விடுவாளோ? என்ற பயமும் என்னை உறுத்தியது.

கணம்கணமாக அவளுக்கென அகல விரியத்துடிக்கும் அன்பு குழைந்த வார்த்தைகளை எனக்குள்ளே இறுகக் கட்டிக்கொள்கிறேன். பிறகொருமுறை நிறையப் பேசலாமென்று உடனேயே நினைக்கிறேன்.

"போயிட்டு வாறன்" என்று சொல்லிவிட்டு வந்துவிட்டேன். பதிலுக்கு அவள் எதுவும் சொல்லாமலே இருந்தாள்.

## 5

அடுத்தடுத்த வெள்ளிக்கிழமை.

இன்றும் அந்தக்கடைக்குள்ளே நுழைகிறேன். கடை நிறைந்த வாடிக்கையாளர்கள் இருந்தனர். சிலர் தேநீர் அருந்துகின்றனர். சிலருடைய கைகளில் வடை இருந்தது. சம்பலோடு தொட்டு சுவைக்கின்றனர். அதை ஒவ்வொரு முகமும் அச்சொட்டாகக் காட்டியது. அதிலே ஓரிடம் இருந்தது. அதிலே போய் இருந்துகொண்டு வெளியே பார்க்கிறேன். அவள் இன்னும் வரவில்லை. ஒவ்வொரு முறையும் நான் வரும்போது அங்கே இருப்பவள். சென்ற வெள்ளிக்கிழமை போல்தான் இன்றும் வராமல் விடுவாளோ? என்று துடியாய் துடித்தது மனது. இவ்வளவு நேரமாகியும் வரவில்லையே..!

அவள் இன்னும் வராமலே இருந்தாள். இது எனக்கு ஏமாற்றமாக இருந்தது. மனம் ஒடியத் தொடங்கியது. அவள்பற்றிய பெரு எண்ணமெல்லாம் என்னிடமிருந்து விலகிப் போவதாக உணரத் தொடங்கினேன்.

"போய் வா.. நாளை சண்டை செய்வோம்.." என்று சொன்னபோது, சோர்ந்து நின்ற ஒரு நிராயுதபாணி வீரனின் தோற்றம்போல் என் தோற்றமும் மாறியிருந்தது.

ருசியான வடையும், ருசியான தேநீரும் கசப்பதாக உணரத் தொடங்கினேன். அவளைக் காணாது அந்த இடத்தைவிட்டுப் போகவும் மனம் வரவில்லை. இன்றைக்கு நேரம் பிந்தியாவது வருவாள் என்ற நம்பிக்கையில்தான் இப்பவரை காத்திருந்தேன்.

அன்றைக்கு வலியவந்து கதைக்க ஆசைப்பட்டவள். ஒரு சுகமான உரையாடலாக என்னோடு கதைக்க ஆரம்பித்தவள். அவள் என்னோடு உரையாட ஆசையாகவும், ஆவலாகவும் இருந்தாள் என்பதைத் தெரிந்திருந்தேன். ஆனாலும், முதல்முதலில் அளவான உரையாடலாக இருக்க வேண்டும் என்று நினைத்து எழுந்து வந்தேனல்லவா? அப்படி நான் எழுந்து வந்ததுதான் அவளுக்குப் பிடிக்காமல் போயிருக்குமோ..?

அவள் மீதான எண்ணங்களில் குவிந்தோட என் எண்ணங்கள் யாவும் துவண்டு மடிகின்றன. உடனடியாக அவற்றினைக் கட்டுப்படுத்த முனைகிறேன். முடியாமல் போகிறது. அங்கிருந்து வெளியே வந்துவிட்டேன்.

உந்துருளியை இயக்கி ஓடத்தொடங்கினேன். வீட்டுக்குப் போகவேண்டும் என்ற அவசரம் எனக்குள் தோன்றவில்லை. மெதுமெதுவாக உந்துருளியோடு நகர்ந்து கொண்டிருந்தேன். இப்ப என்னை நினைக்க என்மீதே எனக்குக் கோபம் வந்தது. அவள் மீதான என் விருப்பினை வித்தியாசமாக வெளிப்படுத்த வேண்டும் என்றுதான் துடியாய்த் துடித்துக் காத்திருந்தேன், இப்பவும் காத்திருக்கிறேன். அவள் அதை ஏற்றுக்கொள்வாள் என்ற நம்பிக்கையும் எனக்கிருந்தது.

சென்ற வெள்ளிக்கிழமை என் நெஞ்சத்து நினைவுகளைத் துண்டுதுண்டாக வெட்டி எறிந்தது போல் இன்றும் எறிந்து விடுவாளோ என்ற ஏக்கமும் வளரத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடங்கியது. மனம் தளரத் தொடங்கினேன்.

அன்றைக்கு நான், அப்படி என்ன தப்பாக நடந்து விட்டேன். ஒரு நாகரிகத் தன்மையோடுதானே நடந்தி ருக்கிறேன். நிச்சயமாக நான் நடந்துகொண்ட எதுவும் அவளுக்கும் பிடித்திருக்கும். என்னைப் பற்றிய அவளின் எண்ணப்பாங்கினை நானறிவேன். என்மீது அவளுக்குக் கோபம் எதுவும் இருக்க முடியாது. என்னைக் காணவேண்டும், என்னோடு பேசவேண்டும் என்ற ஆவல் அவளிடமும் இருக்க வேண்டும் என்பதும் நான் உணர்ந்த விடயம்தான். அவள்பற்றிய நினைவுகளோடு புதுக்காட்டுச்சந்தி கடந்து வந்துவிட்டேன். இடதுபக்கமாகப் பேருந்து பயணிகள் தங்கிப்போகும் நிழற்குடை இருந்தது. அந்தப் பக்கமாக என் பார்வைகளை எறிகிறேன். உள்ளம் அதிர்ச்சியடைகிறது. அங்குள்ள கல்லிருக்கையில் அவள் தனியாக இருப்பதைக் கண்டு மகிழ்ச்சி அடைகிறேன்.

என்னைக் கண்டவுடன் எழுந்துவிட்டாள். என்னை நோக்கி வருகிறாள். நிழற்குடையின் வாசலுக்கு வந்துநின்று கையால் காட்டி என்னைக் அழைக்கிறாள். அவள் பக்கமாகப் போகிறேன்.

சிரிப்பைக் கொஞ்சமாகக் காட்டினாள். ஒரு கோபக்காரி போலத் தெரிந்தாள். அவளுக்கே சொந்தமான அந்தப் பொய்க்கோபத்தை இப்பவும் என்னிடம் காட்டுகிறாள். மீண்டும் எனக்குள் சந்தோசத்தை வளர்க்கிறாள். அவள் கோபம் காட்டும் போதும் அழகாகத் தெரிந்தாள். கிட்டப்போன நான், "என்ன..? கனநாளாய் கடையில காணேல்ல" என்றேன்.

"கனநாளா..? இரண்டுநாள்தான்" என்றாள்.

"அதான், ஏன் என்றேன்."

"என்னைக் கண்டால், நீங்கள் என்னோடு கதைக்கவா போறியள்.?" முகத்தில் அறைந்தது போல் இருந்தது, அவள் கேட்ட இந்தக்கேள்வி.

கொஞ்சம் தள்ளி உந்துருளியை நிறுத்தவிட்டு வந்தேன். அவளிருந்த இடத்திலிருந்து கொஞ்சம் தள்ளி அமர்ந்தேன். எங்கோ போவதற்குப் பேருந்து ஒன்றிற்காகக் காத்திருக்கிற பயணிகள் போல இருவரும் இருந்தோம்.

உரையாடல்களுக்கு மட்டும் குறைவில்லாமல் இருந்தது.

"என் பெயர் இசைநிலா" என்றாள்.

"அழகான பெயர். தலைவர் காலத்துப் பொண்ணு" என்றேன்.

"ஏன்" என்று கேட்டாள்.

"சுத்தத் தமிழ்ப்பெயர்" என்றேன். அவளுக்கு மனம் நிறைந்த சந்தோசம். கன்னம் குழிவிழும் அவளின் சிரிப்பு அவளின் அழகை இன்னும் நிமிர்த்திக் காட்டியது.

"என் பெயர் சந்தோஸ்" என்றேன்.

"மகிழ்ச்சி" என்றுவிட்டு மென்மையாகச் சிரித்தாள். கன்னம் தொடுகிற முடிகளை எடுத்துக் காதிலே சொருகியபடி, ஒரு பொதியினை என்னிடம் தந்தாள். அதை அன்புடன் வாங்கிவிட்டு "நன்றி இசை" என்றேன். அதற்குள் ஒரு சேட், ஒரு ஜீன்ஸ் இருந்தது.

இப்ப ஒரு பொதியினை அவளிடம் கொடுத்தேன். அதை முகமலர்ந்து வாங்கினாள். பொதியினை மேல்பக்கத் தால் விலக்கிப் பார்க்கிறாள்.

அவளுக்குப் பிடித்த நிறங்களில் அழகான கொட்டின் சாறிகள் இரண்டு இருந்தன. பார்த்தவுடனேயே நிறங்கள் பிடித்திருப்பதாகச் சொன்னாள். "நன்றி சந்தோஸ்" என்றாள். அவள் மீதான என் விருப்பத்தினை இப்படித்தான் தெரிவிப் பேன் என்று முதலில் நினைத்தது நானென்றுதான் சற்று முன்னம்வரை நினைத்திருந்தேன். என்னை முந்தி அதைச் செய்து காட்டி விட்டாள், அவள். இது எனக்கு இரட்டிப்பு மகிழ்ச்சியைத் தந்தது.

என்னைப் பார்த்து புன்முறுவல் செய்தாள். அப்படிச் செய்துவிட்டு ஓர் ஒற்றைத்தாளில் தனது பெயர் இசைநிலா, தனதூர் உடுத்துறை, தனது கைபேசி இலக்கம் *0769883363* என எழுதித் தந்தாள். தந்துவிட்டு சந்தியிலிருந்து உடுத்துறை போகும் தெருவிற்குப் போகத் தயாரானாள். அவள் நடந்து போவதைப் பார்த்துக்கொண்டு நிற்கிறேன். ஏ ஒன்பது வீதியை கவனமாகக் கடந்துவிடுகிறாள். வீதியைக் கடந்து விட்டுத் திரும்பி என்னைப் பார்த்தாள். என்னை நோக்கி வலதுகையினை விரித்துக் காட்டி மகிழ்ச்சியை வெளிப்ப டுத்தினாள். அன்னநடையினை விஞ்சும்படியாக அவள் நடந்து போய்க் கொண்டிருந்தாள். அவளுக்குத் தெரியும், எனது ஊர் வல்வெட்டித்துறை என்று.

• • • •

நான் நீ அது எது என்று எதிரும் புதிருமாகப் பிரித்து வைத்து இருப்பவருக்கு இது புரியாது. தன்னைக் காணாமல் போக்கியவருக்கு எல்லாமும் தானென்று புரியும். இங்கேயிருந்து எதிர்ப்பக்கம் பார்ப்பதுபோல எதிர்ப்பக்கத்திலிருந்தும் தன்னைப் பார்க்க முடியும் எல்லாப் பக்கத்திலிருந்தும் தன்னை அவதானிக்க முடியும். அப்படிப் பார்க்கிறபோது தான் எந்தவித்ததிலும் முக்கியமில்லை என்பது புரியும். தான் என்பது ஆத்மா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாற்றுப் புறம்



என்ன செய்வதென்று அறியாமல் சனங்கள் அங்கும் இங்குமாக அந்த இரவு வேளையில் மங்கலான நிலவு வெளிச்சத்தில் விட்டுவிட்டு எரிந்துக் கொண்டிருந்த விளக்குகளின் மத்தியில் ஓலச் சப்தங்களோடு தடம்புரண்டு ஓடிக்கொண்டிருக்க, அந்த பெண்மணி எந்தவித சலனமும் இன்றி உணர்ச்சியற்றவளாக முகத்தில் பாய்ச்சிய தண்ணீரை போல வழிந்தோடிக் கொண்டிருந்த இரத்தத்தோடு தரையில் உட்காந்து புலம்பிக்கொண்டிருக்கின்றாள்.

'வழமைக்கு மாறாக இன்று பெரிதாக எந்த சுவாரசிய மான வேலைகளும் இல்லை என்று நினைக்கின்றேன்.' என்று வாட்டசாட்டமான இராணுவவீரன் தன் சக இராணுவ வீரர்களிடம் பகிர்ந்துகொள்ள, அருகில் இருந்த சிலர் சிரிக்க தொடங்கிவிட்டனர். அதில் பார்ப்பதற்கு மெலிந்த உடலினை கொண்ட ஒருவன் "இல்லையேல் இந்நேரம் நம் தோட்டாக்கள் சுதந்திரமாய் பறந்திருக்கும்" என்று இலக்கிய ரசனையோடு கூவலானான்.

பேசுவதற்கும், தீர்ப்பதற்கும் ஏராளமான விஷயங்கள் இருக்கும் நேரத்தில் மதம் சார்ந்த அரசியல் மதிமயக்கத்தில் மக்கள் மேல் இலைமறைகாயாக அடுத்து எவ்வாறான இனவாத தாக்குதலை முன்னெடுக்கலாம் என்று மக்களால் ஆன அரசாங்கம் ஒரு வித களிப்பினில் இதை அதிகாரிகள் கூட்டத்தினில் பேசிக்கொண்டு இருக்கின்றனர்.

பேச்சோடு பேச்சாக, "மிகப்பெரிய புத்தர் சிலை ஒன்றை நாம் உருவாக்குவதற்கான வேலைகளை படிப்படியாக முன்னெடுக்க வேண்டும்" என்று திடீரென நாட்டின் அதிபர் கூறுவதை கவனித்த அத்துறையை சார்ந்த அமைச்சர் மற்றும் நிர்வாகிகள் பெருமிதத்தில் தலையசைக்கின்றனர்.

மின் விளக்குகளின் உதவியோ என்னவோ, இலேசாக பெய்ய ஆரம்பித்த தூறல் மழையோடு சில பெண்களின் கற்பு கொடூரமான முறையினில் சூறையாடப்படுகிறது. அவர்களின் கதறல் சப்தங்களோ வானொலியின் இரைச்சலை போல கேட்டுகொண்டே இருக்கின்றது.

அதனோடு கலவரத்தின் ஆரம்பமான அப் பெண் மணி, நிலத்தில் கிழித்தெறிந்த ஆடையுடன் உட்கார்ந்த வண்ணம் அருகில் இரு துண்டுகளாக கிடந்த தன் கைக்குழந்தையின் பாகங்களை மண்ணோடு சேர்த்து தன் மார்பினில் இறுக்கி அணைத்தப்படி சத்தம் போட முடியாமல் தன் பேரிழப்பை ஊமைக்கண்ணீரின் மூலம் வெளிப்படுத்தி கொண்டிருக்கின்றாள்.

உறங்கும் நேரத்தினை புறம்தள்ளி நாட்டுக்கு சேவை செய்யும் மனப்பாங்கு கொண்டவர்கள் போல, வழமையான கட்டளை சற்று தாமதத்தோடு இராணுவ வீரர்கள் தயார் நிலையில் இருக்க, அவர்களுக்கான விதிமுறைகள் கொடுக்கும் அளவிற்கு கூட நேரம் இல்லாத ஜெனெரல் கட்டிடத்தின் முகப்பு வாயிலில் நின்று கொண்டு இராணுவ வண்டிகள் ஒன்றன் பின் ஒன்றாக அணிவகுத்து புறப்பட்டு கொண்டிருப்பதை கவனித்து கொண்டு இருந்தார்.(அது ஜெனரலின் பார்வைக்கு தென்படும் வரை தான்).

"இன்று நமக்கு கிடைக்கும் அழகி யாரோ தெரிய வில்லை"

"இவர்களை பார்க்கும் போதே அடித்து கொல்லவேண்டும் என்ற எண்ணம் தான் அலைமோதுகின்றது"
என கூட்டமாக சென்று கொண்டிருந்த ஜீப்பில் இருந்த வீரர்கள் மத்தியில் பல்வேறுபட்ட கருத்து விவாதங்கள்
"இந்த முறையாவது நம் நிலை கருதி யாராவது முன் வந்து பேசுவார்களா என்று நினைத்த காலம் எல்லாம் உருண்டோடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விட்டது."

"முடிந்தளவு இருந்தவர்களை இல்லாமல் ஆக்கிவிட்டனர்." "இதற்கு மேல் நாம் எங்கே செல்வது என்று கூட தெரிய வில்லை."

"இவ்வளவு வன்மத்தினைக் காட்டியும் இவர்களுக்கு நாம் முஸ்லிம்கள் என்ற பாகுபாடே பெரிதாக இருக்கின்றது." இவ்வாறு ஆண் பெண் பேதமின்றி தங்களுக்குள்ளே பேசிக்கொண்டு இருக்கையில், அவர்கள் இருக்கும் முகாமில் பட்டினியால் ஒரு குழந்தை இறந்து விட்டது. தாயும் தந்தையும் கண்ணீர் விட்டு அழலாமே ஒழிய வேறு ஏதும் நடக்க போவதில்லை என்று அங்குள்ள சனங்களில் சிலர் வேகமாகவும், மெதுவாகவும் அந்த நிகழ்வினில் மௌனம் காத்துக்கொண்டிருந்தார்கள்.

சர்வதேச அமைப்புகளில் இருந்து தொடர்ந்து வந்து கொண்டிருக்கும் கண்டனங்களை பெரிதும் கவனத்தில் கொள்ளாது, தமது நேச நாடுகளின் கலந்துரையாடல்களில் தீவிரமான கவனத்தினை உட்பாய்ச்சி கொண்டும் எப்போதும் போல கொடூரமான அட்டூழியங்களை கட்டவிழ்த்த வண்ணம் இருக்கின்றனர் அந்த மக்களாட்சியின் மன்னர்கள்.

"இப்படியே இவர்களை பார்த்துகொண்டு இருந்தால் நம்மால் அடுத்த கட்டத்துக்கு முன்னேற முடியாது ஆகையால் இன்று சற்று அதிகமான நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும்" என்று இராணுவ தளபதிக்கு நாட்டின் அதிபர் உத்தரவு இடுகின்றார். இருந்த போதிலும் ஒரு சில அதிகாரிகள் தங்கள் மனிதாபிமானத்தை வெளிக்கொண்டு வர முனைந் தாலும் வேலைக்கு ஆகாது என்று உடல் அசைவுகள் வழியே தங்கள் ஆதங்கத்தை வெளிப்படுத்தி நகர்ந்து கொண்டிருந்தனர். மாலை சூரியன் தன் ஓய்வு நிலை கருதி உறங்கச் செல்லும் அந்தக் கணம் இராணுவ வீரர்கள் குழுமியிருந்த வண்டிகளின் மின் விளக்குகள் முகாம் முழுவதும் படர்ந்து கொண்டிருக்க, துப்பாக்கிகளின் தோட்டா மீதமிருந்த சனங்களின் உடல்களை குறி பார்த்துகொண்டு இருந்தது. பயத்தில் சனங்கள் ஓடித் திரிய............. வயது வித்தியாசம் இன்றி கூர்மையான வாள்களால் வாழை மரங்கள் போல சரமாரியாக வெட்டி சாய்த்து கொண்டு வந்தனர். முண்டங்களாக............, துண்டுகளாக............ உடல்களின் அடையாளம் தெரியாத வண்ணம் இரத்தம் சூழ நிலத்தில் தசையும் தலையும் முண்டமும் பிண்டமும் ஆங்காங்கே கிடந்தன.

"போனவர்களை நினைத்து என்ன பயன் இருந்தாலும் இன்று கொஞ்சம் நிம்மதியான தூக்கம் இருக்கும் என்று நினைக்கின்றேன்" என்று வயது முதிர்ந்த அந்த பெண்மணி அருகில் கைக்குழந்தையுடன் இருக்கும் பெண்ணை பார்த்துச் சொல்கிறாள்.

"குழந்தைக்கு சரியான பசி ஆனால் கொடுப்பதற்கு போதுமான உணவு இல்லை. அத்தோடு மார்பக பகுதியில் ஒரு சில காயங்கள் ஏற்பட்டுள்ளதனால் தாய் பாலும் என் னிடம் மீதம் இருப்பதை தான் கொடுக்க வேண்டும்"என்று புலம்பிக்கொண்டு இருக்கின்றாள் கணவனை இழந்த அப்பெண்மணி.

நகரம் முழுவதும் ஒரே இருள் படர்ந்த மயான காட்சியாக தென்பட்டு கொண்டிருந்தது. எப்போதும் நடக்கும் அதே பிரச்சனை என்பதால் தங்களுக்கு பாதிப்பு இருக்காது என்று நகரவாசிகள், அரசாங்கம் அறிவித்த அறிவிப்பை தொடர்ந்து இராணுவ வண்டிகளை நோட்ட மிட்டவாறு இருக்கின்றனர். மெல்லிய சத்தத்தோடு வானொலியில் புத்தரின் பொன்மொழிகளும், மனிதர்களின் வாழ்கை முறைமை குறித்தும் பிக்கு ஒருவர் பேட்டி அளித்துக்கொண்டு இருக்கின்றார். நாம் திரிபீடகத்தின் வழியிலே தான் நடந்து செல்கின்றோம். ஆயிரம் சித்தாந் தங்களை புத்த பகவான் கூறியிருந்தாலும் அதில் அதி முக்கியமான ஒன்று தன் கர்மா என்று பேச்சு தொடர குடியுருப்புகளில் இருந்தவர்கள் தூரத்தில் தெரிந்த நெருப்பு ஜுவாலையையும் துப்பாக்கிச்சூட்டுச் சத்தங்களையும் அவதானித்துக் கொண்டிருந்தனர்.

தூக்கத்தில் இருந்து விழித்த குழந்தைக்கு அந்த பெண்மணி மறைவான பகுதியில் ஒளிந்து கொண்டு தாய்ப்பால் கொடுத்து கொண்டிருந்த சமயம் அங்கே திடீரென வந்த இராணுவ வீரன் ஒருவன் அக்குழந்தையை பிடுங்கி ஜீப்பின் அருகே கொண்டு செல்லும் வரை அத்தாய் கெஞ்சினாள்.அவள் ஆடை கிழிந்து அங்கங்கள் தெரிந்தாலும் பரவாயில்லை என்று நினைத்து பின்னாடியே சென்றாள். எதற்கும் அசைந்து கொடுக்காமல் அவ் வீரன் ஜீப்பின் முன் பகுதியில் மேலே வைத்து தாயினை ஓரம் தள்ளிவிட்டு ஏதுமறியா அப் பிஞ்சுக்குழந்தையை வாளால் ரெண்டு துண்டங்களாக வெட்டி விட்டான்.

கடைசி கேள்வியாக, "எதற்கு இவ்வளவு வன்மம்...இதனால் உங்களுக்கு சர்வேதேச அமைப்புகளிடம் இருந்தும் மக்களிடம் இருந்தும் கண்டனங்கள் வருவதை கண்டு தாங்களும் உங்கள் அரசாங்கமும் பயப்படவில்லையா ?" என்று பிரபலமான தொலைக்காட்சி நேர்காணலில் அதிபர் அவர்களுக்கு கேள்வி தொடுக்கப்பட்டது.

"ஆரம்பத்தில் நியாயமான வழியில் தான் பேச்சு வார்த்தையை முன்னெடுத்தோம் பிறகு அரசின் பொறுமையின்மை காரணமாக இவ்வாறான நடவடிக்கை களை எடுக்க வேண்டிய சூழல் ஆயிற்று.. மேலும் நாங்கள் தவறு செய்யவில்லை என்று நம்புகின்றோம்." என்று மிக அமைதியாக சிறிய புன்னகையுடன் கூறிவிடுகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழந்தையை கொன்ற கையோடு பசி பொறுக்காமல், அப்பெண்மணியின் அருகில் வந்து அவளை தொட முயன்று சட்டென்று சக வீரர்கள் அழைக்க அந்த பெண்ணை காலால் முதுகு புறமாக எட்டி உதைத்து விட்டு சென்று விட்டான் அவ்வீரன். சிறிது நேரம் பைத்தியக்காரியாட்டம் புலம்பி கொண்டு கிடந்தவள் சுய நினைவு வந்திட தன் குழந்தையின் பாகங்களை அங்குமிங்குமாக ஓடி கொண்டிருந்த சனங்களின் மத்தியில் இருந்து காப்பாற்றி கையில் எடுத்து தன் மார்போடு அணைத்தவாறு கண்ணீர்விட்டு அழுது கொண்டிருக்கின்றாள். ஊடகம் தன் பணியை செவ்வனவே செய்ய, அயல் நாடுகளில் இருந்து வழமை போல நிவாரண உதவிகள் வந்து இறங்கின. அதிலும் அரசு தனக்கான பங்கினை எடுத்து மீதம் இருந்தவற்றை இவர்களுக்கு கொடுத்தது. அன்றைய பிரச்சனை முடிந்தவாறு உறங்க சென்ற சூரியன் துயில் எழுந்து மெதுவாக அரை வெளிச்சத்தில் பிரகாசிக்க ஆரம்பிக்கிறான். முட்கம்பிகளின் வழியே சனங்கள் தங்களிடம் மீதமிருந்த பொருட்களோடு நடக்கலா னார்கள். ஆனால் இன்னமும் சில கூட்டத்தினர் அவ்விடத்தை விட்டு நகர முடியாமல் இருக்கிறனர். அவர்களுக்கு மத்தியில் தனக்கென இருந்த தன் குழந்தையின் உயிரில்லா பாகங்களோடு அதே புலம்பலோடு அப்பெண்மணி நடக்கலானாள்.

● ● ● ●


நேரம் சரியாக இரவு எட்டு மணியிருக்கும் . அப்போதுதான் அந்த கதறல் சத்தம் கேட்டது. ஒரு பெண்ணின் இதனால்தான் என்று கூற இயலாத கணிப்புகளுக்கு அப்பாற்பட்ட செவிகளைப் பொசுக்கும் கந்தகக்குரல். அது தாங்க முடியாத வலியால் உருவானதாகவும் இருக்கலாம் இல்லை என்றால் எதிர்ப்பாராத இன்பத்தால் உண்டாகிய தாகவும் இருக்கலாம்.

க்ரீன்வூட் எஸ்டேட்டில் அந்த பசிய நிறத்து தேயிலைத் தோட்டத்தின் முடிவில் இருந்த லயங்களுக்கு எதிர்புறத்தில் இருந்த அப்பாயியின் சீமெண்ட் வீட்டில் இருந்துதான் அந்த சத்தம் கேட்டிருக்கிறது. அப்பாயி எழுபது வயதை கடந்த கிழவி. அவளுக்கு மொத்தம் மூன்று பிள்ளைகள். முதலாவது பெரியசாமி என்கிற பெரியண்ணன். கையில் நல்ல காசுப் புழக்கம் மடகஸ்காரில் கூட சொந்த கடை ஒன்று இருக்கிறது. இரண்டாவது நாகம்மா என்கிற சின்னாயி. கல்யாணம் கட்டி இரண்டே மாதங்களில் கணவன் ஓடி விட்டான். இரண்டாம் கல்யாணம் எல்லாம் கட்டவில்லை. பிறந்த வீட்டிலேயே ஒரு ஓரமாய் ஒதுங்கிக் கொண்டாள். மூன்றாவது மாரியம்மா என்கிற சின்னப்பொண்ணு. "வேதக்காரப் பொடியனோடு ஓடிப்போய்விட்டாள்"
இப்படிதான் நேற்றுவரை அவளைச் சொல்லி வந்தார்கள். வீட்டை விட்டு ஓடியதால் சொந்த பந்தங்களோடு தொடர்புகள் எல்லாம் கிட்டத் தட்ட முறிந்து போய் இருந்தது. அவள் எங்கு இருக்கக் கூடும்........ எப்படியும் இருக்கக் கூடும்..... முதலில் இருக்கிறாளா இல்லையா......... யாருக்கு தேவை. அந்த ஓடுகாலியின் நினைவு என்பதாய் அவளை மறந்தே போயிருந்தார்கள் அத்தனை பேரும்.

எல்லோராலும் மறந்திருக்க முடியும் ஆனால் அப்பா யியால்......... பெற்ற தாயால் மகளை மறக்க முடியுமா என்ன............அவளை மட்டும் ஒரே ஒரு தடவை பார்த்து விட்டால் போதும் இதுதான் அப்பாயியின் கடைசி ஆசையாக இருந்தது. அப்பாயியின் அந்த கடைசி ஆசை அத்தனை விரைவில் நிறைவேறிவிடக் கூடும் என அவளேகூட நினைத்திருக்க மாட்டாள். ஆம்............

கிட்டத்தட்ட இருபத்தைந்து வருடங்கள் கழித்து பிறந்த வீட்டுக்கு இன்று வந்தடைந்திருந்தாள். சின்னப்பொண்ணு என்கிற மாரியம்மா ஆ ..... இல்லை இல்லை பெயர் வேறு ஏதோ என்கிறார்கள். கையில் காதில் ஒரு ஈயம் பித்தளை என எதுவும் இல்லை. முடியெல்லாம் நரைத்து போய்..... உடல் மெலிந்து உருக்குலைந்து போய்..... ஆளே மாறிப் போயிருந்தாள்.

"






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சின்னப் பொண்ணு வந்துருக்கா ஆத்தா ………"

பக்கத்தில் இருந்த சின்னாயி அப்பாயியின் காதருகே சென்று இரண்டு மூன்று முறை கத்தினாள். அப்படியும் அவளுக்கு சரியாக ஆளைப் புடிபடவில்லை.

"யாருது பெரியவன் பொஞ்சாதியா……..ஆங்"

"இல்ல ஆத்தா சின்னப்பொண்ணு சின்னப்பொண்ணு வந்துருக்கு உங்கள பாக்கணும்னு" ஆத்தாவுக்கு புரிய வைக்க முனைந்தாள் சின்னாயி.ஆனால் எதுவும் வேலைக்கு ஆவதாய் தெரியவில்லை. "ஆங் ….. ஐயா வருவாரு போய் சத்தம் போடாமா வெளாடுங்க புள்ளைகளா" இல்லாத தன் கணவன் இருப்பதாய் நினைத்து உளறிக் கொண்டிருந்தாள் அவள். வீட்டுக்குள் இதுவெல்லாம் நடந்து கொண்டிருக்க முன் அறையில் உட்கார்ந்து கொண்டிருந்தான் சின்ன பொண்ணுவின் கணவன் எட்வட் தம்பியப்பா. அவனுக்கு நேர் எதிரே அமர்ந்திருந்தான் பல வருடங்களுக்கு முன்னர் அவனை வெட்ட கத்தியும் கையுமாய் சுற்றிக் கொண்டிருந்த அந்த பெரியண்ணன். என்ன பேசுவது என்று தெரியாத காரணத்தால் கொஞ்ச நேரத்திற்கு எதுவும் பேசாமல் இருந்தார்கள் இரண்டு பேரும். ஆனால் எவ்வளவு நேரம் தான் இப்படியே இருப்பது……. நிலவிக் கொண்டிருந்த மௌனத்தை மொத்தமாக ஒரே கேள்வியில் நிறுத்தினான் எட்வட்.

"வீடு எவ்ளோ வரும் ……." சுற்றி நின்ற அத்தனை பேருக்கும் தூக்கி வாரிப் போட்டது.எள்ளும் கொள்ளுமாய் வெடித்துக் கொண்டிருந்த பெரியண்ணன் என்ன செய்வது என தெரியாது விக்கித்து போனார்.தமிழின் அழகான தூய பரிசுத்த வார்த்தைகள் எல்லாம் பெரியண்ணன் மனத்திரையில் ஓடிக் கொண்டிருந்தது.எதை பாவிப்பது …. எதை வேண்டாம் என்பது என முடிவு செய்வதிலேயே தலை சுற்றத் தொடங்கியது அவருக்கு…………. ஆனால் அவர் மனைவிக்கு அதில் குழப்பம் ஏதும் இருக்கவில்லை.

"ஏன் எவளோ வந்தா என்னவாம் வீட்டுக்கு சொந்தக்காரரே சும்மா இருக்காரு ஓடுகாலி நாயுங்க இப்டி முண்டுது ………………. "

"ஒரு மான் மழுவும் சிறு கூன் பிறையும் சடை வார் குழலும் விடை வாகனமும் கொண்ட நாயகனின் குளிர் தேகத்திலே நின்ற நாயகியே இட பாகத்திலே………… " இளையராஜா பாடிக் கொண்டிருந்தார். இப்ப அவரு என்னத்த பெலையா கேட்டுப்புட்டாரு……………" தன் கணவனுக்காக வரிந்துக் கட்டிக் கொண்டு வந்து நின்றாள் சின்னபொண்ணு. அதன் பின் ஆளுக்காள் மோதிக் கொண்டார்கள்…….. வார்த்தைகள் வழியே…….. வாதங்கள் கூடக் கூட வசவுகளும் கூடின. வசவுகள் சும்மா கிடந்த சாபங்களையும் கூட்டி கொண்டு வந்தன.

"டேய் பரதேசி இப்ப சொல்றேன் கேட்டுக்க இது என் அப்பன் சம்பாரிச்சு கட்டுன வீடு இது எந்த மொட்ட பயலுக்கும் சேராது அவளோத்தான்……."

பெரியண்ணன் முடித்துவிட்டார்.

"அதயும் பாத்துருவோமே" என முண்டினான் எட்வர்ட். இவ்வளவும் நடந்து கொண்டிருக்கும் போது யாரோ கதவைத் தட்டினார்கள். அது வேறு யாரும் இல்லை அந்த தோட்டத்தை சேர்ந்த பிக்குதான் என்பதை அறிந்துக் கொண்ட பெரியண்ணன் ஏதாவது பணம் கேட்டு வந்திருக்க கூடும் என்கிற நினைப்பில் ஒரு நூறு ரூபாயை எடுத்துக் கொண்டு வாசல் வரை சென்றார்., "சாமி துமாட்ட மோனவஹறி உதவ்வக் ஒணத……" (உங்களுக்கு எதாவது உதவி வேண்டுமா……….)

அந்த பிக்கு சிரித்தார். அந்த சிரிப்பு சொல்லி விடும் அவர் எந்த வகை பிக்குவென்று. "உதவ்வக் இல்லலா மங் ஆவே நே…………..ஒபதுமாகே மே கேவல் அபே சீனிமாத்தயாகே விஹாரஸ்தான ஸ்வர்ணபூமியட ஐதீලு ஏகய் கவதாத பிடத் வெண்ண யன்னே கியலா அஹன்ன ஆவே……"

(உதவி எதையும் கேட்க நான் வரவில்லை உங்கள் வீடு எமது சீனி மாத்தயாவின் விகாரையின் சுவர்ணபூமிக்கு உட்பட்ட ஒன்று என அறிந்து கொண்டேன். அதுதான் எப்போது வீட்டை விட்டு கிளம்புவதாக உத்தேசம் என கேட்டுச் செல்ல வந்தேன்.) பிக்கு சொல்லிய ஒவ்வொரு வார்த்தையும் பெரியண்ணனின் மூளைக்குள் போய் கொத்துக் கொத்தாய் விஷ ஊசிகளை எல்லைகள் இன்றி ஏற்றின. இந்த முறை சுற்றுவது போல் எல்லாம் இல்லை உண்மையிலேயே தலை சுற்றி அங்கேயே விழுந்து போனார் பெரியண்ணன். அப்போதுதான் அந்த கதறல் சத்தம் ஒலித்தது. பெரியண்ணனின் மனைவிதான் அந்த கதறல் சத்தத்துக்கு சொந்தக்காரி.

"பல கோத்திரங்கள் தர்ம சாஸ்திரங்கள் பணிந்து எத்துவதுன் மணி நேத்திரங்கள் சக்தி பீடமும் நீ …………சக்தி பீடமும் நீ……………….சர்வ மோட்சமும் நீ…………." இப்போது இளையராஜாவும் நிறுத்திவிட்டார். கேளாமலே மோட்சம் கொடுத்த பிக்கு தற்காலிகமாக தன் தெய்வீக சிரிப்போடு விடை பெற்றுக் கொள்ள…… எட்வர்ட்டும் மேரியம்மாவும் குழம்பிப் போய் நின்று கொண்டிருந்தார்கள். அப்போது படுத்து கிடந்த அப்பாயி சின்னாயியிடம் மெல்லிய குரலில் சொன்னாள்…… "இந்தா நிக்கிறானே எட்வட்டு ….. அதான் அந்த வேதக்கார கிளார்க்கு வீட்டு பய…… இவன் சின்னப் பொண்ணு பின்னாடி சுத்துரத சீனிமாத்தியாட்டு பெரிய சாது கண்டுருக்காரு போல ஐயா என்கிட்டே சொல்லி கவலப்பட்டுகிட்டாரு…..அவன பாரு இப்பவே வீட்டுக்குள்ள வந்து நிக்கிறான் விட்டா வீட்ட எழுதிக் கேப்பான் போல…" சின்னாயிக்கு அழுவதா இல்லை சிரிப்பதா எனத் தெரியவில்லை அதனால் அவள் மௌனமாக இருந்து விட்டாள்.

• • • •



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மஞ்சரி சிறுகதைகள்

## ஒரு பார்வை

செ. யோகராசா

மஞ்சரி 21

**பிஞ்சு மனம்- வெலிகம ரிம்ஸா முஹம்மத்**

தாயொருத்திக்கும் அவரது இருபிள்ளைகளுக்கு மிடையிலான உறவு பற்றியெழுந்த, வித்தியாசமான சிறுகதை. விளையாட்டுப் பொம்மைக்காக சமரிடும் இரு பிள்ளைகள். தனது இளமைக் காலத்தில் தான் தனது சகோதரியைப் பழிவாங்கும் சுபாவத்துடன் நடந்துள்ள நிலையில் தன்னிரு பிள்ளைகளும் சண்டை பிடித்தாலும் விரைவில் சமாதனமாகி விடும் நிலை கண்டு மகிழ்ச்சிய டைவதாக இச்சிறுகதை அமைந்துள்ளது. கதைப்பின்னலை வளர்த்து மேலும் செதுக்கியிருப்பின் பாராட்டிற்குரிய சிறு கதையாக இது பரிணமித்திருக்கும்.

**அன்பைத்தேடி- குரு சதாசிவம்**

மருத்துவமனையொன்றில் மருந்து கலப்பவளாக தொழில்புரியும் விதவைத்தாய்க்கும் மகளுக்கும் இடையிலான உறவு பற்றியது இச்சிறுகதை. குழந்தையின் மன உறுதி தாயைச் சிந்திக்கச் செய்கின்றது. அவளிடம் பாசம் கொண்டுள்ள மேலதிகாரியான டாக்டரின் தமையனே அந்த வாகனத்தின் சாரதியாக வருபவர். வைத்தியர் திருமணம் செய்யாதிருப்பதற்கு தமயனின்(திருமணத்தை விரும்பாத) பிடிவாத குணமே காரணம் என அறிந்து தனது குழந்தைக்காக (வைத்தியருக்காகவும்) அவரைத் திருமணம் செய்ய உடன்படுகிறாள். அவளுக்கும் வாகனச் சாரதியான வைத்தியரின் தமயனுக்கும் இடையிலான உரையாடல்களினூடாக நுட்பமான முறையில் மன உணர்வுகளை வெளிப்படுத்தும் கதாசிரியரின் எழுத்தாற்றல் மிகுந்த பாராட்டிற்குரியது.

**வியாகுலத்தாய்- பிசாந்தி ஜெயபாலன்**

மனைவியை இழந்து நிராதரவான நிலையில் வாழ்ந்து இருபிள்ளைகளையும் பாராமரித்து வரும் தந்தை தனது துயர்மிகு வாழ்க்கை முறையை வியாகுலமாதாவிடம் முறையிடுவது காரணமாக துயர் நிலை அகன்று நன்நிலை அடைவதாக எழுதப்பட்டு சமய நம்பிக்கையை வளர்த்தெடுக்கக் கூடியதாக உள்ளது இச்சிறுகதை.

**தொற்று- நக்கீரன் மகள்**

'கொறோனா' வைரஸ் தொற்றும் பின்புலத்தில் எழுந்துள்ள இச்சிறுகதையில் தொற்று என்பது குறியீடாகவுள்ளமை கவனத் திற்குரியது. புகலிட வாழ்க்கைச் சூழலில் எழுந்துள்ள இச்சிறுகதை பலரும் அறிந்த சமூக நடத்தையை-அதாவது உதவித்தொகை பெறுவதற்காக விவாகரத்து செய்வதாகக் கூறி வாழ்ந்து வருகின்ற நிலையில் அதனால் ஏற்படும் சமூகத் தொற்றுப்பற்றி பேச முற்படுகின்றது. கரு பழையதானதெனினும் எழுதும்முறை புதியதாகி இருப்பது மிகுந்த பாராட்டிற்குரியது.

**ஆணிக்கட்டை- கவிக்காவலன்**

இச்சிறுகதையின் களம் புதிது தச்சுத்தொழில் பற்றிய பல தகவல்களைத் தருவது, எனினும் சிறுகதை சொல்லவருவது யாது என்பது பற்றிய பிரக்ஞையில் குழப்பம் இருப்பதனால் தடம்மாறி உடைந்து விட்டது விசனத்திற்குரியது.

**பிள்ளைவரம்-ரஜித்தா**

தனது மனைவியை இழந்துவிட்டநிலையில் மகளின் பாராமரிப்பில் வாழ்கின்ற தந்தையொருவர் பற்றிய இச்சிறுகதை செல்லமாக வளர்க்கப்பட்ட அவரது மகள் தந்தையை கேவலமான முறையில் நடத்தி வந்தமையும் தந்தை மரணித்த நிலையில் கதறும் அவளுக்கு அவளது மகள் 'மரணஅடி'கொடுப்பதுமாகச் செல்கின்ற இச்சிறுகதையும் வித்தியாசமான கருவினாலும் முடிவினாலும் கவனத்திற்குரியதாகின்றது.

**சேவைக்கான பரிசு- கேணிப்பித்தன் ச. அருளானந்தம்**

அர்ப்பணிப்புடன் சேவையாற்றுவோர் அரசியல்வாதிகளால் அடையும் பேரிடர்கள் பற்றி அதிகம் எழுதப்படாத நிலையில் அது பற்றிப் பேசுகின்றது இச்சிறுகதை. கதைப்பின்னல் மேலும் விரிவாக அமைந்திருப்பின் சிறப்பான நிலையை இச்சிறுகதை பெற்றிருக்கும்.

**ஓர் குழந்தையின் அழுகை-செங்கதிரோன்**

குழந்தைகள் அழுவதும் காரணம் புரிந்து கொள்வதற்கு காலம் எடுக்கப்படுவதும் வாழ்வில் காரணமானதொன்று. இப்பின்னணியில் உருவான இச்சிறுகதை திருமண நிகழ்வின் போது குழந்தை ஒன்று அழுவதற்கான காரணம் பற்றி கூறும் நியாயம் -முடிவு-வாசகர் எவராலுமே ஊகிக்க முடியாதது. பாராட்டுக்கள். கரு, அனுபவம் சார்ந்து எழாமல் கற்பனையில் எழுதியிருப்பின் இருமடங்கு பாராட்டுக்கள் உரித்தாகும்.

**தனிமையின் ஏக்கம்-சம்பூரணி**

புகலிடத்தில் வாழ்கின்ற பிள்ளைகளை நினைத்து ஏங்குகின்ற பெற்றோர் பலரை சிறுகதை உலகம் சித்தரித்து வந்துள்ளது. இந்நிலையில் வித்தியாசமான இப்பார்வையில் அல்லவா இச்சிறுகதை எழுந்திருக்கவேண்டும்? அப்படி எழவில்லையே என்பது பெரும்பாலான வாசகர்களது ஏக்கமாக இருக்கிறது.

**விசமமென்னும் அமுது- தியான்**

கருணைக்கொலை சார்ந்துள்ள இச்சிறுகதை வித்தியாசமான களத்தில்-ஒரு தாயின் பார்வையில்- எழுந்திருப்பது குறிப்பிடத்தக்கது. வாசகர் மனதில் தாக்கத்தை வரவைப்பதில் கதாசிரியர் வெற்றிபெற்றுள்ளார்.

**மாயப்பொறி-நடராஜா பார்த்திபன்**

மனச்சபலம் சார்ந்து எழுந்துள்ள இச்சிறுகதை சிறுகதைக்குரிய வடிவமின்மை, தெளிவின்மை, புதுமையின்மை முதலான பல குறைகளைக் கொண்டது.

**இரண்டு ரூபா- மௌனிக்கா**

**நாட்கூலி-சி. ரஞ்சிதா**

முறையே யாழ்ப்பாண மலையகக் குடும்பங்களின் வறுமை பற்றிப் பேசும் இவ்விரு சிறுகதைகளும் கூட, மேற்குறித்த சிறுகதைகளுக்குரிய குறைபாடுகளுக்கு ஏற்புடையனவாகின்றன.

● ● ● ●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுகதை எழுதுவது எப்படி?

இலக்கிய வடிவங்களில் எதையும் எப்படி எழுதுவது என்று அறுதியிட்டுக் கூற முடியாது. எந்த ஒரு இலக்கிய வடிவமும் அந்த எழுத்தாளன் எவ்வளவு தூரம் வாசிக்கிறான் என்பதிலேயே தங்கியுள்ளது என்பதை உறுதியாக நம்புபவன் நான். எழுத்து ஒருவனுக்குக் கொடை அது பிறக்கும் போது அவனுக்குக் கடவுளால் கொடுக்கப் பட்டது என்பதையெல்லாம் நான் நம்புவதேயில்லை. எழுதுபவன் எப்பொழுதும் தனக்கும் தன் சமூகத்திற்கும் நேர்மையாக இருக்கவேண்டும். தன் எழுத்தை அவன் நேசிக்கவேண்டும்.

ஆரம்பத்தில் எழுத ஆரம்பிப்பவர்களுக்கு ஒரு வழிகாட்டியாக இருக்கட்டுமே என்று ஒரு எண்ணத்தில் இத் தொடரினைத் தொடங்கியுள்ளேன்.

## சிறுகதை என்றால் என்ன?

இந்தக் கேள்வி உங்களை ஆச்சரியப்படுத்தலாம். குறிப்பாக எழுத்தாளர்களை இது ஆச்சரியப்படுத்தும்.

சிறுகதை என்றால் சிறிய கதை, ஒரு நாவலைவிட அளவில் சிறியது, இது ஒரு ஆரம்பம், மத்தி, முடிவு என்ற மூன்று பகுதிகளைக் கொண்டது என்றும் ஒரு வாசகனைச் சிறிது நேரம் மகிழவைப்பது என்றும் நீங்கள் எண்ணலாம். இது ஒரு வேலையா மிகச் சுலபம் என்று நீங்கள் எண்ணினால் அது மிகத் தவறு. உண்மையில் இது அவ்வளவு சுலபமல்ல. ஆம் இது நாவலைவிடச் சிறியதுதான். ஒரு நாவலுக்குப் பாவிக்கப்படும் உத்திகள் அமைப்பு எல்லாம் சிறுகதைக்கும் ஒன்றுதான். ஆனால் அவற்றைக் கையாளும் விதம்தான் வேறுபடுகின்றது.

இந்தத் தொடரில் அவற்றை எவ்வாறு வித்தியாசமாகப் பயன்படுத்தப் போகிறோம் என்பதையே கவனிக்கப் போகிறோம். இது ஆரம்ப எழுத்தாளர்களுக்கும் ஏன் வளர்ந்த எழுத்தாளர்களுக்குமே இத் தொடர் பயன்படலாம். என்னைப் பொறுத்தவரையில் சிறுகதை எழுதுவது என்பது நுணுக்கமாக வரையப்படும் ஒரு ஓவியம் போன்றதாகும். இது ஒரு ஓவியத்தின் வரைதலுக்கான எல்லாவிதமான தேவைகளையும் உள்ளடக்கியிருக்கும் ஆனால் அலம்பல் இருக்காது. ஒரு ஓவியன் என்றைக்குமே தேவையற்றவற்றை வரைவதில்லை என்பதை நீங்கள் அறிவீர்கள்.

முதலில் எழுதுவது மிகச் சுலபம் என்ற எண்ணத்தை உங்கள் மனதிலிருந்து எடுத்துவிடுங்கள்.

பல வெற்றிகரமாக நாவல் எழுதிய எழுத்தாளர்கள் சிறுகதை எழுதுவதென்பது மிகக் கடினம் என்று கூறியிருக்கிறார்கள். சமீபத்தில் ஒரு ஆங்கில நாவலாசிரியருடன் தொலைபேசியில் கதைக்கும்போது நீங்கள் சிறுகதை எழுதுவதில்லையா? என்று நான் கேட்டபோது ஐயையோ அது மிகக் கடினமாயிற்றே என்று கூறினார். உண்மையும் அதுதான். அந்தக் கடினத்தை இலகுவாக்குவதுதான் இக்கட்டுரைத் தொடரின் நோக்கமாகும்.

இனி சிறுகதைக்குள் வருவோம்.

## அளவு

ஒரு சிறுகதையின் அளவு என்பது எழுத்தாளன் எடுத்துக் கொள்ளும் கருவின் தன்மையிலேயே தங்கியுள்ளது. அதாவது அந்தக் கருவை அவன் பார்க்கும் அழகியலிலேயே தங்கியுள்ளது. அடுத்து அக் கதையின் தேவையையும் பொறுத்தது. கதையை நீங்கள் ஒரு சஞ்சிகையில் பிரசுரிக்க எழுதினால் அந்தச் சஞ்சிகையின் தேவையைப் பொறுத்ததாக நீங்களும் உங்கள் கதையின் அளவைத் திட்டமிட வேண்டி வரும். ஒரு போட்டிக்காக எழுதுவதாயின் போட்டியாளர்கள் கேட்பதற்கேற்றவிதமாக நீங்கள் எழுத வேண்டிவரும். இவை எதற்கும் இல்லாமல் நீங்கள் உங்கள் விருப்பத்திற்காக எழுதும்போது சொற்களின் அளவை நீங்களே தீர்மானித்துக் கொள்ள வேண்டும். 60 சொற்களிலும் உண்டு 6 சொற்களிலும் கூடச் சிறுகதைகள் உண்டு. கூடுதலான சிறுகதைப்போட்டிகள் 3000த்திற்கும் 5000த்திற்கும் இடைப்பட்ட சொற்களிலேயே கதையைக் கேட்கிறார்கள். சிறுகதை மஞ்சரியில் கதை எழுதுபவர்களை அதன் ஆசிரியர் 5 பக்கங்களுக்கு மேற் படாதவரையில் அனுப்பும்படி கேட்கிறார்.

மிகச் சிறந்த முறையாக உங்களைத் திருப்திப்படுத்தக் கூடிய அளவை நீங்களே தீர்மானித்துக் கொள்ள வேண்டும். அந்த அளவுக்குள் முதலில் கதைகளை எழுதிப் பழக வேண்டும். அந்தப் பயிற்சியில் நீங்கள் உங்ளை பழக்கப்படுத்திக் கொண்ட பின்பு மற்றவர்களால் கேட்கப்படும் அளவுகளுக்குள் நீங்கள் எழுதிய கதைகளைக் கொண்டுவரப் பழக வேண்டும். இப்படி நீங்கள் தொடர்ந்து பயிற்சி செய்து கொண்டு வரும்போது கதையின் அளவு உங்களுக்குப் பிரச்சினையாகவே இருக்காது. இவற்றையெல்லாம் தீர்மானிப்பது கதையின் பாத்திரங்களே.

அடுத்த இதழில் கதையில் வரும் பாத்திரங்களைப் பற்றிக் கதைப்போம். (இன்னும் வரும்...)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எழுத்தாளர் விமர்சகர் பதிப்பாளர்
# ஆ. இரத்தினவேலோனுக்கு கலாபூசணம் விருது



அயராது தன்னை இலக்கியத்திற்கு அர்ப்பணித்த வேலோனுக்கு வழங்கப்பட்ட இக் கலாபூசணம் விருது பொருத்தமானதே. அவரை வாழ்த்தி அவரைப்பற்றி அவரே கூறிய ஒரு முகநூல் பதிவிலிருந்து .......

"நான் பிறந்து வளர்ந்து வாழ்ந்த புலோலியூர் கிராமச்சூழல், எனது ஆர்வம், முயற்சி ஆகியனவற்றுக்கு அப்பால் மாமனுவும் எனது இலக்கியப் பிரவேசத்திற்கு வழிசமைத்திருக்கிறது எனத் தாராளமாகவே கூறலாம்.

இலக்கியமும் இரசனையும் எனக்குக் கருவிலேயே உருக் கொள்வதற்குக் காரணமானவர் எனது தந்தை ஆறுமுகம் அவர்கள்தான். கணிப்பிற்குரிய கவிஞரான அவர் சிறந்த திறனாய்வாளராகவும் திகழ்ந்திருந்தார்.

ஈழத்தின் குறிப்பிடத்தக்க எழுத்தாளர்களுள் ஒருவரான புலோலியூர் க.சதாசிவம் எனது தாய் மாமனார். ஒரே வீட்டில்



அல்லும் பகலும் இவர்களுடன் வாழ்ந்த இளமைக்கால வாழ்க்கை, இயல்பாகவே இலக்கியம் என்னுடன் ஒன்றிவிடக் காரணங்களாயிற்று.

அத்துடன் ஈழத்துச் சிறுகதை முன்னோடிகளில் ஒருவரான மறுமலர்ச்சிக் காலத்தின் பெரியதும்பி அவர்களும் புலோலியூர் என்பதை தம் பெயர்களோடு இணைத்துக் கொண்ட எழுத்தாளர்களான க.தம்பையா, கெ.கந்தசாமி ஆகியோர் எனது நெருங்கிய உறவினர்களும் அயலவர்களுமாவர். அதேபோல் கல்லூரிப் பருவமும் எனது இலக்கிய உணர்விற்கு உரமூட்டியது எனலாம். பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியில் பயின்ற 1977 க.பொ.த உயர்தரக் குழு தரமான இலக்கியகர்த்தாக்களை ஈழத்திற்குத் தந்திருக்கின்றது என்றால் அது மிகையாகாது. முதலாவது ஒரு சிறுகதை எழுத்தாளனாக என்னை உருவாக்கும் முயற்சி, மற்றையது கிராமத்து நண்பர்களின் கூட்டு முயற்சியில் பத்திரிகையாள னாக, அதாவது ஒரு கையெழுத்துப் பிரதி சஞ்சிகை ஆசிரிய னாக ஈடுபாடு காட்டியமை.

"புத்தொளி" என்ற பெயரில் மாதமொருமுறை வெளிக்கொண ரப்பட்ட அக் கையெழுத்துப் பிரதியின் ஆயுள் மிகச் சொற்ப மாகவே இருந்தது.

அதன் பின்னர் முற்றுமுழுதாக எனது பங்களிப்பு சிறுகதைத் துறையிலேயே இருந்தது. ஒரே காலகட்டத்தில் நான்கு சிறுகதைகளை கல்லூரியில் பாவித்த "ஒற்றை றூல்" அப்பியாசப் புத்தகமொன்றில் எழுதியவாறே புலோலியூர் தம்பையாவை அணுகினேன். கதைகளைப் படித்த அவர், அவற்றுள் ஒன்றைத் தெரிவு செய்து சில திருத்தங்களைக் கூறி அதை மீள எழுதித் தன்னிடம் தரும்படி கூறவே அவ்வாறே செய்தும் கொடுத்தேன். நம்பவே முடியாது, ஒரு சில வாரங்களின் பின்னர் இன்னும் திருத்தமாகச் சொல்வதெனில் மாதமொன்று முடியுமுன்பே "புரளும் அத்தியாயம்" என்னும் அக்கதை தினகரன் வாரமஞ்சரியில் பிரசுரமாகியிருந்தது. முதன்முதலாக அச்சில் எனது ஆக்கத்தினைப் பார்த்த அடுத்த சில நிமிடங்கள் "புலோலியூர் மண்ணினை" விட்டு விண்ணில் மிதந்த வண்ணம் இருந்தேன்.1977 இல் எனது பத்தொன்பதாவது வயதில் இது நிகழ்ந்தது. தனதூரில் அடுத்த தலைமுறையில் ஓர் எழுத்தாளன் உருவாக தம்பையா எடுத்த முயற்சி என்னைப் பொறுத்தமட்டி ல் எனது வாழ்வின் மிக முக்கியமானதொரு திருப்புமுனை என்றே கருதுகிறேன்.

இந்த வகையில் இக்காலகட்டங்களில் புலோலியூர் கந்தசாமியும் என்னைத் தட்டிக் கொடுத்ததை இவ்விடத்தே நினைவில் கொள்ளாவிடின் அவருக்கு நான் துரோகமிழைத்தவனாவேன். எனது கல்வி முன்னேற்றத்தையே இலக்காகக் கொண்டதனால் அந்நாட்களில் நான் இலக்கியத்தில் ஈடுபடுவதனை மாமனார் புலோலியூர் சதாசிவம் அதிகம் உற்சாகப்படுத்தவில்லை. நாளடைவில் எழுத்தின் மீதான என் அதீத ஆர்வம் கண்டு கலையம்சங்களால் என் படைப்புக்களை மெருகேற்றப் பயிற்சி தந்ததோடன்றி அவ்வப்போது வெளிவரும் எனது ஆக்கங்களை அழகாக, ஆழமாக விமர்சித்துத் தனக்கென ஓர் வாரிசாக என்னை அவர் உருவாக்கிக் கொண்டார் என்பதை இங்கு கூறியே ஆக வேண்டும்."

இவருக்கு சிறுகதை மஞ்சரியின் வாழ்த்துகள்

●●●

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



Luxmi
Education
Centre

Contact us now to secure your spot and give your child the best chance to succeed and secure their future

## WHAT WE OFFER

YEARS1-3
MATHS, ENGLISH
YEARS4-5(11PLUS)
MATHS, ENGLISH, VERBAL REASONING, NON VERBAL REASONING
YEAR6
MATHS, ENGLISH, SCIENCE
YEAR7-9
MATHS, ENGLISH, PHYSICS, CHEMISTRY, BIOLOGY
YEAR10-13
MATHS, PHYSICS, CHEMISTRY, BIOLOGY

## WHY CHOOSE US?

### BESPOKE RESOURCES

We use our own teaching material created in house for Maths, English and Science





### EXPERIENCED TEACHERS

All our tutors are experienced undergraduates or currently teaching in schools

### INDIVIDUAL ATTENTION

We ensure students are taught all topics in its entirety. We ensure no one is left with a doubt.



Contact Details:

Tel: 0208 573 0368
Mob: 07852810285
website@Leconline.co.uk
www.leconline.co.uk

Luxmi Education Centre - 101A Blyth Road, Hayes, UB3 1DB, UK

Design by LEC Digital Design

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org